# திருக்கோயில்

பிப்ரவரி 1975
ரூ. 1

2249



சேலம் அருள்திரு சுகவனேசுவரர் திருக்கோயில் கிளைக்கோயிலான அருள்திரு காசிவிசுவநாதர் சுவாமி திருக்கோயிலில் 1-11-74 ஆம் நாள் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் திருமண மண்டபத்திற்கு கால்கோள் விழாவை நடத்திவைத்தார்கள்.

(102)
R.R.N: 1061 | 516/735

**முகப்பு :**

இராமேசுவரம் அக்கினி தீர்த்தத்தில் (கடலில்), பக்தர்கள் நீராடி வழிபடும் காட்சி.

# திருக்கோயில்

மாலை 17 | ஆனந்த, தை — பிப்ரவரி, 1975 | மணி 5

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

* 'திருக்கோயில்' திங்கள் இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விருப்பமுள்ளவர்கள் ''திரு. ஆணையர், அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்த்து கொள்ளலாம்.

* அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

* இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

* எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

**ஆண்டுச் சந்தா ரூ. 12-00 தனி இதழ். ரூ 1-00**

## பொருளடக்கம்

1. பொங்கல் விழாத்தலைமைக் கவிதைச்சரம்
—மாண்புமிகு முதல்வர் கலைஞர்
2. மணிவாசகரும் பக்திநெறியும்
—ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
3. திருவுத்தரகோசமங்கையும் சங்ககால ஊர்களும்.
—வித்வான் முகவை உ. வேணுகோபால் பிள்ளை
4. சமர்த்தகுரு இராமதாசர்
—கவியோகி சுத்தானந்த பாரதியார்
5. இறைவனை உள்ளத்தே வைப்போம்
—கே. எஸ். ஜெகன்னாதன்
6. வள்ளலாரும் காந்தியடிகளும்
—தவத்திரு ஊரன் அடிகள்
7. வேதம் ஊன்றும் பலா
—நீதிபதி. எஸ். மகராஜன்
8. வரலாற்றுச் சிறப்புமிக்க சிவபுரிக் கல்வெட்டுக்கள்
—சிங்கம்புணரி சீ. இலட்சுமணன்
9. கண்ணபிரானும் ததிபாண்டனும்
—தேவி இராமாநுசதாசர்
10. பாண்டிமாதேவி
—மீனாட்சி மைந்தன்
11. திருச்செந்தூர்
—திரு. ம. அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.,
12. எம்பெருமானார் தரிசனம்
—திரு. எதிராஜ பூபதி நாயுடு

ஆசிரியர்: ந.ரா.முருகவேள் M.A., M.O.L.
துணை ஆசிரியர்: கே.எஸ்.ஜெகன்னாதன்

''என் கடன் பணிசெய்து கிடப்பதே''

# பொங்கல் விழாத் தலைமைக் கவிதைச் சரம்

வணக்கம்.
பேரன்பு கொண்டோரே, பெரியோரே,
பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
ஒன்றெனக் கருதும் நல் இளம் செல்வங்காள்!
ஒரு வயிற்றில் பிறப்பதற்கு அவ்வயிற்றில் இடமில்லே, அதனுலே
ஒரு கோடி தாய் வயிற்றில் பிறந்திட்ட உடன்பிறப்புத் தமிழர்களே!
அனைவர்க்கும் வழங்குகிறேன்
பொங்கற் புது நாள் வாழ்த்துக்கள்! ஏற்றிடுவீர்.

வண்ணத் தமிழ் எடுத்துக், கவிதை
எண்ணச் சித்திரங்கள் தீட்டுதற்கு
வந்துள்ள புலவர்களே வணக்கம்!

பொங்கல் எனும் தலைப்பினிலே கவிபாட, நீவிர்
பொங்கித் தான் வந்திருப்பீர், நானறிவேன்!
உணவு பொங்கித்தான் வந்திருப்பீர் என்றேனு?
உணர்வு பொங்கித்தான் வந்திருப்பீர் என்கின்றேன். உண்மைதானே?

''ஞாயிறு போற்றுதும்
ஞாயிறு போற்றுதும்''
சிலம்பொலி கேட்குது!
சிந்தையில் இனிக்குது!
ஆயிரம் நிலவுகள்! ஆயிரம் மாதர்கள்!
ஆயிரம் கதிரவர்! ஆயிரம் ஆடவர்!
ஞாயிறு போற்றினர்!
ஞாயிறு போற்றினர்!
ஆயிரம்—கோடியாய் ஆயினர் தமிழர்!
பாயிரம் பலப்பல பாடினர் தமிழர்!
ஞாயிறு போற்றியே கூடினர் பொங்கலில்!
ஞாயிறு போற்றியே ஆடினர் பொங்கலில்!
மாவிலே தோரணம் மஞ்சள் வாழை
கோயிலின் முரசம் கோலம் கண்டனர்!
பொங்கலோ பொங்கல்!
பொங்கலோ பொங்கல்!

குறிஞ்சி, முல்லே, நெய்தல், மருதம், பாலேநிலமெனப்
பிரிந்து வாழினும், தமிழர் பண்பைப் புரிந்து வாழ்ந்தனர்!
''கல்தோன்றி மண் தோன்ருக் காலத்து
முன்தோன்றி மூத்தகுடி'' எனினும்,
காடு கொன்று நாடாக்கக்
குளம் தொட்டு வளம் பெருக்கக் கற்றனர் அன்னுர்!

வில்தோன்றும் தோள்களிலே—அது
வீரம் காட்டும்!
நெல் தோன்றும் வயல்களிலே—அது
வேளாண் திறத்தைக் காட்டும்!
சொல் தோன்றும் புதிது புதிதாக—அது
மொழியின் வளத்தைக் காட்டும்!
எழுத்து, சொல் இரண்டேயன்றிப்
பழுத்த நல் தொல்காப்பியன்—தமிழர்தம்
செழிப்பு மிகு வாழ்வுக்கும்
தொகுத்தளித்தான் இலக்கண நூல்!



மாண்புமிகு
டாக்டர். கலைஞர்
முதல்வர்

58600

கொய்யாக்கனித் தமிழால்—குறள்
நெய்தான் உலகுக்கு வள்ளுவனும்!
பெய்யா மழை பெய்தது போல், மகிழ்ச்சி கொள்வோம்—அவன்
பொய்யா மொழிக் கவி கேட்டு!

சிலம்பும், வளையும், சீர்மேகலையும்,
சிந்தாமணியொடு குண்டலகேசியும்,
அன்னைத் தமிழின்அணிகளாய் ஆயின!
அந்நாள் புலவர் ஆற்றிய பணிகளால்!

எத்துணை நூல்கள்! எத்துணைப் புலவர்!
கற்றுணர் மக்கள் உற்றுணர் பெட்டகம்
பெற்று, நம் தமிழர் வாழ்ந்தனர் அந்நாள்!
பழந்தமிழர் பெரு நூல்கள் நினைத்தவாறு
படுக்கையிலே சாய்ந்தேன் ஓர் நாள்
பக்கமது நெருக்கமாகப் படுத்துக் கொண்டு
வெட்கமது ஒரு சிறிதும் இல்லாமல்
ஒருத்தி தழுவிக் கொண்டாள்!
அவளை
அள்ளி அணைப்பதற்கு நான் முயலவில்லை என்றாலும்,
தள்ளி விட மனமில்லை; தழுவட்டும் என்றிருந்தேன்!

அதன்பின்னர் மற்றொருத்தி வந்தாள்—அவள்
வானவில் சதிராட்டக்காரி
வானம்பாடியென இசைகூட்டும் மாயக்காரி!
என்ன இது? இரு மங்கை—ஒருபடுக்கை—
எனக் கேட்பீர்! பொறுத்திடுக,
முதலில் வந்தவள் பேர் தூக்கம்;
மற்றொருத்தி கனவு மங்கை

அந்தக் கனவினிலே நான் கண்ட காட்சியெலாம்
தமிழ்க்காட்சி! தமிழர் மாட்சி!

மன்றமொன்றில் இசைவாணன் கீத மழை பொழிகின்றான்!
மக்கள்எலாம் மதுக்குடித்த வண்டுபோல மயங்குகின்றார்!
மங்கலமாய் இசை நிகழ்ச்சி முடியும் போழ்து
மக்கள் சிலர் ஆர்வமுடன் மேலும் ''பத்துப்பாட்டு'' பாடுகஎன்றார்!
மலைத்துவிட்ட இசைவாணன், கனைத்துக்கொண்டு
''பாடுகின்றேன், மேற்கொண்டு
என்ன தொகை தருவீர்'' என்றான்.
வெடுக்கென ஓர் புலவன் எழுந்து நின்று விடையிறுத்தான்
''எட்டுத் தொகை'' தருவதாக!

இசைவாணன் புரிந்து கொண்டு, ''இஃதென்ன நியாயம்?
எந்தன் பத்துப்பாட்டுக்கு எட்டுத்தொகையா?
அஃதெனக்குக் குறுந்தொகை'' என்று சொன்னான்.
''ஓகோ! ஐங்குறு நூறு வேண்டுமோ!'' எனக் கடிந்தார் புலவர்!
''நூறு வேண்டேன்—அதனைத் தீண்டேன், தீண்டேன்;
நானூறு தருவீரோ புலவரேறே!—அதுவும்
அகத்தில் நானூறு—புறத்தில் நானூறு'' என்று வளைத்தனன் இசையில் வல்லவன்!

புறத்தில் நானூறு, அகத்தில் நானூறு
புரிந்து கொண்டார் புலவர் பெருமகன்!
''புறநானூறு—கையில் நானூறு
அகநானூறு—கறுப்பில் நானூறு
பொல்லாச் செயல் அது! பொல்லார் செயல் அது!
வருமான வரிதனை ஏய்ப்போர் செயல் அது!
ஏய்த்தபின் மீள எட்டப்பனாய் மாறுவோர் செயல் அது!
காய்த்திருக்கும் மரம் வெட்டும் கோடரிக் காம்பின் செயல் அது—
அதனாலே—

பாட்டுக்குத் தொகை கேட்கும் பேச்சுதனை விட்டொழிப்பீர்!
பசும்பால் தருவோம் தொண்டைக்கு, தேவையெனில்
முப்பாலே தருவோம் பாடிடுக'' என்று சொன்னர்.
''முப்பால் தருவதாக மொழிந்திட்ட புலவரய்யா! . . . அதிலும்
பொருட்பால் ஒன்றுக்கே இனி என் தொண்டை பேசும்'' என்று இசைவாணன்
எழுந்து விட்டான்.

நீண்ட துயில் கலைந்தெழுந்தேன்
நெடுநல் வாடை பட்ட தாலே!
கனவில் நினைப்பதெல்லாம்—நெஞ்சில்
கரும்பாக இனித்ததம்மா!

தமிழ் நினைத்து, இதயத்தைத்
தமிழால் நனைத்து
இமிழ் கடலில் ஆதிக்கம் செலுத்தியவர் நம் தமிழர்!,
உமிழ் நீரை வாயில் தேக்கி
ஊத்தைப் பல் துலக்கிவிட்டு—மீண்டும்
உடலுக்குள் கொப்பளித்து விழுங்குதல் போல்
அமிழ்தான இனப்பண்பு, கலை மாண்பு, இலக்கியங்கள் மாய்ப்பதற்கு,

தமிழர்களே ஒப்பிவிட்டார், கெட்ட
உமிழ் நீரை உடலுக்குள் துப்பிவிட்டார்!

அழுக்குச் சேர்ந்த குடலை வெளுத்திட வேண்டும்;
அதற்கு மருந்தெனும் நல்ல சலவைத் தொழிலாளி வேண்டும்;
முழுக்குப் போடுவதால் உடலில் புறந்தூய்மை ஆகும்.
உள் தூய்மை ஔடதத்தால்—
உளத் தூய்மை வாய்மையாலே ஆகும்
இந்த வாய்மைக்கு வழிவைத்து,
வைதீகக் கோட்டைக்கு வெடி வைத்து,
அறுபது ஆண்டுகள் அஞ்சாது போரிட்டார், நம்
அண்ணவின் தலைவர் பெரியார்—
அவர் போட்ட அடுப்பிலேதான்
இன்று பொங்கல் பொங்குது,
போலிகள் மங்குது,
பொய்ம்மைகள் எரியுது!

பத்துத் தலையுடையாள், இருபது கையுடையாள்,
கத்து கடல் வாயுடையாள், கண்கள் பல நூறுடையாள்,
மாட்டு முகமுடையாள், மனித உடலுடையாள்,
மகர சங்கராந்தியெனும் பேருடையாள்,
மலைபோல மூக்குடையாள்,
என எழுதி ஏமாற்றப் புனைந்த கதை,
இடிமுன்னே பாம்புபோல் மறைந்தொழிந்து
ஈரோட்டு முழக்கத்தால் மாய்ந்த தன்றே!
அதைத் தொடர்ந்து நம் அண்ண,
இனஉணர்வுத் திருநாளாய்ப் பொங்கல் கண்டார்
ஏர்உழவர் பெருநாளாய்ப் பொங்கல் கண்டார்!

காளையர் ஏறுதழுவுதல் காதல் மகளிர்க்காக,
களத்திலே விழுப்புண் ஏற்றல் காதலி மகிழ்வதற்காக,
பாமரர் மனதிலும் இந்தப் பழம்பெரு வீரம்
பதியச் செய்தவர் நாமே!
பஞ்சாங்கச் சங்கராந்தியைப்
பழங்குப்பையுடன் சேர்த்து வீசியவர் நாமே!

இராவணனைத் தென்னவர் தம் தலைவன் என்றும்,
இராமாயணம் ஆரிய திராவிடப் போர்தான் என்றும்,
இளஞ்சிறுமி இந்திராவுக்கு எழுதியவர் யார் என்றல்,
இந்தியாவின் பிரதமராய் இருந்திட்ட நேரு பிரான்!

அதுபோல நரகன் எனும் தமிழ்வேந்தைக்
கொன்றிட்ட நாள்தானே தீபாவளி—

இதுபோல மயக்கம் தரும் தமிழ் எதிர்ப்புப் புராணங்கட்கு எதற்காகப்
பண்டிகைகள்?
வீட்டைக் கொளுத்த வந்த தீவட்டிக்குத் திருவிழாவா?
விழிநோக்கிப் பாய்ந்துவந்த வேலுக்குப் பூச்சரமா?
விஷப்பாம்புக்குப் பொன்னுடை—கொல்லும்
வெடிகுண்டுக்குப் பாராட்டுக் கூட்டம்!
பகுத்தறிவுக் கொவ்வாத இதனை எல்லாம்,
படித்தவரே செய்கின்றார்—பகல் வெளிச்சத்தில்
தடுக்கி விழல் குருடர்களின் செயலாகும், அல்லால்
குடியர்களின் செயலாகும்.

இந்த நாளில்
எரிகின்ற பொங்கல் அடுப்பில்
எரியட்டும் போலிப் பழமை—பெண்கள்
இடுகின்ற கோலமெல்லாம்—தமிழின்
எழிற்கோலமாக மிளிரட்டும்!
இனிக்கின்ற கருப்பஞ்சாறு—நம்
இலக்கியத்தின் சுவையாகத் திகழட்டும்!

உதிக்கின்ற சூரியனின்
ஒளிக்கதிர் தாவட்டும்
இருட்டு மண்டபத்தில்!—ஆங்கு
சுருட்டுத் தொழில் புரிவோர் தொலையட்டும்!
சுருட்டும் தொழில் புரிவோர் தொலையட்டும்!
உருட்டுகின்றார் பானை சட்டி
ஒரிருவர் அரசியலில்—அவர்களும்
திருட்டு வெளிப்பட்டதெனத் திசைமாறி ஓடட்டும்;
கிழக்கு வெளுக்கட்டும்—அரசியல்
கிழவிகளின் குமரி வேடம் அம்பலமாய் ஆகட்டும்;
அறிவு பரவட்டும்—தெளிவு பிறக்கட்டும்
துணிவு தோன்றட்டும், துரோகம் வீழட்டும்.

களிப்புமிகு பொங்கல் விழாக்கொண்டாடும் தமிழர்களே,
கழிப்பவை கழித்து மனைகள் திருத்தி அமைத்தீரே—
கழிப்பவை கழித்து மனதையும் திருத்தி அமைத்தீரா?—உலகம்
பழிப்பது ஒழித்து உள்ள உறுதியும் கொண்டீரா?
பால்பொங்கிப் பானை மீது வழிந்ததை நீர் கண்டீரே—அந்தப்
பால்போலும் தூய்மை மிகு பண்புதனைக் கொண்டீரா?
கரும்புதனை மென்று நாவில் சுவை சேர்த்து நின்றீரே—அந்தக்
கரும்பனைய தமிழ் காக்கப்
படைகூட்டிச் சென்றீரா?
பகைவீழ்த்தி வென்றீரா?
மஞ்சள், வாழை, இஞ்சியென்று
படையலிட்டு மகிழ்ந்தீரே—
மஞ்சள் முக மங்கையரை மதிப்பதற்குக் கற்றீரா?—
போகட்டும்.
இந்தப் பொங்கல் முதல் புதுக்கணக்குப் போட்டிடுவீர்!
வங்கக் கடலோரம் உறங்குகின்ற நம் அண்ணன்
'தங்கம்நிகர் பேருள்ளம் அனைவர்க்கும்வேண்டும்' எனத் தவமிருந்தார்!
பங்கம் ஒன்றும் வாராமல் அவர் கொள்கை வென்றிடவே,
சிங்கமென ஆர்த்தெழுவோம்—
செழும் பொங்கல் வாழ்த்திடுவோம்!

---

[பொங்கற் புதுநாள் விழாவில், நம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், சொற்சுவை பொருட்சுவை கற்பனைச்சுவை நலங்கள் பொதுளப் பாடிய, இந்தச் சிறந்த இனிய ''பொங்கல் விழாத் தலைமைக் கவிதைச்சரம்'', இங்குப் பெரிதும் போற்றி எடுத்து வெளியிடப் பெறுகின்றது. *(14-1-75)*.

—ஆசிரியர்]

# மணிவாசகரும் பக்திநெறியும்

ந.ரா. முருகவேள். M.A., M.O.L.

## முன்னுரை

மாணிக்கவாசகர், தாம் முத்தி நெறி அறியாத மூடர்களுடன் முயல்பவராக இருந்தனர் என்றும், அந்நிலையில் சிவபெருமான் தமக்குப் பக்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம், சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி அருள் புரிந்தனர் என்றும், தமது திருவாசகத்தில் அச்சோப் பதிகத்தின் முதற் பாடலில் குறிப்பிடுகின்றார். அதனால் அவருக்குச் சிவபெருமான் பக்தி நெறியினை அறிவித்தருளினார் என்பது புலனாகின்றது.

## மணிவாசகர்

சிவபெருமானால் தமக்கு அறிவுறுத்தப் பெற்ற பக்தி நெறியினை, மாணிக்கவாசகப் பெருமான், தாம் அருளிச் செய்த திருவாசகம் —திருக்கோவையார் என்னும் இரு நூல்களாலும், உலகில் பயிராக்கிப் பரவச்செய்து வளர்த்தருளினார். இவ்வுண்மையினைத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த சிறந்த பெருங் கவிஞராகிய கச்சியப்ப முனிவர், தமது பாடல் ஒன்றில், அழகுற உருவகம் செய்து உணர்த்தியருளுகின்றார். ''உள்ளமாகிய வயலை, பக்தி என்னும் ஏர்கொண்டு உழுது, ஞானம் என்னும் விதையினை விதைத்து, சிரத்தை என்னும் நீரைப் பாய்ச்சி, கள்ள ஐம்பொறிக் குறும்புகளாகிய களைகளை நீக்கி, ஆனந்தம் என்னும் நெற்கதிரை விளைவித்து, அதனை உலகமெலாம் பெற்று உய்யும்படி வலிந்தழைத்து வழங்குகின்ற, பக்தி ஏர் உழவர் ஆகிய மாணிக்கவாசகரின் திருவடிகளை நினைத்து வழிபடுவோம்'' என்று, அவர் கவின் பெருகப் பாடுகின்றார்.

''உள்ளம் ஆகிய புலத்தினைப்
பக்திஏர் உழுது,
தெள்ளும் ஞானவித் துறுத்து, நற்
சிரத்தைநீர் பாய்ச்சிக்,
கள்ள வான்பொறிக் களைகள்கட்டு,
ஆனந்தம் விளைத்துக்,
கொள்ளை கூறும் மாணிக்க
வாசகன் கழல்குறிப்பாம்''

## சிவபெருமான்

இவ்வினிய சிறந்த கவிதையினால், பக்தி நெறியாகிய பயிர் மாணிக்கவாசகரால், இவ்வுலகில் வளர்க்கப் பெற்றது என்னும் உண்மை தெற்றெனப் புலனாதல் காணலாம். உலகில் பக்தி நெறிப் பயிர் பரவி வளரும்படி செய்தருளிய மாணிக்கவாசகர், அத்தகைய பக்தி நெறிப் பயிரினைத் தம் உள்ளத்தில் வளர்த்தருளியவன் சிவபெருமானே என்பதனை,

''நீக்கி முன்எனைத் தன்னொடு
நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன
சொற்செய்து நுகமின்றி விளாக் கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத்
துகள்அறுத்து எழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயம் கண்டாமே''

எனவரும் பாடலில் குறிப்பிடுகின்றார். ''சிவபெருமான் தன்னிடமிருந்து என்னை நீக்கினான். என்னை ஓர் உடலில் புகுவித்து, இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தான். இவ்வுலகில் யான் மயங்கி உழன்றுகொண்டிருந்தபோது, குருவாக வந்து என்னை ஆட்கொண்டு திருவருள் நோக்கம் புரிந்தருளினான்; நுண்ணியனவும் நொடிபோல்வனவுமாகிய அருளுரைகளைக் கூறித் தெளிவித்தான்; என்னுடைய உள்ளமாகிய வயலில், நுகம் (ஏர்க்கருவி) இல்லாமலே, உழவுத் தொழிலைச் செய்து பண்படுத்தினான். பொய்ம்மையாகிய களைகளை நீக்கிக் குற்றங்களைப் போக்கினான். பேரொளி மிகுந்த சிவஞானம் ஆகிய சிறந்த பயிரை விளைவித்தருளினான்'' என்பது மேற்குறித்த பாடலின் கருத்து.

## பக்தி நெறியும், மணிவாசகரும்

இங்ஙனம் சிவபெருமான், தம் உள்ளத்தில் 'நுகம் இன்றி விளாக்கைத்து' விதைத்து விளைத்தருளிய பக்தி நெறியினை வளர்த்துப் பரப்பியருளிய திறனில், மாணிக்கவாசகர் தலைசிறந்து திகழ்கின்றார். அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலிய சான்றோர்கள், பிறர் பலரும் கூட, பக்தி நெறியினைப் பரப்பி வளர்த்தருளியுள்ளனர் என்பது உண்மையேயாயினும், ஒரு தோட்டத்தில் பலவகை மரஞ் செடி கொடிகள் இருப்பினும், பன்மை அல்லது தலைமை என்னும் காரணம் பற்றி, அதனைக் ''கமுகந் தோட்டம்'' என விதந்து கூறி வழங்கும் முறையில், பக்தி நெறிக்குரிய சான்றோராக, மாணிக்கவாசகரையே பெரியோர்கள் பலரும் புகழ்ந்து போற்றுவர். அதற்குக் காரணம், பக்தி நெறியின் பலவகை அநுபவங்களையும் மெய்ப்பாடுகளையும், மாணிக்கவாசகர் மிகப் பெரும் சிறப்பாக விளக்கியருளியிருத்தலே யாகும் எனலாம். தொல்காப்பியர், தாம் இயற்றியருளிய விழுமிய முழு முதல் இலக்கணப் பழம்பெரும் நூலாகிய தொல்காப்பியத்தின், மெய்ப்பாட்டியல் என்

னும் பகுதியின்கண், நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி உவகை என்னும் எண்வகை மெய்ப்பாடுகளையே குறித்துப் போந்தருளினர். திருவள்ளுவர், நக்கீரர் போன்ற தெய்வப் புலமைச் சான்றோர் களும், இறைவனின் அருமை பெருமைகளை விளக்கிப் போந்தனரேயன்றி, அவ்விறைவன் பால் செலுத்தும் அன்பாகிய பக்தியுணர்வின் அநுபவங்களையும், மெய்ப்பாடுகளையும் விரித்து விளக்கி உரைத்துப் போந்திலர்.

## பக்தியின் மெய்ப்பாடுகள்

தமிழ் மொழியானது, இயல் இசை நாடகம் என்னும் முத்திறம் அமைந்ததாக முன்னரே விளங்கிற்றாயினும், அம் மூவகைக் கூறும் அழகியதாக அமையச் சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்க் காப்பியத்தினை இயற்றியருளியபெருமை இளங்கோவடிகளுக்கே உரியதாதல் போலவும்; சைவ சித்தாந்தம் என்னும் தனிப் பெரும் தத்துவக் கொள்கை, பண்டே தமிழகத்தில் நின்று நிலவி வந்ததாயினும், அதனை ஒருசேரத் திரட்டி உருவாக்கி ஒழுங்குபடுத்திச் ''சிவஞான போதம்'' என்னும் நூல் வடிவில் கொடுத்தருளிய திறன், ஆசிரியர் மெய்கண்டார் பெருமானுக்கே உரியதாதல் போலவும்; நாடும் நாட்டுப் பற்றும் முன்னரே இருந்து வந்தனவாயினும், நாட்டுப் பற்றுணர்ச்சியை வற்புறுத்தி வளர்க்கும் நாட்டியற் பாடல்களை இயற்றி யளித்த பெருமை, பாரதியார்க்கே உரியதாதல் போலவும்; பக்தியுணர்வு அனுபவங்களும் மெய்ப்பாடுகளும் பண்டைச் சான்றோர்கள் பலரால் விளக்கப் பெற்றிருப்பினும், அத்துறையில் தனிப் பெருஞ் சிறப்புப் பெற்றவராகத் திகழ்பவர் மாணிக்கவாசகரேயாவர் எனலாம்.

''மெய்தான் அரும்பி, விதிர்விதிர்த்து,உன்
விரையாற் கழற்கென்
கைதான் தலைவைத்துக், கண்ணீர்
ததும்பி, வெதும்பி, உள்ளம்
பொய்தான் தவிர்ந்து, உன்னைப்
போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன்; உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே''

எனவரும் திருவாசகப் பாடல்கள் பலவும், பக்தி யுணர்வின் மெய்ப்பாடுகளையும் அநுபவத் திறன்களையும் வெளியிட்டுணர்த்தி நிற்றல் காணலாம்.

## ஞானமும் பக்தியும்

சைவ சித்தாந்தத்தில் கூறப்பெறும் சாதன நெறிகள் நான்கு. அவையாவன : சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. சரியை திருஞானசம்பந்தராலும், கிரியை திருநாவுக்கரசராலும், யோகம் சுந்தரராலும், ஞானம் மாணிக்கவாசகராலும், உலக மக்களுக்கு உணர்த்தப் பெற்றன என நூல்கள் நுவலும். இவ்வாற்றால் மாணிக்கவாசகர் ஞானம் என்னும் சாதன நெறியை நன்கு விளக்கியருளிய சான்றோராதல் தெளிவாம். ஞானத்தின் முதிர்ச்சியே பக்தியாகத் தழைக்கின்றது. ''ஞானம் கனிந்த நலம்'' பக்தி எனப்படும். ''ஞானத்தின் பெருவிளைவே பக்தி'' (பக்திச்ச ஜ்ஞான விசேஷம்) என்பர் பெரியோர். ''ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார்'' என்பது பெரிய புராணம். இறைவன்பால் அன்பு ஆகிய பக்தியில்லாமல், வெறும் ஞானம் மட்டும் இருந்து பயனில்லை.

''பகவத் சம்பந்தம் இன்றியிலே, ஞானபக்தி
வைராக்கியங்கள் உண்டானாலும், அபாயம் இறே
பலிப்பது!
பௌத்தனுக்கும் ஞானபக்தி வைராக்கியங்கள்
உண்டிறே''

என்பது திருப்பாவை விரிவுரை. ''மயர்வற மதிநலம் அருளினன் யவன் அவன்'' என வரும் திருவாய்மொழியில், 'மதிநலம்' என்பதற்கு 'மதியாகிய நலம்' அல்லது 'மதியினது நலம்' எனப் பொருள் கொள்ளாமல், 'மதியும்நலமும்' எனப் பொருள் விரித்து, 'நலம் என்பது பக்தி' என விளக்கியிருத்தல் காணலாம். மதியாகிய ஞானத்தினும், நலமாகிய பக்தியே சிறப்புடையது என்பது கருத்து. ஞானத்தின் திருவுருவமாகிய சம்பந்தர், காளத்திநாதரைக் கும்பிட்ட பயன் காண்பார் போல், அன்பின் திருவுருவமாகிய கண்ணப்பரைக் கண்டு வீழ்ந்து பணிந்தார் எனச் சேக்கிழார் பெருமான் கூறியிருத்தல் உணரற்பாலது.

## பக்தியும் பெண்மையும்

ஞானத்தின் முதிர்ச்சி பக்தியாக விளைதல் போல, பக்தியின் முதிர்ச்சியானது பெண்மையாக மாறுகின்றது என்பது, சான்றோர்கள் கண்டறிந்த உண்மை. ஞானத்தில் சிறந்த நம்மாழ்வாரும், திருமங்கையாழ்வாரும், ஞானத்தின் முதிர்ச்சியாகிய பக்தியுணர்வின் மேலீட்டால் பெண்மை நிலை எய்தி, முறையே பராங்குசநாயகி எனவும், பரகாலநாயகி எனவும் பெயர் வழங்கும்படி தமது பாடல்கள் பலவற்றைப் பாடியிருத்தல் இவ்வுண்மையை வலியுறுத்தும். ''ஞானத்தில் தன் பேச்சு; பிரேமத்தில் பெண்பேச்சு'' என அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்னும் வைணவப் பெருஞ்சான்றோர் தாம் இயற்றியருளிய ''ஆசாரிய இருதயம்'' என்னும் நூலில் அருளிச் செய்திருத்தலும் இவ்வுண்மைக்குச் சான்று பகரும்.

## பக்தியின் படிநிலைகள்

பெண்மையானது பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம் பெண் என்னும் ஏழு வகைப் பருவங்களையுடையதாதல்போல, அன்பின் பெருக்கமாகிய பக்தியும், அபிலாஷை—சிந்தனை—அநுஸ்மிருதி—இச்சை—ருசி—பரபத்தி—பரமபக்தி என்னும் ஏழு வகையான படிநிலைகளை உடையதெனச் சமய தத்துவ நூல்கள் கூறும் (1). முதன் முதலில் கண்ட அளவில் உண்டாகும் அன்பு, **அபிலாஷை**. கண்ட ஒருவரை நினைவு கூர்தல், **சிந்தனை**. அந்நினைவு இடையறாது தொடர்ந்து வளர்ந்து பெருகுதல், **அநுஸ்மிருதி**. அந்நினைவின் மிகுதியால் அவரைக்கூடிக் கலந்து மகிழ வேண்டும் என எழும் விருப்பம், **இச்சை**. அவ்

விருப்பம் வேறு எதனுலும் மாற்றி நீக்க இய லாதபடி பெருகி முதிர்ந்து நிற்கும் தன்மை, ருசி. அத்தகையவர் ஒருவரைக் கூடுதலே இன்ப மாகவும், பிரிதலே துன்பமாகவும் நிகழும் உணர்வு, பரபக்தி. அன்பிற்குரியவரைப் பிரிந்த அளவில், அல்லது பிரிய நேரும் என்னும் உணர்வு நிகழ்ந்த அளவில், மூர்ச்சையற்று மயங்கி உயிர்விடும் முதிர்ந்த பேரன்புநிலே, பரமபக்தி. இப் பரமபக்தியே அன்பின் முடி வான நிலே எனப் போற்றப்படும். ''பெருநீர் அறச் சிறுமீன் துவண்டாங்கு நினேப் பிரிந்த வெரு நீர்மையேனே விடுதி கண்டாய்'' என அருளிச் செய்திருத்தலால், மாணிக்கவாசகர், அனைய சிறந்த அயராப் பேரன்பின் திறனே எய்தியிருந்தமை இனிதுணரப்படும்.

## பாவைப் பாடல்

இத்தகைய பேரன்பின் முதிர்ச்சியிலேயே மாணிக்கவாசகர், நம்மாழ்வாரும், திருமங்கை யாழ்வாரும் போலப் பெண்மை நிலேயுற்று, பெண்கள் நோற்கும் பாவை நோன்பு பற்றியும், அவர்கள் தம்முள் மார்கழி மாதத்தில் வை கறைப் போதில் ஒருவரையொருவர் துயில் எழுப்பி உரையாடிக் கொள்வது பற்றியும், தமக்கு நல்ல கணவன்மார் வாய்க்கவும், உலகம் செழிக்க மழை பொழியவும் வேண்டிக்கொண்டு வழுத்துவது போலவும் எல்லாம் பாடியருளினர்.

## பெண்மை நிலே

இதற்கு முன்னெல்லாம் ஞானநிலேயில் நின்று, சிவபுராணம்—கீர்த்தித் திருவகவல் — திருவண்டப் பகுதி—போற்றித் திருவகவல்— திருச்சதகம்—நீத்தல் விண்ணப்பம் என்பன வற்றைத் தம்முடைய பேச்சாகவே பாடிவந்த மாணிக்கவாசகர், அந்த ஞானம் முதிர்ந்து பெருக்கெடுத்த பக்தியாகிய பெண்மை நிலேயில் பாடியருளியதே, திருவெம்பாவை எனலாம். இதற்கு முன்பெல்லாம் ''பொல்லாவினேயேன்'', 'நலந்தான் இலாத சிறியேன்', 'நாயிலாகிய குலத்தினும் கடையேன்' என்ருற்போல, தம்மை இழித்தும் பழித்தும் தற்சுட்டாகப் பாடிக் கொள்ளும் இயல்பினராகிய மாணிக்க வாசகர், அத்தகைய தற்சுட்டு ஏதும் இல்லா மல், திருவெம்பாவைப் பாடல்களேப் பாடியிருத் தல், அவர் தம்மை மறந்தும் இழந்தும், பெண்மைநிலே எய்தியமைக்குரிய சான்று பக ரும்.*

---

(1) " St. Augustine, deeply imbued with Alexandrian thought in his treatise ' De Doctrina Christina ', gives *seven* steps by which the soul comes to God. The first of these is the ' fear of God '. The second is ' the reverent study of the Divine relation '. The third is ' love of God and of our fellow-men '. The fourth is ' steadfast self-discipline '. The fifth is ' purgatio animae '. The sixth is ' purgatis oculi Cordis'. The seventh is that in which ' talis fifiluis adcendit ad sapientiam '......."

—Rev. G. U. Pope, M.A., D.D.

*"In the Course of a book, or even so short a thing as an essay, an author's manner changes with mood or theme; and the Vocabulary reflects the nature of that change."

—G. H. VALLINS,
The Best English.

''கருவிகட்கு இறைமை காட்டுபு நிற்றலில்
புருட நாமம் புனேந்தனம் ஆயினும்,
அத்தநிற் குறிப்பிற் சத்திகள் யாமே;
புருடனேச் சத்தியிற் புணர்த்தனே; அன்னதற்கு
ஒருகாட்டு என்ப புருடோத் தமனே''

—பண்டார மும்மணிக்கோவை

என அருட்பெருஞ் சான்ருேர் ஆகிய குமரகுரு பர அடிகளார் பாடியிருத்தல், இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்த வல்லதாகும்.

## பெண்மைக்கு அறிகுறி

பெண்மை எய்தினுர்க்குரிய இயல்புகளும், அடையாளங்களும் பல உண்டு. அவற்றில் தலேயாயது அடிதொழுதல். இதனேயே திருவள் ளுவரும், ''தொழு தொழுவாள்'' என்பதனுற் குறிப்பிட்டார். ''அவன் உறக்கம் புருஷோத்த மத்திற்கு அறிகுறியாயினுற்போல, இவர்களும் பெண்களில் தலேசிறந்தவர்கள் ஆனமைக்கு அறிகுறி, திருவடிகளேப் பாடுகை'' எனவரும் திருப்பாவை ஆருயிரப்படி விரிவுரை, இங்கு ஓர்ந்து உணரற்பாலது. இவ்வுண்மை பற்றியே மாணிக்கவாசகரும் திருவெம்பாவையின் இறுதி யில் ''போற்றி யருளுக நின் ஆதியாம் பாத மலர்; போற்றியருளுக நின் அந்தமாம் செந் தளிர்கள்; பொற்பாதம், பூங்கழல்கள்; இணே யடிகள், புண்டரிகம், பொன்மலர்கள்'' என் றெல்லாம், விதந்து வியந்து புகழ்ந்து சிவபிரான் திருவடிகளேப் போற்றியருள்வாராயினர்.

## சக்தியை வியந்தது

திருவெம்பாவையின் தத்துவநுண் பொருள் ''சத்தியை வியந்தது'' எனப் பெரியோர்கள் கூறுவர். சத்தியாகிய தாயை முன்னிட்டுக் கொண்டு, சிவமாகிய தந்தையின் அருளேப் பெறுவதே, எளிமையும் இயல்புமாகும். ஆதல் பற்றியே, உலக நலத்திற்காக மழை பொழிய வும், தம் நலத்திற்காக நல்ல கணவர் வாய்க்க வும், சிவபிரான் திருவருளே வழுத்தும் இப் பாவை மகளிர், சத்தியை வியந்து போற்றித் துதிப்பாராயினர்.

''நம்முடைய நல்வினே ஞானம் முதலிய உபாயங்களாலே எம்பெருமானேப் பெற இருக் குமது இளிம்பு; அவற்றை விட்டு எம்பெருமா னுடைய கிருபையாலே பெறுகை சதிர்; அந்தக் கிருபைக்கு அடியான பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு பெறுகை மா சதிர் ; 'மாசதிர் இது பெற்று நம்முடைய வாழ்வு வாய்க்கின்றவா' என்ருரிறே ஆழ்வார்'' எனவரும் திருப்பாவை விரிவுரைப் பகுதியும், இங்கு நாம் சிந்தித்து இன்புறற்பாலது.

## நாயக நாயகியுணர்வு

பக்தி நெறியில் தலேப்பட்டுப் பெண்மை நிலே எய்தியதன் பயனுகவே மாணிக்கவாசகர், திருவெம்பாவையை மட்டுமேயன்றி, அடுத்து வரும் திருவம்மானே—திருப்பொற்சுண்ணம் — திருக்கோத்தும்பி—திருத்தெள்ளேணம் —திருச்

சாழல்—திருப்பூவல்லி—திருவுந்தியார்— திருத் தோள்நோக்கம் — திருப்பொன்னூசல் — அன்னைப்பத்து—குயிற்பத்து — திருத்தசாங்கம் முதலிய பற்பல திருப்பதிகங்களையும், பெண்மை நலம் தோன்றுமாறே பாடியருள்வாராயினர். பக்தி நெறி யுணர்வின் முதிர்ச்சியாகிய பெண் மைநிலையே, திருவாசகத்தின்கண் படிமுறையே வளர்ந்து, ''நாயக நாயகி பாவம்'' என்னும் தலைசிறந்த காதற் பெருநலம் நிறைந்து பொங்கித் ததும்புகின்ற, ''திருச்சிற்றம்பலக் கோவையார்'' என்னும் அருட் பொருள் அமைந்த அகப்பொருள் நூலாக வடிவெடுத்தது எனலாம். *(2)*

பக்தியுணர்வானது பெண்மைநிலை எய்திக் காதல் நிலையில் நாயநாயகிபாவம் கொள்ளும் என்பது, சம்பந்தர் ''ஏர் பரந்த இனவெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்'' என்றும்; திருநாவுக்கரசர் ''வஞ்சித்து என் வளை கவர்ந் தான் வாரானே ஆயிடினும், பஞ்சிக்கால் சிற கன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்'' என்றும், சுந்தரர் ''பறக்கும் எம் கிள்ளைகாள் பாடும் எம் பூவைகாள், அறக்கண் என்னத்தகும் அடி கள் ஆரூரரை, மறக்க கில்லாமையும் வளைகள் நில்லாமையும், உறக்கம் இல்லாமையும் உணர்த்த வல்லீர்களே'' என்றும் பாடியிருப்பன வற்றால் தெளியப்படும். இங்ஙனம் பிறர் பல ரும்கூட, ஓரோவழி நாயகநாயகிபாவம் தோன்றப் பாடியுள்ளனராயினும், இத்தகைய காதலுணர்வு மீக்கூர்ந்த பக்திநெறி விளக்கத் திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்ப வர், மாணிக்கவாசகரே எனத் தெளிந்து துணிந்து கூறலாம்.

---

(2). "The love poetry of the Tamils was the foundation for the *Bhakthi* poetry which again is a significant Tamil contribution to world literature."

—*Xavier S. Thani Nayagam.*

"Sexual embrace, worthily understood can only be compared with music and with *prayer*".

—*James Hinton*

"The Indescribable
Here it is done
The Woman soul leadeth us
upward and on"

—*Goethe, Faust.*

"Throughout the literatures of the world, the love of man for his Ishta Devata is likened to the love of a woman towards his lover and the bliss of communion is likened to the joys of physical union. The Biblical '*Song of Songs*', the saying of Jesus Christ likening God to the bridegroom and the souls to virgins waiting for their spouse, the recorded experiences of mediaeval Christian saints like *St. Theresa* and *St. Gertrude* who recounted the caresses bestowed upon them by Christ, the assertion of *St. Catherine* that 'she was betrothed to Christ and was given a ring by him' are all analogous."

—*Dr. C.P. Ramaswami Aiyer,*
Phases of Religion and Culture, P. 39.

## தலைவனும் தலைவியும்

திருவெம்பாவையில் தொடங்கிய ஞானத் தின் முதிர்ச்சியாகிய பக்தியுணர்வு—பெண்மை நிலை அடைந்து, படிப்படியே முறைமுறையே வளர்ந்தோங்கி, திருச்சிற்றம்பலக் கோவை யாரில் சென்று சேர்ந்து, முழு நிறைவு பெற்று மிளிர்கின்றது. அம் முழு நிறைவின் திறம், தலைவனாகத் திகழும் இறைவன் தலைவியாகவும், தலைவியாக விளங்கிய மாணிக்கவாசகர் தலைவ னாகவும் கொள்ளப்படுதற்குரிய நிலையில், மாறி நிற்கும் மாட்சிமையினால் உணரப்பெறும். இன்ப நுகர்ச்சியைத் தருகின்ற பொருளாகத் திகழ்தலின் சிவத்தினைத் தலைவியாகவும் கொள் ளுதல் கூடும். ''பேரின்பமான பிரமக்கிழத்தி யுடன் ஓரின்பத் துள்ளான் என்றுந்தீ பற ; ஒரு பொருளாலே என்றுந்தீ பற'' எனவரும் திருவியலூர் உய்யவந்த தேவர் திருமொழியி னால், இறைவனைத் தலைவியாகக் கூறுதலும் ஒரு மரபேயாகும் என்பதனை உணரலாம்.

இங்ஙனம் கொள்ளுதல், சிவபிரானின் தனிப்பெரும் முதன்மைக்கு இழுக்காக முடியு மன்றோ! எனச் சிலர் கருதுவர். தம்முள் ஒத்த அன்பினராய்க் கூடும் காதற் றலைமக்களுள் உயர்வு தாழ்வு உணர்ச்சிகள் நிகழப் பெறா. இதனை, ''ஆச்ரயண வேளையிலேயிறே கிரமம் பார்ப்பது; அநுபவ வேளையிலே கிரமம் பார்க்கப் போகாதிறே'' எனவரும் பெரியவாச்சான் பிள்ளை அவர்களின் அரிய விளக்கவுரை இனிது உணர்த்தும். (War and Love knows no formalities). 'பிரேமத்திற்குக், கிரமம் இல்லை' என்பது பழமொழி.

'மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய'

எனவரும் தொல்காப்பிய நூற்பாவும், இவ்வுண் மையைச் செவ்விதின் வலியுறுத்தி நிற்கும். எனவே மணிவாசகர் தலைவனாகவும், சிவபிரான் தலைவியாகவும் மாறி நிற்கப் பெறுதலும்கூட, ஒரு வகையில் பக்தியுணர்வு, மிக விழுமிய பெரு நிலையில் முழு நிறைவு எய்தித் திகழ்தலை, வெள் ளிடை விலங்கல் எனத் தெள்ளிதிற் புலப்படுத் தும்.

## முடிவுரை

இதுபற்றியே சிவபெருமான், ''பாவை பாடிய வாயாற் கோவை பாடுக'' என மணி வாசகரை விரும்பி வேண்டிக் கொண்டான் என்பது வரலாறு. இவ்வரலாற்றால், பாவைக் கும் கோவைக்கும் இடையே உள்ள பண்பொப் புமை நலங்களையும், பாவைப் பாடலுக்கும் பக்தி நெறிக்குமுள்ள பலவகை இயைபுகளையும், யாவரும் ஓரளவு கருதி உணர்ந்து கொள்ளுதல் இயலும். பாவைப் பாடல்களை ஓதுதலால் நமக்குப் பக்தி வளரும்; நாம் இறையருளை எளி தின் இனிதின் எய்துதல் இயலும். வளர்க பக்தி நெறி! பரவுக பக்திப் பாடல்கள். *

# திருவுத்தரகோசமங்கையும் சங்ககால ஊர்களும்

வித்வான் முகவை. உ. வேணுகோபால் பிள்ளை

**முன்னுரை :**

பாண்டிய மன்னர்களின் பழம் பதியாகிய உத்தரகோச மங்கை, தமிழகத்தில் இராமநாத புரம் மாவட்டத்தில், இராமநாதபுரத்திற்குத் தென்மேற்கில் எட்டுக் கல் தொலைவில் உள்ளது. இக்காலத்தில் மணிவாசகர் போற்றிய மங்கள நாதர் கோயிலை மட்டுந் தன்னகத்துக் கொண்டு, ஒரு சிற்றூராகத் திகழ்கின்றது.

சங்க காலத்தில் பாண்டிய நாடு பல மண்டலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. வெள்ளியம்பலம் (மதுரை), இலவந்திகைப்பள்ளி (உத்தரகோசமங்கை) என்பன, அவற்றுள் குறிப்பிடத் தக்கன. இவ்விலவந்திகைப் பள்ளி, கி.மு. 3000 ஆண்டளவில் பாண்டியர்க்குத் தலைநகராய், மணவூர் என வழங்கியது. கி.பி. 3 ஆம் நூற்றாண்டளவில் உத்தரகோசமங்கை எனப் பெயரேற்றது. கூடகாரம், கொற்கை, கானப்பேரெயில் (காளையார்கோயில்), புனவாயில், குற்றாலம், ஆப்பனூர், ஏடகம், ஆடானை, நெல்வேலி, தென்பரங்குன்றம், பிரான்மலை, திருச்சுழியல் முதலிய ஊர்களும், முற்காலத்துப் பாண்டி மண்டலப் பிரிவுகளே. எனவேதான் இத்தலங்கள் யாவும் பாண்டித் தலங்கள் எனப் பேசப்படுகின்றன. இவ்வூர்கள், தலைநகரங்களாக அமைந்திருந்தமையால் தான், பல பெருங்கோயில்கள் இங்கு எடுக்கப் பட்டுள்ளன.

பாண்டிய மண்டலம், பண்டைக் காலத்தில் பல சிறு சிறு பகுதிகளாக நாடு என்னும் பெயரில் பிரிக்கப்பட்டிருந்தது. பூங்குடி நாடு, துறையூர் நாடு, மேல்வேய் நாடு, தென்வாரி நாடு, வடவாரி நாடு, திருவழுதி நாடு, முரப்பூர் நாடு, தென்களவழி நாடு, வானவன் நாடு, குட நாடு, தாழையூர் நாடு, முத்தூர்க்கூற்றம் கீழ்ச்செம்பி நாடு, செம்பி நாடு, வடதலைச் செம்பி நாடு, வெண்புல நாடு, பருத்திக்குடி நாடு, புறமலை நாடு, கருமா நாடு, மிழலைக் கூற்றம், இடைஅள நாடு, கோட்டூர் நாடு, அரும்பைக்கூற்றம் முதலியவைகளாகப் பாண்டிய மண்டலத்தைச் சேர்ந்த பல நாடுகளின் பெயர்கள், கல்வெட்டுக்களிலும் நூல்களிலும் ஆங்காங்கே குறிக்கப்பட்டிருக்கக் காண்கிறோம்.

**இலவந்திகைப்பள்ளி :**

சங்க நூல்களிகல் இலவந்திகைப்பள்ளி என்று ஓர் ஊர் குறிக்கப்படுகின்றது. அவ்வூர் இந்நாளைய உத்தரகோசமங்கையே என்று ஊகிக்க இடனுள்ளது. உத்தரகோசமங்கையை ஒரு மண்டலத் தலைநகராகக் கொண்டு, இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் அரசோச்சினன். வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி என்னும் பாண்டியன், வெள்ளியம்பலமாகிய மதுரையில், அரசிருக்கையில், இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன், உத்தரகோசமங்கையாகிய இலவந்திகைப்பள்ளியில் நாடு காவல் செய்துள்ளான். இந் நன்மாறன், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, குராப் பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், புலவர் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், நக்கீரனார், மருதனிள நாகனார் ஆகிய இவர்கள், காலத்தால் ஒன்றுபட்டவர்கள் என்பது, புறநானூற்றால் தெரிகின்றது.

**பிசிர்குடி**

புறநானூற்றில் பாடல் பாடியுள்ள அரசர்களுள் ஒருவனாகச் சிறந்து விளங்குபவன் பாண்டியன் அறிவுடை நம்பி. அறிவுடை நம்பி என்னும் அப்பாண்டிய அரசன் வாழ்ந்திருந்த ஊரும், இவ்வுத்தரகோசமங்கையே என்பது பெறப்படுகிறது. இவ்வறிவுடை நம்பியைப் புறம் 184 ஆம் பாட்டில், ''காய் நெல்லறுத்துக் கவளம் கொளினே''' என்று தொடங்கிப் பாடித் தெருட்டிய புலவர் ஆகிய 'பிசிராந்தையார்' என்பவர் வாழ்ந்த ஊர், இவ்வுத்தரகோசமங்கைக்கு அண்மையிலுள்ள பிசிர்குடியே யாகும். இக்காலத்தில் இவ்வூர் பொசுக்குடி என வழங்குகிறது.

**வேம்பத்தூர்**

சங்க காலத்துப் புலவராகிய வேம்பத்தூர்க் கண்ணன் கூத்தன் குமரனார் வாழ்ந்த வேம்பத்தூரும், இவ்வுத்தரகோசமங்கைக்குச் சற்று அணித்தாகவேயுள்ளது.

**நல்லந்தை**

நற்றிணைப் பாடலாசிரியரில் ஒருவராகிய நல்லந்தையாரின் ஊர் ஆகிய நல்லந்தை, உத்தரகோசமங்கைக்குச் சற்று ஐந்தாறு கல் அளவில், இக்காலத்தில் லாந்தை என்ற பெயரில் நிலவுகிறது.

**புல்லங்காடு**

ஆசிரியர் புல்லங்காடர் வாழ்ந்த புல்லங்காடும், இவ்வுத்தரகோசமங்கைக்குத் தென்கிழக்கே ஐந்து கல் அளவில் உள்ளது. இக்காலத்தில் திருப்புல்லணை என்னும் திருத்தலமாக விளங்குகிறது. இதன் பண்டைப் பெயர் புல்லங்காடு என்பதேயாகும். இவ்வூர் புல்லா

ரணியம் என வடமொழியில் வழங்கிப் பின் திரு என்னும் அடைபுணர்த்தித் திருப்புல்லாணி என வழங்குகிறது.

**மணக்குடி**

திருக்குறள் உரையாசிரியர் ஆகிய மணக்குடவர் வாழ்ந்திருந்ததாகக் கூறப்படும் மணக்குடி என்னும் ஊர், பாண்டி மண்டலத்தில் இடையள நாட்டில், இராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டி என்னும் ஊருக்கும், உப்பூருக்கும் இடையில் உள்ளது.

**சீத்தலை**

மணிமேகலையாசிரியர் சீத்தலைச் சாத்தனர் வாழ்ந்த சீத்தலையும், இவ்வுத்தரகோசமங்கையின் ஒரு பகுதியாகவே இருந்திருக்கிறது. இக்காலத்தில் சீத்தலை, இரண்டாகப் பிரிந்து மேலைச் சீத்தை, கீழைச் சீத்தை எனப் பிரிந்து, சீத்தை என்ற பெயரில் வழங்குகின்றது. பிசிர்குடி என்பது பொசுக்குடியானது போலவும், தேவி பட்டிணத்திற்கு அண்மையில் உள்ள சிவனுக்கினியான் என்ற ஊர் சிவனிக்காரன் என வழங்குவது போலவும், சீத்தலை, சீத்தை என வழங்குகிறது. இப்புலவர் பெருமான் பௌத்த மதச் சார்புடையவர். இவ்வுத்தரகோசமங்கையில் உள்ள சீத்தலையும், பௌத்த மதத்தினர் வாழ்ந்த இடம். சான்ருகச் சங்க காலச் சிற்ப அமைதியோடு கூடியதாய்ச் சற்றேறத்தாழ நான்கடியுயரமுள்ள புத்தர் படிமம் ஒன்று சீத்தையில் இருந்தது. அப்படிமம் இப்பொழுது உத்தரகோசமங்கையில், மன்னர் சத்திரத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

எனவே, பௌத்த சமயமும் மக்களும் பரவியிருந்த சீத்தலையில் வாழ்ந்த சாத்தனர், பௌத்த சமயத்தினராய் இருந்ததில் வியப்பில்லை. இவரது ஊர் சீத்தலை, இயற் பெயர் சாத்தனர், சென்று கூல வாணிகம் செய்து வாழ்ந்த ஊர் மதுரை. எனவே இவர் 'மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனர்' என அழைக்கப்பட்டார்.

**உப்பூர்**

இவர் போலவே 'மதுரை உப்பூரி குடி கிழார் மகனர் உருத்திரசன்மனர்' எனப் பேசப்பட்ட உருத்திரசன்மனர் பிறப்பிடம், பாண்டி மண்டலத்தின் கிழக்குக் கடற்கரைக் கண் உள்ளதும், இடையள நாட்டில் உள்ளதுமாகிய உப்பூர். இவ்வூர், இராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டியென்னும் ஊரிலிருந்து தேவிப் பட்டிணம் வருகின்ற கடற்கரையோர நெடுஞ் சாலையில் உள்ள சிற்றூராகும். திருவிளையாடற் புராணத்தில் பேசப்படுகின்ற இப்புலவர் பெருமான், உப்பூரில் வாழ்ந்த கிழார் ஒருவரது மகனுவர்.

**தெய்வச்சிலைநல்லூர்**

உத்தரகோசமங்கையை அடுத்துத் தெய்வச்சிலை நல்லூர் என்ற ஊர் உள்ளது. தொல்காப்பிய உரையாசிரியர் ஆகிய தெய்வச்சிலையார் பிறப்பிடம் இவ்வூர் என்பது, இவ்வூரின் கண் நிலவும் செய்தியாகும். இந்த உண்மை இவ்வூர் நிலையை வைத்துக் காணும்பொழுது ஏற்புடைத்தாகவே தோன்றுகிறது. உத்தரகோசமங்கையை அடுத்துள்ள திருப்புல்லாணி இறைவர்க்குத் தெய்வச்சிலையார் என்ற பெயர் உள்ளது. அடுத்த ஊரினரான இவருக்குத் திருப்புல்லாணி இறைவனின் பெயரையே இட்டு வழங்கியிருக்கலாம். எனவே இப்புலவர் பெருமானுக்குத் தெய்வச் சிலையார் என்ற பெயரும், இவர் வாழ்ந்த ஊருக்குத் தெய்வச் சிலை நல்லூர் என்ற பெயரும் அமைந்ததோ எனக் கருதவும் இடமுள்ளது.

**ஆதன்கொற்றன்குளம்**

சங்க காலத்துப் புலவர் பெருமக்களுக்கு வழங்கிய பெயராகிய ஆதன் கொற்றன் முதலிய பெயரமைந்த ஓரூர், இவ்வுத்தரகோசமங்கைக்கு அண்மையில், ஆதன் கொற்றன் குளம் என்று இன்றளவும் நிலவுவதும் காண்டற்குரியது.

**முதுகளத்தூர்**

இவ் உத்தரகோசமங்கைக்குச் சற்றுப் பதினைந்து கல் தொலைவில், சங்ககாலப் பாண்டியரது நிலையான பாதுகாப்பமைந்த போர்க்களமாக விளங்கிய இடம் முதுகளத்தூராகும். படை மறவர்கள் நிலையான பாடிவீட்டில் தங்கி இருக்கின்ற இடம், பின்னர் படைஞர்களது தேவையை நிறைவு செய்ய எழுந்த அங்காடிகள், கூலச் சந்தைகள், அறுவையங்காடிகள், உணவுச் சாலைகள் முதலியன மலிந்து பின்னர் ஒரு படையூராகவே மாறுதல் இயல்பு. இது போன்று நிலையான ஓர் களத்தூரானது, இம் முதுகளத்தூராகும். இந்நாளில் இது ''முதுகுளத்தூர்'' என வழங்கிவருகின்றது.

**கிடாரம்**

இவ்வூரின் பெயர் கூடகாரம் ஆகும். இச்சொல் இக்காலத்தில் கிடாரம் என மருவி வழங்குகிறது. கூடகாரம் என்பது போர்ப் படைகள் தங்கியிருக்கும் கூடாரமாகும். ஆங்கிலத்தில் (டெண்ட்) என்பர். காரம் கட்டிடம். பின்னர் நிலையான பாசறைக் கட்டிடங்களாக மாறிய இடம். இவை நாட்டெல்லை யோரங்களில் நிலையாக அமைக்கப்பட்டுள்ள பாசறைகள் அல்லது படையிருப்புக்களாகும்.

கி. பி. 15-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த அரிகேசரி பராக்கிரம பாண்டியனின் அரசியற் பணிமகன் ஒருவன், இக்கிடாரம் என்னும் ஊரினனுவன். திருநெல்வேலி மாவட்டம் தென்காசியிலுள்ள காசிவிசுவநாதர் கோயில் கருவறைக் கல்வெட்டொன்றில், இவனது கையொப்பம் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டில் ''இவை கிடாரத்துடையான் எழுத்து உதுல்யம்'' எனக் காணப்படுகிறது.

**சித்திரமாடம்**

இக்காலத்து இவ்விடம் முதுகளத்தூருக்கு அண்மையில் சித்திரங்குடி என்ற பெயரில் ஒரு சிற்றூராக உள்ளது. இது போர்க் காலங்களில் சேய்மையிலிருந்து போர் நிலைகளைக் கண்காணிக்குமாறு அமைந்த உயர்ந்த கட்டிடமாகும். சித்திரம்—அழகு, மாடம்—மாடங்களமைந்த கட்டிடம், சித்திரமாடம்—அழகிய மாடக் கட்டிடம் என்பதே பொருள். இது போன்றே வஞ்சி நகர்க்கண் வேண்மாடம் இருந்தது. இதுவும் போர் நிலைகளைக் கவனிக்க அமைந்த கட்டிடமேயாகும். வேண்மாடம், வெண்மை மாடம். வெண்மை என்ற சொல்லிலுள்ள மை விகுதி போய், ஆதி நீண்டு வேண்மாடம் என ஆகியது.

முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளிக்கும், அத்துவஞ்சேரல் இரும்பொறைக்கும் நிகழவிருந்த போர் நிலையைக் கண்காணிக்க, இரும்பொறை இவ் வேண்மாடத்தில் ஏறிக் கவனிக்கும்பொழுது சோழனது களிறு மதம் பட்டு வர இவ்விரும்பொறை வேண்மாடத்திலிருந்து இறங்கியோடி அக்களிற்றை அடக்கி மதம் தெளிவித்த நிலையைப் புறம் 13-ஆம் பாடல் பேசுகிறது. இதனால் வஞ்சி நகர்க் கண்ணிருந்த வேண்மாடமும், இச்சித்திரமாடம் போன்று போர்ப் பாசறைகளைக் கண்காணிக்க அமைந்த மாடம் என்பதே தேற்றம்.

**சிக்கல்**

இச் சிக்கல் என்னும் ஊர், உத்தரகோச மங்கையை அடுத்துள்ள ஊராகும். சேர மன்னன் செல்வக் கடுங்கோவாழியாதன் என்பவன், ஒரு முறை பாண்டியனோடு போர் நடத்துங்கால், இலவந்திகைப் பள்ளியின் (உத்தரகோச மங்கையின்) வட கிழக்குப் பக்கத்தில் புகலி என வழங்கும் ஊரிலிருந்து (இக்காலத்து இவ்வூர் இராமநாதபுரத்திற்கு மேற்கிலும், உத்தரகோச மங்கைக்கு வடக்கிலும் அமைந்த போகலூர் என்ற பெயரில் வழங்கி வரும் ஊராகும்), நாடு காவல் செய்தவனும் பாண்டியரது படைத் தலைவனுமாகிய ஒருவனால் இச்சிக்கல் என்ற ஊரில் போர் நடக்கும்போழ்து வேலால் எறியுண்டு மாண்டான். இது பற்றியே அவனுக்குச் ''சிக்கற் பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதன்'' என்ற பெயர் வந்தது.

**பள்ளிமடை**

இச் சேரமன்னனே கபிலரது உயிர் நண்பன் ஆவன். அந்தச் சிக்கல் என்னும் ஊர், இவ்வுத்தரகோச மங்கைக்கும் முதுகளத்தூருக்கும் இடையில், உத்தரகோச மங்கையினின்று சற்று ஏறத்தாழ எட்டுக் கல் தொலைவில் உள்ள ஊராகும். இச்சிக்கலுக்கு அண்மையில் 'பள்ளி மடை' என்ற ஓர் ஊர் உள்ளது. இவ்வூரே அம்மன்னன் பள்ளிப் படுத்தப்பட்ட இடம். 'பள்ளிப் படை' (Burial) என்னும் சொல் மருவிப் பள்ளிமடை என வழங்குகிறது. எனவே இலவந்திகைப் பள்ளியாகிய உத்தரகோச மங்கை கோநகராக விளங்கும்பொழுது இவ்வுத்தரகோச மங்கையை நோக்கிப் பொருத வந்த செல்வக் கடுங்கோவாழியாதன், தான் வரும் வழியில் உள்ள ஊராகிய இச் சிக்கலில் பாண்டியனது ''காஞ்சிப் போரில்'' இறந்தொழிந்தானுதல் வேண்டும். இச்சேர மன்னன் உத்தரகோச மங்கையை அடுத்துள்ள சிக்கலுக்கு வர வேண்டியதின் நோக்கம், இவ்வுத்தரகோச மங்கை கோநகராக இருந்தமையாலேயே என்று, துணிய இடமுள்ளது. எனவே, சேர மன்னன் செல்வக் கடுங்கோ வாழியாதனது காலத்திலும், இவ்விலவந்திகைப் பள்ளியாகிய உத்தரகோச மங்கை பாண்டியனது கோநகர் ஆக விளங்கியது என்பது துணிபு.

**கீரந்தை**

இடைச் சங்க காலப் புலவராகிய கீரந்தையார் வாழ்ந்த கீரந்தை என்னும் ஊர், இவ்வுத்தரகோச மங்கைக்கும், கமுதி என்ற ஊருக்கும் இடையில் உள்ளது காண்க.

**உத்தரகோச மங்கை**

இவ்வூர், ஒருகால் கோவிலை நடுவிடமாகக் கொண்டு கோனேரி, மல்லல், நல்லிருக்கை, களரி, கொம்பூதி, கொடிக்களம், கெதைக்களம், களக்குடி, பூச்சேரி, கொண்டல் உலாவி, கடும்படை, செங்கற்படை, தேரிறுவெளி முதலிய இச்சிற்றூர்களையெல்லாம் தன்னகத்துக் கொண்டு, கிழமேல் 15 கல் பரப்பும், தென்வடல் 17 கல் பரப்பும் உடைய ஒரு பேரூராய் இருந்து, இக்காலத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள பழையாறைப் பெருநகர் சிதைவுற்றமை போல், பெரிதும் சிதைந்து சிறு சிறு கிராமங்களாகப் பிரிந்து, இற்றை நாளில் மங்களநாதன் கோவிலை மட்டும் தன்னகத்தே கொண்டும், கோவிலைச் சுற்றிய நான்கு வீதிகளை நான்கு மாடவீதிகளாகக் கொண்டும் ஒரு சிற்றூராய்த் திகழ்கின்றது.

இதனையன்றி இக்கோவிலின் வடபுறத்தில் அக்கினி தீர்த்தத்தின் மேல் கரையில் மணிவாசகர் பௌத்த மதத்தினருடன் சமயவாதிட்ட பட்டிமன்ற மேடையொன்று, சங்ககாலச் சிற்பவமைதியுடனும், பௌத்த சமயச் சிற்பவமைதியுடனும் கூடிய பாண்டில் நாயகம் என்னும் பெயருடைய ஒரு கல் தேர் வடிவில் காட்சியளிக்கிறது. அசோக மன்னனால் தனது மதக் கொள்கைகளைப் பரப்புவதற்கும், சமயவாதிகள் தங்களுடைய சமய வாதத்திற்கு எடுக்கின்ற கொடியைக் கட்டுவதற்கும் வாய்ப்பாயமைந்த ஓர் கற்றூணொன்று, இன்றளவும் மிகப் பழைமையுடையதாய்த் தன் மேல் பொறிக்கப்பட்ட எழுத்துக்களெல்லாம் அழிந்து ஓர் கற்றூணகவே காட்சியளிக்கிறது.

**முடிவுரை :**

எனவே இவ்வுத்தரகோசமங்கையென்னும் ஊர், முற்காலத்தில் மதுரை நகரினும் தொன்மையுடையதாய்ப் பாண்டியரது கோநகராக நிலவியிருந்ததென்பது, இவ்வூரமைப்பையும், கோவிலையும் நோக்குவார்க்கு நன்கு புலனாகும்.

[இக்கட்டுரை, சுருக்கித் தொகுத்துச் செப்பம் செய்யப் பெற்றது.

—ஆசிரியர்]

# சமர்த்தகுரு இராமதாசர்



கவியோகி சுத்தானந்த பாரதியார்

### தனிப்பெருந் துறவி

உலகில் எத்தனையோ குருமார் உண்டு. அவருள் சமர்த்தகுரு இராமதாசர் தனிச்சிறப்புடைய தனிப்பெருந் துறவி. இவரளித்த அருட் சக்தியாலேதான் சிவாஜி சிறந்த வீரத் திருமன்னன் ஆனான். இவர் தவத்தாலேதான் நம் அறமும் நாடும் ஆற்றல் பெற்றிலகின. தவம் செய்வார் தம் கருமம் செய்வர் ; எண்ணில் எல்லாம் தவத்தால் எய்தும் என்பதற்குச் சிறந்த விளக்கம் இராமதாசர் வாழ்வேயாகும்.

### சூரியாஜி

கோதாவரி ஆற்றங்கரையில், ஜம் என்பாரெரு நல்லூர் உண்டு. அதில் சூர்யாஜிபந்து என்ற அந்தணன் இராணுபாய் என்னும் கற்புத் திருவுடன் இல்லறங் காத்தான். சூரியாஜி கிராமக் கணக்கர்; அந்த வரும்படியைக் கொண்டு நிறைமுறையான இல்லறங் காத்தார். அவர் கதிரவனையே கடவுளாகக் கருதி, காயத்திரி மந்திரத்தால் வழிபட்டு வந்தார். திருவருளால் இவருக்கு மூன்று மக்கள் பிறந்தனர். கங்காதரன், ராமிராமதாசன், நாராயணன். நாராயணனே பிற்காலத்தில் சமர்த்தராமதாசராக விளங்கியவன். சூரியாஜி இருக்குவேதி; ஜமதக்னி கோத்திரர்; தமது மரபிற்குரிய ஒழுக்கம் பூண்டவர்.

### தவப்பணி

நாராயணன் தந்தையைப் போலவே வேதங் கற்று, சூரிய வணக்கமுடன் யோகமும் பயின்றான். அவன் அனுமான் போன்ற பலவான்; சுருசுரு துறுதுறுவென்று இருப்பான். மரக்கிளைகளிலேறித் தாவுவான், குதிப்பான், ஆடுவான் ஓடுவான். ஒரு நாள் தாயார் ''நீ சும்மா இரு . . மூச்சை வீணாக்காதே'' என்றார். நாராயணன் ஓர் இருட்டறையில் அமர்ந்து தன்னுள் ஆழ்ந்து சிந்தித்தான். தனது வாழ்வின் தவப்பணி புலனானது. அதற்கேற்ற திறமையைப் பெற இராமநாம ஜப சாதனம் செய்தான். சுற்றிலும் இல்லறத்திற் சிக்கிய மாந்தர் படும் பாட்டைப் பார்த்து மனங் கரைந்தான். தானும் இல்லறத் தொல்லையிற் சிக்காது வீட்டைத் துறந்து காட்டில் தவஞ் செய்ய உறுதி கொண்டான். கதிர் வணக்கத்தால் திண்ணுடலும் நுண்மதியும், மனத்திட்பமும் பெற்றான். மரபிற்குரிய சடங்குகளுடன் தந்தை நாராயணனுக்குப் பூணூல் போட்டுக் காயத்திரி மந்திரமும் ஓதினார். நாராயணன் கதிர் வணக்கத்துடனே காயத்திரி ஜபம் செய்து வந்தான்.

### திடீர்த் துறவு

தந்தை இறந்தார் ; நாமும் அப்படியே ஒரு நாள் இறக்க வேண்டி வரும் ; இருக்கும் போதே இறைவனருள் பெற்று, வந்த வினையை முடித்து இனி வாராதிருக்க வழி தேட வேண்டும் என்று நாராயணன் ஜப தப சாதனத்திலே ஈடு பட்டான். தாய் இராணுபாய் ஒரு நல்ல சிறுமியைத் தேர்ந்து நாராயணனுக்குத் திருமணம் கூட்டினாள். திருமணச் சிறுவரை மனையில் அமர்த்தி, புரோகிதர் தாலியைத் தந்து ''சுலக்னே சாவதான! முகூர்த்தே சாவதான'' என்ற மந்திர நாதம் எழுப்பினார். உறவினர் மகிழ்ச்சியுடன் ஆசி கூறுகின்றனர்; கெட்டி மேளம் கொட்டுகிறது. ''சுலக்னே சாவதான....ஆம் இதுதான் இல்லற விலங்கை உதறிச் செல்ல நல்ல வேளை'' என்று நினைத்தான் நாராயணன். எழுந்தான். ஒரே ஓட்டமாக ஓடினான். ''சுலக்னே சாவதான; சாவதானமாக . .விழித்தெழுந்தேன். விடுதலை விடுதலை. ராம் ராம் ராம் ராம்'' என்று கோதாவரி ஆற்றில் குதித்தான். நீந்தி அக்கரை சென்றான். அடர்ந்த காட்டில் விரைந்தான். மறைந்தான். ஐயோ பிடியுங்கள் என்று தாய் கதறினாள். மணச் சிறுமி அழுதாள். அண்ணன்மார் துரத்தினர். உறவினர் அலறினர். ''டே பயலே வா திரும்பி'' என்றனர். ''அச்சந்தரும் இல்லந் தாண்டினேன்; குடும்ப வெள்ளந் தாண்டினேன். ராம், ராம், ராம்''. பிறகு ஆள் மறைந்தான். குரல் மறைந்தது. திடீர்த் துறவி எங்கே சென்றான்? அனுமான் போலவே, நாராயணன் சித்திரை ஒன்பதாம் நிலாநாள், இராமர் திருநாளிற் பிறந்தான். இராமனிடம் அன்புமேவி, தான் அனுமான் போலவே இராமன் பணி புரிய வேண்டும் என்று முனைந்தான். வயது பன்னிரண்டுதான்; எவ்வளவு அன்புறுதி பாருங்கள்.

ஸ்ரீராம், ஜயராம், ஜயஜயராம் என்ற மந்திரத்தை ஒவ்வொரு மூச்சுடனும் கோடிக் கணக்காக உருவேற்றினான். இராமன் அருளைப் பெற்றான்—இராமதாசனானான். நாசிக் அருகே பஞ்சவடியில் சீதையும் இராமனும் முன்னே இருந்த அதே இடத்தில், கோதாவரியின் கிளை ஓடும் தகாலி என்ற குன்றக் குகையில் இராம

தாசன் பன்னிரண்டு ஆண்டுகள் ஒரே நிலையில் தவம் புரிந்தான். சில நாட்கள் இடுப்பளவு கோதாவரியாற்றில் நின்று கொண்டு தவமாற்றினன். பசி வந்தால் அருகேயுள்ள சிற்றூர்களில் கிடைக்கும் உணவை உண்டான்; பிச்சையுணவை இராமனுக்குப் படைத்த பிறகே ''ராம் ராம்'' என்று உள்ளே சொல்லிக் கொண்டே உண்பது.

''எப்போதும் எண்ணி
இருப்பார்க் கியலுண்மை
தப்பாது வீசும் தணல்''.

**தவசித்தி**

நினைப்பும், செபிப்பும் கடவுட் கனலை எழுப்பின. இயல்பாகப் பயனுள்ள சித்துகள் எய்தின. இராமதாசர் தவத் திறனால் நோய் தீர்த்தார், பேய் ஓட்டினர், அன்பர் படும் துன்பந் தீர்த்தார். அன்னியர் ஆட்சியில் நாடும் அறமும் அழிந்து வருந்துவதைக் கண்டு துடித்தார் துறவி. பன்னிரண்டு ஆண்டுகள் தலம் தலமாகக் கண்டு, மடம் மடமாகப் பார்த்து, ஊர் ஊராகத் திரிந்து, உலகின் துயர் நிலையை உள்ளத்தில் உணர்ந்து உணர்ந்து நிலைமை திருந்தும் வழியைக் கண்டார். சென்ற ஊர்களெல்லாம் அனுமார் கோயில் எழுப்பி இராம நாமத்தைப் பரப்பினர். கிருஷ்ணா நதிக்கரையில் சித்தாந்தவாடியில் ஓர் பெரிய அனுமார் கோயில் எழுப்பி நாளெல்லாம் இராமநாமம் முழங்கச் செய்தார். ஏராளமான தொண்டருக்கு இராம ஜபமீந்தார். சாதி சமய பேதமில்லாமல் அனைவரையும் அன்போடணைத்து மந்திரந் தந்து, சுதந்திரந் தந்து, ஆத்ம சாந்தியளித்தார் இராமதாசர்.

**உத்தவன்**

ஒரு நாள் அன்னபூர்ணா என்ற மாது இராமதாசரை வணங்கினாள். ''என்றும் சுமங்கலியாக நன்மக்களைப் பெற்று வாழ்க!'' என்று அவர் வாழ்த்தினர். அம் மாது ''சுவாமி என் கணவர் அங்கே அரவு கடித்து இறந்து கிடக்கிறார். நான் எப்படி சுமங்கலியாகி மக்களைப் பெறுவேன். என் கணவனை எழுப்பி யருள்க'' என்று வேண்டினாள். இராமதாசர் உடனே சென்று இராம ஜபம் செய்து தண்ணீர் தெளித்ததும் இறந்த கணவன் எழுந்து வணங்கினன். அன்னபூர்ணா நன்றியுடன் குருவைவணங்கினாள். இருவரையும் ஆசி கூறி ''உங்களுக்குப் பிறக்கும் முதற் பிள்ளை எனக்காகுக'' என்றார். அவ்வாறே குழந்தை பிறந்தது. உத்தவன் எனப் பெயரிட்டு அக்குழந்தையை வளர்த்து இராமதாசருக்கே அளித்தனர் பெற்றோர். இவர்களுக்கு எட்டு மக்கள் பிறந்தனர். அனைவரும் இராமதாசர் பணி நலம் பேணினர்.

**துக்காராம் வணங்கினர்**

இராமதாசர் சாதி வேற்றுமையில்லாமல் தூய நல்லோரைத் தொண்டராக ஏற்றார். ஒரு தரம் பண்டரிபுரத்தில் அந்தணர் பல கேள்விகளைக் கேட்டனர். அந்தப் பக்கம் சென்ற திருக்குலத்தானுக்கு ஆசியளித்து அந்தணருக்கு விடைகூறச் செய்தார், அன்பு வள்ளல். அதே மாதிரி ஒரு நாவிதனை ஏற்றுத் தீட்சையளித்தார். வேணுபாய் என்ற கைம் பெண்ணுக்கு மந்திரமளித்து, அறிவு மலர்த்தி, இராமாயணத்தை இசையுடன் பேசத் திறமை யளித்தார். திருவருட் பெரியாராக விளங்கும் இராமதாசரை ஒரு நாள் துக்காராம் கண்டார். வணங்கினர். துக்காராம் பாடல்களை இராமதாசர் கேட்டு உவந்தார்.

**சிவாஜிக்குச் சக்தியருளினர்**

துக்காராம் சிவாஜிக்கு இராமதாசர் பெருமையைச் சொன்னர். உடனே சிவாஜி பொன் மணிக் காணிக்கைகளுடன் குதிரை யேறிக் காடெல்லாம் தேடிச் சமர்த்த குருவைக் கண்டு வணங்கினன். காணிக்கைகளை முன் வைத்தான். தன்னையே காணிக்கையாகத் தந்தான். குருமணி அளவற்ற அன்பு காட்டிப் ''பண்டறம் வாழப் பார்நலம் புரிவாய்'' என்றார்.

எனதுடல் பொருளுயிர் எவையும் உன்னதே
உனதரு ளேயென துலகும் வாழ்க்கையும்
மனதுறு பசியினை மாற்ற மாதவக்
கனியென வந்தனை கடவுளே சரண்!

''தவக்கனலால் புவிக்குதவும் அருள் வள்ளலே, உனக்கு இணை நீயே; உன்னை அடையும் பேறு பெற்ற எனக்கிணை நானே; எனது காணிக்கைகளை ஏற்றருள வேண்டும்''.

இராமதாசர், சிவாஜி மன்னன் அளித்த செல்வத்தைச் சுற்றிலும் உள்ள ஏழையெளியவருக்கு அள்ளி யள்ளித் தந்தார். சிவாஜியை அன்பால் அள்ளி யணைத்துத் தவசக்தியை அவனுள்ளே வார்த்தார்.

''மாரதச் சுடரே! பாரத மணியே
வீரருக் கரசே பாரினுக் கொளியே
அறந்தாங் கிடவே பிறந்தாய் நீயே
துறந்துநான் செய்தவம் தூய வுனக்கே!
ஆற்றல் கொண்டாய் போற்றுக நாட்டை
நோற்ற சக்தியை ஊற்றினேன் உன்னுளே''

''மெத்தப் பயந்து வீரங் குன்றிச்
செத்த நாட் டிற்குச் சீவன் அளிப்பாய்!
குனிதலை நிமிரக் கொடுங்கோல் குமைய
மனிதர் மனிதராய் வாழச் செய்வாய்''

''ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம்'' எனும்
தாரக மந்திர சக்தியைப் பெருக்கிக்
கெடுதலை நீக்கிக் கீழ்மை யகற்றி
விடுதலை விளங்க வீறுகொண் டெழுவாய்
வாழ்கநின் கொற்றம்! வாழ்க நின் செங்கோல்!
வாழிய பாரதம்! வாழ்கபண் டறனே!''

என்று குருமணி வீரனுக்கு ஆசி கூறித் தவக் கனலை அவனது ஆதாரங்களில் வார்த்து அனுப்பினர்.

''ஆணை தாங்கி அவனியை யாளுவேன்
காண நின்ற கருணைக் கடவுளே''

என்று வணங்கிச் சிவாஜி புது மலர்ச்சியடைந்து சதாரா சென்று, பரலியிலும், ஸஜ்ஜன் காட்டிலும் குரு தேவருக்குத் திருமடம் கட்டி, அவரையே தனது அரச குருவாக ஏற்றான்.

### வெற்றிமேல் வெற்றி

அன்று முதல் வெற்றிமேல் வெற்றியே. அவுரங்கசீபு ஆக்ராவில் சிவாஜியை நயமாக வரவேற்றுச் சிறை செய்த சூழ்ச்சிகளில் தப்பினன் சிவாஜி. சதாராவில் சத்திரபதியாக முடி சூட்டிக் கொண்டு அறச் செங்கோலோச்சினன் (1674). எண்ணங்கள் நிறைவேறின! புண்ணியப் புகழ் பொலிந்தது. நாடு முழுவதும் சத்திரபதி சிவாஜியின் புகழ் பாடியது. சமர்த்த குரு, ஊர் ஊராகத் தொண்டரை அனுப்பி மக்களுக்கு நமது வேதாகம தருமத்தையும், தவ யோக சாதனத்தையும், உடலுயிர் மனத்திட்பத்தையும் விளக்கினர். சமய மலர்ச்சியால் நாட்டில் ஆத்ம சக்தியும் பக்தியும் அருள்மணத் தென்றலும் பரவின. உத்தவர், கல்யாணர் முதலிய தலைமாணவரைச் சிரகாம், சபாலா, கர்ஹட், ஷஹபூர், மாசூர், மிராஜ் முதலிய ஊரிலுள்ள திருமடங்களுக்கு அனுப்பினர். பதினெரு திருமடங்களும் திருக்கோவில்களும் அமைத்துச் சமர்த்த குரு அருளாட்சி நடத்தினர். அருளியலால் அரசியலும் ஆற்றலோங்கியது.

### குரு சேவை

குரு சேவையில் சிவாஜி கண்ணும் கருத்துமாயிருந்தான். ஒரு நள்ளிரவில் காட்டிற்குள் புகுந்து குரு தேவருக்காகப் புலிப்பால் கறந்து வந்தான். ஸஜ்ஜன் காட்டில், குரு தேவருக்காகப் பெரிய கோட்டை கட்டி வைத்தான். ஆயிரக் கணக்கான வேலையாட்கள் அக்கோட்டையை விரைவில் எழுப்பினர். சிவாஜி மனம் களி துள்ளியது. ஒரு தரம் இராமதாசர் அவனுக்குக் கடவுளருளே எல்லாம் என்பதை அறிவித்தார். மலைப் பாதையில் உள்ள ஒரு பாறையைப் பெயர்த்தார். அதைப் பலமாக அடித்து உடைத்தார். ஆ! உள்ளிருந்து ஒரு தேரை தாவியோடியது. ''சிவாஜி, கருப்பைக்குள் முட்டைக்கும், கல்லினுள்ளே தேரைக்கும் ஊட்டம் கொடுக்கும் கடவுளே உன் ஆற்றலுக்கும் ஏற்றங் கொடுத்தார். பெருமை அவனுக்கே—அவனே செய்விப்பான்'' என்று குருநாதர் விளக்கினர்.

### அரசு நின்னதே

ஒரு நாள் சமர்த்த குரு, தமது சீடருடனே சதாராவில்இராமநாமம் பாடிக்கொண்டு பிச்சையெடுத்தார். அவர் அரண்மனை முன்னே வந்து ''ஸ்ரீராம் ஜயராம்'' பாடியபோது சிவாஜி ஒடி வந்து வணங்கிப் பிச்சைப் பாத்திரத்தில் ஒரு சீட்டெழுதிப் போட்டார். குரு மணி படித்தார். ''என்னை உய்வித்த இறைவா, என் அரசு முழுதும் நினதே; காணிக்கையாக ஏற்றருள்க''. அப்படியானல் இந்தா என் பிச்சைப் பாத்திரம்; ஐயம் புகு, நான் அரியணை வகிக்கிறேன் என்ருர் குரு மணி. சிவாஜி மன்னன் பாத்திரத்தைப் பெற்று இராமநாமம் பாடிக் கொண்டே பிச்சை எடுத்து வந்தான். குருவைக் காணேம்.

### ஆளப் பிறந்த சிங்கம்

இதற்குள் சமர்த்த குரு அரண்மனையுட் சென்று, தமது காவிக் கொடியை அங்கே நாட்டி, தமது மிதியடியை அரியணையேற்றி, ''ஆளப் பிறந்த ஆண் சிங்கமே—அரியணை வகித்து ஆள் . .'' என்று எழுதி வைத்துத் தமது தவப்பள்ளிக்கே சென்று விட்டார்.

பிச்சை யுணவு கொண்டு வந்த சிவாஜி பார்த்தான். குருவைத் தேடி விரைந்தான். இராமதாசர் ஆற்றங்கரைக் காட்டில் தியானித்திருந்தார். சிவாஜி உணவை அவர் முன்வைத்து வணங்கி ''இறைவா நான் காட்டில் தவம் புரிவேன், தாங்களே நாட்டையாளலாமே'' என்ருன்.

### தாசபோதம்

இராமதாசர், மன்ன—மாணவனை நோக்கி, ''அன்பா, எனக்கு அரணியம்; உனக்கு அரியணை. போ, ஆள், உலகைக் காப்பாற்று'' என்ருர். ''எப்படி ஆளுவது?'' பொன்முடியின் பளுவை எப்படித் தாங்குவது? அரசியற் பான்மையை அருள்புரிவாயே'' என்று வணங்கினர். அப்போதுதான் தாசபோதம் புறப்பட்டது. உலகின் தலைசிறந்த அருளாட்சி நூல் அதுவே. அது திருக்குறள், கீதை, சாணக்கியர் அர்த்த சாத்திரம் எல்லாம் சேர்ந்த கதம்பமாயுள்ளது. அதன் கருத்தைச் சொல்லி முடிப்போம் :

தெளிவுறக் கேளாய் திண்டிறல் வீரா
ஊழ்வலி யாலே உலைந்தநா டுய்யத்
தோள்வலி வேண்டும்; வாள்வலி வேண்டும்.
போர்முர சார்த்ததும் புயங்கள் விம்ம
வீரப் படைகள் விடுதலை முழக்குக!
சிங்கம் போலத் தீயிடைப் பட்ட
தங்கம் போலத் தியாகிகள் வேண்டும்.
திறமை வேண்டும் தீமை தீரவே
அறச்சமர் புரியும் ஆற்றல் வேண்டும்.
பெண்டிர் கற்பும் பெரியார் தவமும்
தொண்டர் நலமும் தூயநல் லறமும்
ஆக்களும் சேய்களும் அமைதியாய் வாழக்
கோக்கள் புயவலி வீக்குதல் இனிதே.
கடற்படை தனையும் கண்ணெனக் காப்பாய்!
அருச்சுனன், வீமன், அனுமன் போலே
திருத்தகு வீர தீரர் வேண்டும்.

நீயே வீரன்! நாட்டை நடத்து; எனது காவிக் கொடி பறக்கட்டும். தாசபோதமே உனக்கு வழிகாட்டி. செல், நில், வெல்! என்று ஆசி கூறினார் குருதேவர். சிவாஜி புதிய சக்தி பெற்றுச் சமர்த்த குருவைப் பணிந்து கண்ணீர் மல்க விளம்பினான் :

அறிவு தந்தநின் அன்பருள் இன்றுயான்
சிறகு இழந்த சிறுகிளி போலுவேன்
மறவி யஞ்சிநின் மாணடி பற்றினேன்
இறைவ வேறெனக் கோர்கதி யில்லையே

என்று இறைஞ்சினான். அருள்வழி நின்று குருவின் பாதுகையை அரியணையேற்றினான். அதன் கீழ் அமர்ந்து அறம் வாழ அரசு செய்தான். சிவாஜி நாற்பத்தைந்து நாட்கள் சஜ்ஜன்காட்டு மலைக் கோட்டை மேல் இராமதாசருடன் இருந்து சாதனம் செய்தான். துறவிகளுக்கும் புலவர்களுக்கும் அள்ளிக் கொடுத்தான். 1680 சித்திரை மாதம் சிவாஜி வீர விண்ணடைந்தான். சிவாஜி மகன் சாம்பாஜி இராமதாசர் அருளைப் பெற்று ஆண்டான். எனினும் எதிரிகள் கையிற் சிக்கி யிறந்தான். 1681 இல் சஜ்ஜன்காட்டுக் கோட்டையில் இராமனுருவை நாட்டித் திருவிழா முழக்கினார் இராமதாசர். உத்தவர், கலியாணர், தினகரர், சிமன்பாய் முதலிய அன்பருக்கு இறுதிமொழி கூறினார்.

எண்ணரிய வினையுடலை எடுத்த மாந்தர்
இருவினைதீர் இறைவனையே எண்ணி அன்பு
பண்ணிடுக; பாருக்கு நலமே செய்க;
பரிதியினை வான்மழையைப் பார்த்துப் பார்த்து,
புண்ணியங்கள் போற்றிடுக; தீமை போக;
பூவுடனே மணம்போலும் புவியைப் பார்க்கும்
கண்ணுடனே கதிர்போலும் உயிர் கலந்த
கடவுளருள் காப்பாற்றும் அரனே போற்றி!

1881-இல், இராம நவமியன்று சுற்றிலும் இராம நாமம் முழங்க ''ஹரஹர ஹர ஓம்'' என்று சிவ நாமத்துடன் இராமதாசர் இறைவனடி சேர்ந்தார். மாணவர் ஆசான் அருட்பணிகளை இனி துறப் பேணி நடத்தினர். ''உள்ளம் ராமதாஸ், உடலம் சிவாஜி'' யானால் வாழ்வு அருள் வீரக் கனலாகி வெற்றி பெறும். நான், ஒரு மாதம் சஜ்ஜன்காட்டு மலை மேலிருந்து தவம் புரிந்து, சிவாஜி—ராமதாஸ் வரலாற்றைப் பாடிப் பாரத சக்தி மகா காவியத்திற் கோத்தேன். அன்பர் படித்தறிக.

*


## அருள்திரு ஆதிநாதர் ஆழ்வார் திருக்கோயில்

**ஆழ்வார்திருநகரி, திருநெல்வேலி மாவட்டம்.**

கலி பிறந்த நாற்பத்து மூன்றும் நாளில் விசாகத்தில் திருவழுதி வளநாட்டுத் திருக்குருகூரில் உடைய நங்கையாருக்கும் காரியாருக்கும் மகனாய்ப் பிறந்தார், மாறன் சடகோபன். சடம் என்னும் காற்றைக் கோபித்துக் கருவிலேயே திருவுடன் கண்விழியாமலும், தாய்ப்பாலுண்ணாதும் உள்ளொளியுடன் உருவும் திருவும் பெற்று வளர்ந்ததால், சடகோபன் என்னும் காரணப் பெயர் ஏற்பட்டது. இக்குழந்தை பிறந்தது முதல் கண்களை மூடிக் கொண்டு, எம்பெருமானது நினைவே உடையராயிருந்தார். இவ்வாச்சரியத்தைக் கண்ணுற்ற பெற்றோர்கள் உரியநாளில் ஆதிநாதனைத் தரிசிக்கவே, இக்குழந்தை திருச்சுற்றில் மெல்லத் தவழ்ந்து சென்று ஆதிசேடனின் அம்சமெனத் திகழும் திருப்புளி மரத்தினடியில் பத்மாசனமிட்டு அமர்ந்து ஞான முத்திரைக் கையாய் யோகத்திலமர்ந்து அன்ன பானாதிகளை விட்டுத் தேக வளர்ச்சிக்குக் குறைவில்லாமலிருந்து வந்தார்.

ஆழ்வார் நான்கு வேதத்தின் சாரங்களையும் திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்று நான்கு பிரபந்தங்களில் அருளிச் செய்தார். மதுரகவியாழ்வார் அவற்றைப் பட்டோலை செய்து கொண்டார். இத்திருப்புளி தல விருட்சமாகும். ஒரே மரமாகவிருந்த போதிலும் ஏழு பாகங்களாகப் பிரிந்திருக்கிறது. இம்மரத்தில் காய்கள் காய்த்தபோதிலும் பழுக்காமல் உதிர்ந்துவிடும். இரவில் இலைகள் தூங்காமல் (ஒன்று கூடாமல்) இருக்கும். உறங்காப் புளி எனக் காரணப் பெயரும் உண்டு. இத்தலம் திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் போகும் வழியில் 33-வது கிலோ மீட்டரில் உள்ளது. காலை 7-30 முதல் 11-30 தரையிலும், மாலை 5-30 முதல் 8-30 வரையிலும் சுவாமி தரிசனம் பண்ணலாம். சுமார் ஒரு லட்சம் ரூபாயில் இத்திருக்கோயிலில் திருப்பணி வேலைகள் நடைபெற இருப்பதால் பக்தர்கள் திருப்பணிக்குத் தாராளமாய் நிதி உதவி அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இரா. பாலையாத் தேவர்,
அறங்காவலர் குழுத் தலைவர்.

எஸ். குத்தாலலிங்கம்,
செயல் அலுவலர்.

கே. ஆறுமுக முதலியார், வி. ஆண்டிக்கோனார், எ. செல்லையா,
அறங்காவலர்கள்.

# இறைவனை உள்ளத்தே வைப்போம்

கே. எஸ். ஜெகன்னாதன்

நெல்லுக்குள் அரிசியையும்,
சொல்லுக்குள் கருத்தையும்
வைத்தவன் எவன்?
அவன்தான் ஆதிமூலம்!
வித்திலிருந்து மரம் உண்டாகிறது.
மரத்திலிருந்து வித்து உண்டாகிறது.

இதுபோலவே

பரம்பொருளுக்கும் பாமர மக்களுக்கும் இருக்கும் சம்பந்தமாகும்.

கடலும் அதன்மீது எழுந்து மடியும் அலையும் ஒன்றே!

உப்பு கரையும்போது உப்பும் நீரும் ஒன்றே!

மணமுள்ள கற்பூரம் எரியும்போது தீயும் கற்பூரமும் ஒன்றே!

அதுபோல இறைவனும் அடியாரும் ஒன்றுகின்றனர்.

ஒன்றாகி ஒளியாகி நின்று காக்கின்ற இறைவன் ஆதியந்தம் இல்லாதவன்.

எங்கும் நிறைவான ஜோதியாகி இணையில்லாத அருளைத் தருகின்றவன்.

அருளைப் பெறுகின்ற அடியார்கள் அவன்பால் அன்பு செலுத்துகின்றனர்.

'அன்பு' தன்னைத் தானே மறக்கச் செய்யும் ஆற்றல் கொண்டது.

எவரிடத்து அன்பு உண்டாகிறதோ, அவருக்கே தன்னை ஒப்புவிக்கச் செய்யும்.

அன்பு செய்பவருடைய மனதையும் அந்த அன்பை ஏற்பவருடைய மனதையும் இளகச் செய்து, அன்பு அவ்விருவரையும் ஒன்றாக்கும்.

இருவருக்கும் வேறுபாடு உள்ளது என்னும் நினைவை இருவருடைய மனதிலிருந்தும் நீக்கிவிடும்.

நெஞ்சிற் பெருகும் பக்தி பரவச நிலையை அடையும்போது தன்னைப் பற்றிய நினைவே ஒழிந்து போகும்.

தான் என்ற எண்ணம் அழியும்போது அங்கே அவன் அன்பு மயமாகிறான்.

அன்பு இறைவனது அடியார்களோடு உறவாடத் தூண்டுகிறது.

அன்புமயமான உள்ளம் பிறர் தமக்குச் செய்யும் துன்பங்களைத் தாங்குகின்றது.

துன்பம் செய்கிறவர்கள் மீது கருணையைப் பொழிகின்றது.

தான் என்ற அகந்தையை அழித்துவிட்டுப் புல்லைக் காட்டிலும் தாழ்மையாக இருந்து பழகிட முயற்சிக்கின்றது.

சிறிய வித்திலே உருவாகி வளர்ந்து பெரும் படைக்கும் தன்னை வெட்டி வீழ்த்தும் வரை நிழல் தரும் ஆலமரம் போலப் பொறுமையாய் இருக்க மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நமக்கு மரியாதை தரவில்லை என்பதை எண்ணி மனதைத் தளர விடாமல், அவரிடத்தே மிகவும் மரியாதை காட்டு. இதுவே அன்பின் உயர்நிலையாகும்.

பொருளுக்காகவோ, ஆடம்பரத்திற்காகவோ, புகழுக்காகவோ வாழ்வதை விட அன்புக்காக அறநெறிக்காக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இவை ஒவ்வொன்றிலும் உண்மையான அன்பைக் காணமுடிகிறது.

உண்மையான அன்பு உருவாகும்போது நெஞ்சம் அன்பால் விம்மிப் பூரிக்கும்.

அப்போது ஞானசாதனங்களைப் பழக வேண்டும்.

நெஞ்சில் உள்ள அழுக்கைச் சிறிது சிறிதாகப் போக்க வேண்டும்.

நெஞ்சத்து அழுக்கு அகற்றப்பட்டால் ஞான சாதனங்களிலிருந்துபேரவா உண்டாகும். பேரவா உண்டாகும்போது உள்ளம் ஆண்டவனின் அடிகளை நினைந்து பாடும்.

ஆண்டவனின் அடிகளை நினைந்து பாடும் போது நெஞ்சத்தில் நெகிழ்ச்சி உண்டாகிறது.

நெஞ்சம் நெகிழ்ந்து அவனை எண்ணும் போது அருளை வேண்டுபவன் அழுவான், சிரிப்பான், ஆடுவான், பாடுவான். தன்னை மறந்த நிலையில் இறைவனிடத்தில் அவனது உள்ளத்தை ஐக்கியப்படுத்துகிறான்.

இறைவனிடத்து ஐக்கியப்படும்போது மனம் உருகும்.

உருகிய மனம் அன்பினால் ஜொலிக்கும்.

விண்ணிலேயிருக்கும் வெண்ணிலாவைக் கண்டு அல்லி மலர் தண்ணீரிலே மலர்கிறது.

உதயசூரியனின் ஒளிக் கிரணங்கள் பட்டுத் தாமரை இதழ் விரிகிறது.

இது இயற்கையின் நியதி என்று கவிஞர்கள் கூறுவார்கள்.

ஆனுல் இது அவன் அருளால் நிகழ்த்தப் படும் நிகழ்ச்சிகள். இவை ஞானமில்லார்க்குப் புலனுகாது.

இத்தகைய பக்தி அழியாத் தன்மையுடையது.

எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டிருக்கிருன் இறைவன்.

அவனை அன்போடு அறநெறியோடு வழி படுகின்றவர்கள் மீது கருணையைப்பொழிகிருன்.

நம்மை அறியாமலே நம்மீது அன்பு செலுத்துகிருன். எந்த வகையிலாவது நமக்கு நன்மைகளைச் செய்கிருன்.

இதைத்தான் கீதையில் கண்ணன்,

''என்னைப் பக்தி செய்பவர்கள் நான்கு வகைப்பட்டவர் உளர்; அவராவர் : ஆர்த்தர், ஜிஞ்ஞாசு, அர்த்தார்த்தி, ஞானி என்பவர்களே'' என்கிருர்.

''துன்பம் வந்தபோது அத்துன்பம் போக்கிட ஆண்டவனை அன்போடு அடிதொழுது துன்பத்தை நீக்கிக் கொள்கின்றவர்கள், "ஆர்த்தராவர்."

இதற்கு எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமாயின் துரியோதனன் அவையிலே துச்சாதனனுல் திரௌபதியின் துகில் உரியப்படும் போது ''கண்ணு நீயே காப்பாய்'' என்றுபேரன் போடு வேண்டித் துகில் சுரக்கப் பெற்று அவமானத்திலிருந்து நீங்கியது உதாரணமாகும்.

இச்சையை ஆண்டவனே நிறைவேற்ற வல்லோன் என்பதறிந்து ஆண்டவனை வணங்குவோர் ''ஜிஞ்ஞாசுகளாவர்''.

தங்களது ஏழ்மை நீங்கிப் பொன்னும் பொருளும் வேண்டி ஆண்டவனை ஆசையோடு வழிபடுவோர் ''அர்த்தார்த்திகளாவர்''.

மெய்ஞ்ஞானம் பெற்று எதையுமே வேண்டிடாது, உள்ளத்தில் தோன்றும் உண்மை அன்பினுல் இறைவனை வழிபடுவோர் ''ஞானிகளாவர்''.

இப்படி இறைவனை வணங்குவோரில் அவரவர் உள்ளப் பாங்கினுக்கு ஒப்ப இறைவன் அவர்களிடத்து அன்பு கொண்டு அருள் சுரக்கின்றுன்.

அவன் சுரக்கும் அருளை நாமும் அடைந்திட அன்பு வழி நடப்போம். இறைவனை உள்ளத்தே வைப்போம்.



திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் திருக்கோயிலின் ஆயிரங்கால் மண்டபத்தில் அமைக்கவிருக்கும் கலைக்கூடத்திற்கு 29-10-74 ஆம் நாள், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் தலைமையில், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் கால்கோள் நடத்தினுர்கள்.

# வள்ளலாரும் காந்தியடிகளும்

தவத்திரு ஊரன் அடிகள்

இத்தலைப்பில் பலர் பேசக் கேட்டுளேன். எடுத்த எடுப்பிலேயே சிலர் 'வள்ளலாரே காந்தியடிகளாக அவதரித்தார்' எனப் பேசத் தொடங்குகின்றனர். வள்ளற் பெருமானுக்கு அதுவே இறுதிப் பிறவி, மறுபிறவி இல்லை என்பது ஒரு புறமிருப்ப, வள்ளற் பெருமான் சித்திபெறும் முன்பே காந்தியார் பிறந்துவிட்டாரென்பதையும், வள்ளற் பெருமான் இறைவனேடிரண்டறக் கலந்தபோது காந்தியார்க்கு அகவை ஐந்தென்பதையும், அந்தோ! அவர் கருதிலர் போலும்.

வள்ளலார் காலம் : *5-10-1823—30-1-1874*

காந்தியடிகள் காலம் : *2-10-1869—30-1-1948*

வள்ளலார் அக்டோபர் 5-ல் பிறந்தார். காந்தியடிகள் அக்டோபர் 2-ல் பிறந்தார். இருவரும் ஜனவரி 30-ல் ..... இராமலிங்க அடிகள் திருவருளைப் பிரகாசிக்கச் செய்து அதனை வரையாது வழங்கும் 'வள்ளலார்' ஆனார். காந்தியடிகள் அரசியலில் அறத்தைப் பிரகாசிக்கச் செய்து, சத்தியத்தைச் சோதிக்கும் வாழ்க்கை நடாத்தி 'மகாத்மா' ஆனர்.

நாமெல்லாம் சாதாரண ஆத்மாக்கள். நம்மில் துராத்மாக்களும், அதமாத்மாக்களும் உண்டு. காந்தியடிகளோ மகாத்மா. இராமலிங்க அடிகளோ மகாமகாத்மா, பரமாத்மா. நம்மைப் போன்ற மற்ற ஆத்மாக்கள் தத்தமக்கென்றே வாழ்கின்றனர். ஆனல் இம்மகாத்மாக்களோ தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தனர். ஆன்மகோடிகளெல்லாம் வாழ, வாழ்ந்தனர்.

வள்ளற்பெருமானின் வாழ்க்கை அருளியல் வாழ்க்கை. காந்தியடிகளின் வாழ்க்கை அரசியல் வாழ்க்கை. முன்னவர் தொண்டு அருளியற்றெண்டு. பின்னவர் தொண்டு அரசியற்றெண்டு. ஆனுலும் காந்தியடிகளின் அரசியல் வாழ்க்கையில், தொண்டில், அருளியல் கலந்திருந்தது. காந்திய அரசியலில் வள்ளலாரின் அருளியல் காணப்படுகிறது. வள்ளலாரின் அருளியலில் காந்தியம் அடக்கம். எல்லா அரசியல்வாதிகளுக்கும் அருளியல் தெரியாது. எல்லா அருளாளர்க்கும் அரசியல் தெரியும். ஆன்மஞானியாகிய வள்ளலாருக்கு அரசியல் தெரியாததல்ல. ஆன்மஞானிகள் மற்ற எல்லா ஞானத்தையும் உடையவர்கள். வள்ளாலரின் அரசியல் ஞானத்திற்கு அப்பெருமானின் ஓரிரு பாடல்களே, ஓரிரு சொற்களே போதும். அரசியல் ஞானியாகிய காந்தியடிகள் ஆத்மஞானியாகவும் திகழ்ந்தார். அரசியலில் ஆன்மிகத்தைப் புகுத்துகிருர் என்று காந்தியடிகளிடம் பலர் குறைப்பட்டதுண்டு. நேருவே குறை கூறிய நேரமும் உண்டு.

**வள்ளற் பெருமான் பாடுகின்ருர்:**

கருணைஇலா ஆட்சி கடுகி ஒழிக
அருள்நயந்த சன்மார்க்கர் ஆள்க-தெருள்நயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்
தெல்லோரும் வாழ்க இசைந்து.

அனைத்துலகையும் வாழ்விக்க வந்த வள்ளலார் ஒழிக எனப் பாடினர். ஆணவத்தை, மாயையை, கன்மத்தை, ஐம்புலச் சேட்டையை ஒழிக, ஒழிக என்று பாடிய பெருமான், கருணையிலா ஆட்சியையும் ஒழிக என்று பாடினர், கடுகி ஒழிக எனப் பாடினர், சாடினர். கருணைஇலா ஆட்சி கடுகி ஒழிக என முதலடியிற் கூறிய பெருமான் எல்லாரும் வாழ்க இசைந்து என இறுதியடியிற் கூறினர். பாடலில் ஒரு 'ஒழிக', ஒரு 'வாழ்க'. எப்படி ஒழிக? கடுகி ஒழிக. எப்படி வாழ்க? இசைந்து வாழ்க. ஒழிவது எதற்காக? வாழ்வதற்காக. ஒழிய வேண்டியது ஒழிந்தாலன்றே, ஒழிக்க வேண்டியதை ஒழித்தாலன்றே, வாழ வேண்டியபடி வாழலாம். ஒழிய வேண்டியது எது? கருணையிலா ஆட்சி. ஒழிக்கப்பட வேண்டியது எது? கருணையிலா ஆட்சி. வாழ வேண்டியது எது? நாடு. நாட்டு மக்கள் எல்லாரும். வாழ வைக்கப்பட வேண்டியது எது? நாடு. அதன் மக்கள் எல்லாரும். வெண்பா நாலடிப் பாட்டு—அடிக்கு நான்கு சீர்கள். இந்த நாலடி நாற்சீர் வெண்பாவிலே அடிகள் நான்கு கட்டளைகளை இடுகின்ருர். முதற் கட்டளை—கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக. இரண்டாவது கட்டளை—அருள்நயந்த சன்மார்க்கர் ஆள்க. மூன்ருவது கட்டளை—தெருள்நயந்த நல்லோர் நினைத்த நலம் பெறுக. நான்காவது கட்டளை—நன்று நினைத்து எல்லோரும் வாழ்க இசைந்து. ஒழியவும் வாழவும் பாடிய இது சாபாநுக்கிரகப் பாட்டு. ஒன்றைச் சபித்தார். மற்ருென்றை அநுக்கிரகித்தார். வள்ளற்பெருமான் சாபாநுக்கிரக சக்தியுடையவரன்றே? சபித்தது எதனை? கருணையிலா ஆட்சியை. அநுக்கிரகித்தது எதனை? அந்த ஆட்சியால் அல்லற்பட்டு ஆற்ருது அழுத குடிமக்கள் எல்லாரையும். கருணையிலா ஆட்சி கடுகி ஒழிந்தால் எல்லாரும் இசைந்து வாழலாம். எல்லாரையும் இசைந்து வாழவிடாமல் பிரித்தாளும் கருணையிலா ஆட்சி ஒழியத்தானே வேண்டும். கருணையற்ற ஆட்சி ஒழிந்தபின் வேறு யார் ஆள்வது. அருள் நயந்த சன்மார்க்கர் ஆள வேண்டும். அவர்கள் ஆள அருள்கின்ருர் வள்ளலார். 'அருள் நயந்த சன்மார்க்கர் ஆள்க' என்று. பின்னுளில் வந்த காந்தி

யடிகள் கருணையிலா ஆட்சியை ஒழிக்கவும் அருள்நயந்த சன்மார்க்க ஆட்சியை ஏற்படுத்தவும் வாழ்நாளெல்லாம் பாடுபட்டார். இரு பெரியோர்களது ஒன்றுபட்ட கொள்கைகள் சிலவற்றைக் காண்போம்.

**சீவகாருண்யம்—அகிம்சை:**

வள்ளற் பெருமானது கொள்கையை ஒரு சொல்லிற் சொல்ல வேண்டுமாயின் சீவகாருண்யம் என்று சொல்ல வேண்டும். காந்தியடிகளின் கொள்கையை ஒரு சொல்லிற் சொல்ல வேண்டுமாயின் அகிம்சை என்று சொல்ல வேண்டும். வள்ளலார் சீவகாருண்யத்தின் திருவுருவாக விளங்கினர். காந்தியடிகள் அகிம்சையின் திருவுருவமாகத் திகழ்ந்தார். சீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளலார். சத்தியமே கடவுள்; அக்கடவுளை அடைதற்கு அகிம்சையே வழி என்றார் காந்தி. ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்று பாடுமளவுக்கு வள்ளலாரின் சீவகாருண்ய உள்ளம் உயர்ந்திருந்தது. ஆசிரமத்திலுள்ள மலர்ச் செடிகளிலிருந்து மலர்களைப் பறிக்க வேண்டா எனக் கட்டளையிடுமளவுக்குக் காந்தியாரின் அகிம்சை உள்ளம் உயர்ந்திருந்தது. இந்தக் கட்டளைக்குப் பின்னர்க் காந்தியடிகளின் கழுத்து மலர் மாலைகளைத் தாங்கவில்லை. கதர் மாலைகளையே தாங்கிற்று.

**சத்தியம்:**

இருவரும் சத்திய வாழ்க்கை வாழ்ந்தவர்கள். சத்திய வடிவில் இறைவனை வழிபட்டவர்கள். 'இயற்கை விளக்கம் என்கின்ற சத்திய ஞான சபைக்கண்ணே, இயற்கை உண்மை என்கின்ற சத்தியத் திருவுருவினராய், இயற்கை இன்பமென்கிற சத்தியத் திருநடஞ் செய்தருள்கின்ற இயற்கைத் தனிப் பெருங்கருணைத் தனிப் பெரும் பதியாய தனித் தலைமைக் கடவுளே!' என இறைவனை விளித்து வேண்டினர் வள்ளலார். தாம் கண்ட சன்மார்க்க சங்கத்திற்குச் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்றும், தருமச் சாலைக்குச் சத்திய தருமச்சாலை என்றும், ஞானசபைக்குச் சத்தியஞான சபை என்றும் சத்தியப் பெயர்களை இட்டார்.

காந்தியடிகள் சத்தியத்தையே கடவுளாகக் கொண்டார். கடவுள் சத்திய வடிவினர் என்று சொல்லி வந்தவர் பின்னாளில், சத்தியமே கடவுள் என்றார். அக்கடவுளை அடைதற்கு அகிம்சையே வழி என்றார். சத்தியத் தெய்வத்திற்கு அகிம்சை வழிபாடு செய்தவர் காந்தியடிகள். சத்தியமும் அகிம்சையும் அவரது இரு கண்களாக விளங்கின. ''அகிம்சை என் கடவுள். சத்தியம் என் கடவுள், நான் அகிம்சையை நோக்கும்போது, அதனை என் வாயிலாகக் காண் என்று சத்தியம் கூறுகிறது. சத்தியத்தை நோக்கும்போது, அதனை என் வாயிலாகக் காண் என்று அகிம்சை கூறுகிறது. சத்தியமும் அகிம்சையும் பிரிக்கவியலாதபடி ஒன்றாகக் கலந்துள்ளன. இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கம் போன்றன. அல்லது ஒரு பக்கமும் முத்திரையிடப் படாத, எது முன் பக்கம், எது பின் பக்கம் எனக் கூறவியலாத ஒரு மெல்லிய தகடு போன்றது. அடைய வேண்டிய நிலை சத்தியம். அதனை அடைதற்கான வழி அகிம்சை'' என்பது காந்தியடிகளின் வாக்கு. சத்திய வாழ்க்கை வாழ்ந்தமையாற்றான் தனது வரலாற்றைத் தானே எழுதி அதற்குச் சத்திய சோதனை என்று பெயரிட்டார். சத்திய சோதனை என்று தன் வரலாற்றுக்குப் பெயரிடும் துணிவு யாருக்கு வரும்? சத்தியத்தைச் சோதித்த ஒருவருக்குத்தானே வரும். சத்தியத்தைப் போதித்தவர் பலர். சோதித்தவர் காந்தி. காந்தியடிகள் சத்தியத்தைச் சோதித்தார். பின்னரே போதித்தார்.

**புலால் மறுத்தல்:**

சீவகாருண்ய வாழ்க்கை, அகிம்சை வாழ்க்கை, சத்திய வாழ்க்கை, புலான் மறுத்தலையின்றி அமையாது. இருவருமே புலான் மறுத்தவர்கள். புலான் மறுத்தலை வற்புறுத்தியவர்கள். இருவருமே புலாலுண்ணுத மரபில் வந்தவர்கள். வள்ளற் பெருமான் புலான் மறுத்தலில் கண்டிப்பாக இருந்த அளவுக்கு வேறெதிலும் கண்டிப்பாக இருந்ததில்லை. எதிலும், எல்லாவற்றிலும் ஒன்று ஒன்று என்று சொல்லி ஒருமைப்பாட்டைக் கண்ட வள்ளற் பெருமான் புலையுண்ணல் ஒன்றை மட்டும் வைத்து அஃதுண்பார் புறவினத்தார், அதனை மறுத்தார் அகவினத்தாரென ஈரினங்களைச் சுட்டினர். காந்தியடிகள் மரபு வழியே புலான் மறுத்தவராக யிருந்தும் இளமையில் இங்கிலாந்திலிருந்த காலையில் ஒரிருமுறை அதனைச் சுவைத்துவிட்டார். பின்னர் அதற்குப் பெரிதும் வருந்தினர். பின்னாளில், உயிர் பிழைக்க இன்றியமையாதென மருத்துவர்களால் சிபாரிசு செய்யப்பெற்ற போதும் ஏற்க மறுத்தார்.

**புலனடக்கம்; பிரம்மசரியம்:**

வள்ளலார் துறவி. காந்தியடிகள் குடும்ப வாழ்க்கையிலேயே ஒரு காலத்துக்கு மேல் பிரம்மசரியத்தைக் கடைப்பிடித்தவர். துறவு வாழ்க்கைக்கும் பிரமச்சரிய வாழ்க்கைக்கும் புலனடக்கம் இன்றியமையாதது. இருவருமே புலனடக்கம் கைவரப் பெற்றவர்கள். புலனடக்கத்தை வற்புறுத்தியவர்கள். 'யாகாவா ராயினும் நாகாக்க' என்றார் வள்ளுவர். யாவும் காத்து நாவும் காத்தவர் காந்தியடிகள். நாவை இரண்டு வகையிற் காக்க வேண்டும். ஒன்று சுடு சொல்லிலிருந்து. மற்றொன்று சுவை விருப்பத்திலிருந்து. இவ்விரு வகையிலும் நாவைக் காத்தவர் காந்தி. வள்ளலாரும் 'சோற்றிலே விருப்பம் சூழ்ந்திடில் ஒருவன் துன்னு நல்தவம் எலாம் சுருங்கி ஆற்றிலே கரைத்த புளி எனப் போம்' எனப் பாடியருளினர். நாவின் சுவைக்கு அடிமையானவர் பிரமச்சரியத்தைக் கடைப்பிடிக்க இயலாது என்றார் காந்தியடிகள். வள்ளற் பெருமானைப் போலவே காந்தியடிகளும் எளிய வாழ்க்கை வாழ்ந்தவர். அவருக்குப்பின் அவரது உடைமைகளாக எஞ்சியவை, இரண்டு உணவுக் கிண்ணங்கள், ஒரு மரக் கரண்டி, குத்தி உண்பதற்கான ஒரு முள் கருவி, பிரார்த்தனைப் புத்தகம், டயரி, கடிகாரம்,

மூக்குக் கண்ணுடி, காகிதம் கிழிக்கும் கத்திகள், கோழை உமிழும் படிக்கம், பாதக் குறடு, தோற் செருப்பு, பளிங்கினுலான குரங்குப் பொம்மைகள் ஆகிய சிலவே. இவற்றுள் குரங்குப் பொம்மைகள் உலகைக் கவர்ந்தவை. மூன்று குரங்குகள் வரிசையாகக் குந்தியிருக்கும். ஒன்று இரு கைகளாலும் வாயைப் பொத்தி யிருக்கும். மற்ருென்று இரு கைகளாலும் இரு காதுகளேயும் பொத்தியிருக்கும். இன்னுென்று இரு கைகளாலும் இரு கண்களேயும் பொத்தி யிருக்கும். தீயன சொல்லாதே தீயன கேளாதே, தீயன பாராதே என்பதை அவை காட்டுகின்றன. பொம்மைக் குரங்குகள் காட்டுகின்றன. நமது மனக்குரங்கு கேட் கிறதா? வள்ளலாரும் காந்தியடிகளும் மனக் குரங்கை அடக்கி ஆட்டிப் படைத்தவர். நம் மையோ மனக் குரங்கு ஆட்டிப் படைக்கிறது.

**யான் எனது என்னும் செருக்கறுத்தல்:**

''யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்
வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்''

என்ருர் வள்ளுவர். வள்ளலாரும் காந்தியடி களும் யான் எனது என்னும் செருக்கை அறுத் தவர்கள். எனது என்று சொல்லிக் கொள்ளு தற்கு இவர்களிடம் எதுவும் மிகையாக இருந்த தில்லே. தம்மை அடிகள் என்ருே, சாமி என்ருே பிறர் வழங்குவது வள்ளற் பெருமானுக்குச் சம்மதமில்லே. அங்ஙனம் வழங்காமை வேண் டும் என்று கட்டளேயிட்டார். மக்கள் தம் காலில் விழுந்து வணங்கியபோது அதைத் தாம் ஏற்றுக் கொள்ள முடியாதென்றும், அது தகாது என்றும் தடுத்தார் காந்தியடிகள். தமக்குக் கோயில் கட்டும் முயற்சி எழுந்தபோதும் அவ் வாறே தடுத்தார். மகாத்மா என்று போற்றப் பட்டபோது அவ்வாறு போற்றப்படுதல் தமக்குச் சம்மதமல்ல வென்றும், தான் மகாத்மா அல்லவென்றும், எல்லாரையும்போல் சாதாரண ஓர் அல்ப ஆத்மாவே என்றும் கூறினுர்.

**சீர்திருத்தம்:**

இருவரும் சீர்திருத்த வாதிகள். சாதி முதலிய வேறுபாடுகளே இருவரும் வெறுத்தவர் கள். 'சாதியிலே மதங்களிலே சமய நெறி களிலே ஆதியிலே அபிமானித்து அலேகின்ற உலகீர், அலேந்து அலேந்து வீணே நீவிர் அழிதல் அழகலவே' என்று பாடினுர் வள்ளலார். 'எங் குலம், எம்மினம் என்பது தொண்ணூற்ருறங் குலம்' எனச் சாடினுர். எங்குலம் என்பது 96 அங்குலம் என்பதற்கு என்ன பொருள்? 12 அங்குலம் கொண்டது ஒரு சாண். 96 அங்கு லத்திற்கு 8 சாண். உடம்பு அவரவர் கையால் எட்டுச் சாண். எண்சாண் உடம்பிற்கே சாதி யும் குலமும் அல்லது உயிருக்கு இல்லே என்பது கருத்து. தீண்டாதார் என்று தாழ்த்தப்பட்ட மக்களே ஹரிஜனங்களாக்கினுர் காந்தியடிகள். தன் பூணூல் அறுந்து போன பின்பு புதிதாகப் பூணூல் போட்டுக் கொள்ளவில்லே. முன்னேய பெரியோர்கள் நாராயணனேக் கண்டார்கள். காந்தியடிகள் புதிதாகத் தரித்திர நாராயணனேக் கண்டார். பழைய நாராயணன் லட்சுமி நாரா யணன். புதிய நாராயணர்கள் தரித்திர நாரா யணர்கள். தரித்திர நாராயணர்களின் நிலேயை உயர்த்தக் காந்தியார் பாடுபட்டார். தீண்டா தாரை ஹரிஜனங்களாக்கிய காந்தியடிகள் அவர்களுக்கு ஆலயப் பிரவேச உரிமை வேண்டு மென்ருர். ஆலயப் பிரவேசத்திற்கு இடந் தராத கோயில்களேப் புறக்கணித்தார்; வள்ளற் பெருமான் பலி வாங்குகின்ற கோயில்களேப் புறக்கணித்தது போல.

**பிரார்த்தனே:**

இருவரும் பொதுப் பிரார்த்தனே செய்த வர்கள். வள்ளற் பெருமான் தனக்காக மட்டும் பிரார்த்தனே செய்வதில்லே. உலகமெல்லாம் வாழ வேண்டும் என்றே பிரார்த்தனே செய்தார். பிரார்த்தனே எப்படிச் செய்ய வேண்டும், தன் பிரார்த்தனே என்ன? என்று வள்ளற் பெருமான் கூறியதை ஒரு அன்பர் உபதேசக் குறிப்பாகக் குறித்து வைத்திருக்கிருர். அவ்வுபதேசக் குறிப்பைக் காண்க :

''ஒருவன் பிரார்த்தனே செய்வதில் அவ னுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகமெல்லாம் வாழும்படி பிரார்த்தனே செய்ய வேண்டும். அப்படிச் செய்வதால் அதில் ஒருவ னுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கி விடுகின் றன. பிரார்த்தனே செய்ய வேண்டுமாகில் இப்படித்தான் செய்ய வேண்டும்.''

''பாதி இரவி லெழுந்தருளிப்
பாவி யேனே யெழுப்பியருட்
சோதி யளித்தென் னுள்ளகத்தே
சூழ்ந்து கலந்து துலங்குகின்ருய்
நீதி நடஞ்செய் பேரின்ப
நிதிநான் பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியா தென்போலிவ்
வுலகும் பெறுதல் வேண்டுவனே.''

—உபதேசப் பகுதி, பக்கம் 112

என்பதே வள்ளலார் பிரார்த்தனேயாகும்.

'என் போல் இவ்வுலகும் பெறுதல் வேண்டு வனே' என்பதே வள்ளலாரின் பிரார்த்தனே. 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற திருமூலரின் வழி வந்தவரல்லவா?

காந்தியடிகள் தனது பிரார்த்தனேயைப் பிரார்த்தனேக் கூட்டமாகவே நடத்தினுர். பிரார்த்தனேயைத் தனக்காக மட்டுஞ் செய்யா மல் பிறருக்காகவும் — எல்லாருக்காகவும்— செய்தார். பிறரையும் — எல்லாரையும் சேர்த்துக் கொண்டு செய்தார். ஒரு பிரார்த் தனேக் கூட்டமே அவரது இறுதியாயிற்று.

**இறை திருப்பெயர்ப் பற்று (நாம செபம்):**

இருவரும் நாம செபத்தில் இடையருது திளேத்தவர்கள். இறைவன் திருப்பெயரைக் கனவிலும் மறவாதவர்கள். பெற்ற தாயைப்

பிள்ளை மறப்பதில்லை. பிள்ளையைத் தாய் மறப்பதில்லை. உடலை உயிர் மறப்பதில்லை. உயிரை உடல் மறப்பதில்லை. கற்ற நெஞ்சம் கலைகளை மறப்பதில்லை. கண்கள் இமைக்க மறப்பதில்லை. ஒன்றை ஒன்று மறவாத இவை, ஒன்றை ஒன்று மறந்தாலும் மறக்கலாம். வள்ளற் பெருமான் திருவைந்தெழுத்தை மறந்ததில்லை. மறந்ததேயில்லை.

''பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெறும் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகம் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான் மற வேனே.''

என்பது வள்ளலார் திருவாக்கு. இளமையில் நமச்சிவாயத்தை மறவாதிருந்த வள்ளற் பெருமான் பின்னுளில் அருட்பெருஞ் சோதியை மறவாதவராயினுர்.

காந்தியடிகள் இராம நாமத்தை எப்போதும் மறவாதவர். 'உற்ற தேகத்தை உடல் மறந்தாலும்' என்ருர் வள்ளலார். உற்ற தேகத்தை உடல் மறக்கும் காலம் காந்தியடிகளுக்கு வந்தது. அப்போதும் காந்தியடிகள் இராம நாமத்தை மறக்கவில்லை. உடலை உயிர் மறந்த போதும் மகாத்மாவின் நா இராம நாமத்தையே சொல்லியது. மனம் இராம நாமத்தையே எண்ணியது. துப்பாக்கிக் குண்டு நெஞ்சிலே பாய்ந்து துளைத்த போதும் இராம நாமத்தையே உச்சரித்தார். மகாத்மாவின் இறுதிப் பேச்சு இராம நாமம். இறுதி மூச்சும் இராம நாமமாமகவே இருந்தது.

சத்தியத்தைச் சோதித்த வாழ்வல்லவா.

வாழ்க வள்ளலார். வாழ்க மகாத்மா.


# அருள்மிகு மாரியம்மன் ஆலயம்

**வரதராஜம்பேட்டை, வலங்கைமான், பாபநாசம்வட்டம், தஞ்சை மாவட்டம்**

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து தெற்கே 10 கி. மீ. தொலைவில் குடமுருட்டி ஆற்றுக்குத் தெற்கேயும் வெட்டாற்றுக்கு வடக்கேயும் அமைந்துள்ளது வலங்கைமான் **அருள்திரு மாரியம்மன் ஆலயம்.**

இந்த ஆலயத்தில் கண்கண்ட தெய்வமாக வேண்டுவோர்க்கு வேண்டுவன நல்கி உறைந்திருக்கும் அன்னைக்குப் பெருவிழா பங்குனி மாதம் சிறப்பாக நடைபெறுகிறது. அப்போது பிரார்த்தனைக்காகப் பல்லாயிரக் கணக்கில் பால்காவடி எடுப்பதிலிருந்தும், அங்கப்பிரதட்சனம் செய்வதிலிருந்தும் காணிக்கைகளைப் பொன்னுகவும், பொருளாகவும் செலுத்துவதிலிருந்தும் அம்பாளின் சக்தியைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

வாழ்வில் செம்மையுற, எல்லா நலனும்பெறத் திருவிழாக்கண்டு, காணிக்கை செலுத்தி அருள்திரு மாரியம்மன் திருவருளைப் பெற வேண்டுகிறோம்.

**என். பன்னீர் செல்வம்**
தக்கார் (செயல் அலுவலர்)

# அருள்திரு
# பாலசுப்பிரமணியசுவாமி ஆலயம்

## எட்டிவயல், ஆண்டிக்காடு (அஞ்சல்)
## பட்டுக்கோட்டை மாவட்டம்.

இக்கோவில் பட்டுக்கோட்டைக்குத் தெற்கே 12 கி.மீ. தொலைவில் எட்டிவயல் கிராமத்தில் அமைந்துள்ளது. இதுவே முன்னாள் தொழில் அமைச்சர் திரு. ரா. வெங்கட்டராமன் அவர்களின் சொந்த ஊராகும். எட்டிவயல் கிருஷ்ணய்யர் அவர்களால் கட்டப்பட்டு, சொத்துக்களும் எழுதி வைக்கப்பட்டு நூதனமாக அமையப்பெற்ற இக்கோவில், அறநிலையத் துறையின்கீழ்க் கிருஷ்ணய்யர் வாரிசுகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது, ஆண்டு வருவாய் ரூ. 15,000/- வரும். இவ்வாலயத்தின் ஆக்கப்பணிகள் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. எழில்கொஞ்சும் பாலசுப்பிரமணியரின் அருள்வேண்டிச் சித்திரைப் பருவம் குருவிழாவில் மக்கள் திரளாகக் கூடுவர். உற்சவமூர்த்தியின் அழகு கண்கொள்ளாக் காட்சி.

பரம்பரை அறங்காவலர்.

## தஞ்சை மாவட்டத்தில் நடைபெறும் மாபெரும் திருவிழா
# வரகரிசி மாலைத் திருவிழா

ஊரெல்லாம் விழாக்கோலம். இலட்சக்கணக்கான மக்களின் குதூகலம். வீதி தோறும் கச்சேரி.

அப்போது அருள்திரு நாடியம்மன் பட்டுக்கோட்டை நகரில் பிரசன்னமாகி 10 நாட்கள் அருளாட்சி செய்கிறாள்.

நேரில் பார்த்து அனுபவிக்க வேண்டிய இப்பெருவிழாவினை ஏப்ரல் 75-ல் கண்டு களிப்பெய்துவீர்.

ஆண்டு வருவாய் ரூ. 30,000/-க்கு மேல் வரும் இவ்வாலயம் விரைவில் திருப்பணி செய்யப்படவிருக்கிறது.

மெய்யன்பர்கள் நன்கொடையினை அனுப்பி அம்மனின் அருளுக்குப் பாத்திரமாக வேண்டுகிறோம்.

**திரு. எம். ஆர். வெங்கட்ராமய்யர்,**
அறங்காவலர் குழுத்தலைவர்.

**திரு. டி. ஞானகுரு, பி.ஏ.,**
செயல் அலுவலர்.

திரு. ஆர். ஷண்முகம்,
திரு. எஸ். ராமானுஜம்,
திரு. பி. எஸ். காளிதாஸ், பி.ஏ., பி.எல்.,
திரு. பி. எம். சண்முகம், பி.ஏ., பி.எல்.,
அறங் காவலர்கள்.

# வேதம் ஊன்றும் பலா

நீதிபதி எஸ். மகராஜன்

நாற்பது ஆண்டுகளுக்கு முன், சென்னைக் கிறித்தவக் கல்லூரியில், ஒரு தேநீர் விருந்து நடந்தது. ஸ்காட்லண்ட் நாட்டிலிருந்து வந்த பாதிரியார் ஒருவரை வரவேற்று விருந்து நடத்தினார்கள். கல்லூரியின் பழைய மாணவரான ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களையும் அந்த விருந்துக்கு அழைத்திருந்தார்கள்.

காட்டுமிராண்டிகளாகிய இந்துக்களை எப்படியாவது திருத்திவிட வேண்டும் என்று கச்சை கட்டிக் கொண்டு வந்தவர் பாரதியார். ரசிகமணியை அவரிடத்திலே அறிமுகப்படுத்தினார்கள். உடனே ஸ்காட்லண்ட் துரை, டி.கே. சியைப் பார்த்து, ஏளனத்தோடு பல கேள்விகளைக் கேட்கலானார். தமிழர்களுடைய பண்பாட்டைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும் கேள்விகள் கேட்டார்.

ஸ்காட்லண்ட் தேசத்திலுள்ள நாங்கள் மரங்களிடத்திலே மிகுந்த அன்பு செலுத்துகிறோம். தமிழர்களாகிய நீங்கள் எப்படியோ? என்று கேட்டார் பாதிரியார்.

இந்தக் கேள்விக்கு உடனே டி.கே.சி. பதில் சொன்னார்கள் : ''மரங்களிடத்திலே நாங்கள் அன்பு செலுத்துவதில்லை, பக்தியே செலுத்துகிறோம்'' (We don't love trees, we worship them) என்று. அதைக் கேட்ட பாதிரியார் அரண்டே போனார்.

டி. கே. சி.யின் வாக்கை நினைக்க, நினைக்க, அது நம்மை ஒரு சிறந்த சமய உலகத்துக்குள்ளே கொண்டு போய் விட்டுவிடும்.

தமிழ் நாட்டிலே, ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு தல விருட்சம் என்று ஒன்றுண்டு. திருக்குற்றாலத்துக் கோயிலுக்குள் போனால் அங்கே ஒரு பலா மரத்துக்குப் பூசை நடப்பதைப் பார்க்கலாம். பலா மரத்துக்குள்ளே இறைவன் கொலு வீற்றிருக்கிறான் என்பதை நம் முன்னோர்கள் எப்படியோ கண்டு கொண்டார்கள்.

சென்னையிலிருந்து புதுவைக்குப் பலாப் பழத்தைப் பார்சல் செய்து 'கூட்ஸ்' வண்டியில் அனுப்பினால், பாதி அழுகிப் போய்விடும், கால் வாசி திருட்டுப் போய்விடும், இங்கு பத்திரமாக வந்து சேருவதெல்லாம் 100-க்கு 25 பழந்தான்.

ஆனால் கோடானுகோடி ஆண்டுகளாகப் பலாமரம் என்ற தத்துவம் பலாப் பழத்தை எவ்வளவு எச்சரிக்கையோடு பாதுகாத்து வந்திருக்கிறது! வித்தைப் பாதுகாப்பதில்தான் அந்த மரத்துக்கு எவ்வளவு அக்கறை! வித்தை இனிப்பான மஞ்சள் சுளையிலே பொதிந்து, சுளை கெட்டுப் போகாமல் இருக்க வேண்டுமே, அதற்காகச் சுளைகளுக்கு மேல், வலிய தோற் பொதிவு கொடுத்து, பலாக் காயைக் குரங்கு துளைத்து விடாமல் இருக்க வேண்டுமே, அதற்காக முள் நிறைந்த தோட்டிலே பக்குவமாகச் சுற்றி வைத்து, எவ்வளவு எச்சரிக்கையாக நம் கையிலே கனியைக் கொண்டு வந்து கொடுக்கிறது பலா மரம்!

இதையெல்லாம் கூர்ந்து கவனித்து அதிசயித்தார்கள் நம் முன்னோர்கள். பலா மரம் நம்மைப் போல் பி.ஏ., எம்.ஏ., பட்டம் வாங்கவில்லையே, தாவர நூல் அதற்குத் தெரியாதே, அது எப்படி இந்த அற்புதங்களைச் செய்ய முடிந்தது என்று சிந்தித்தார்கள். அப்பாவி மரமா, இந்த விந்தைகளைச் செய்தது? இல்லை, மரத்துக்கும் தெரியாத ஒரு தெய்வீக சக்தி, மரத்துக்குள்ளிருந்துகொண்டு இந்த அற்புதங்களைச் செய்திருக்கிறது என்று உணர்ந்தார்கள். உணர்ந்தவுடனே, பலா மரத்தினுள் தொழிற்படும் இறைத் தத்துவத்தை நினைந்து வணங்கினார்கள். அதற்கு ஆறு கால பூசை நடத்தினார்கள். மேள தாளத்தோடு அதற்கு விழாக் கொண்டாடினார்கள். குறுகிய பலா மரத்தில் வீற்றிருக்கும் இறைவனைக் 'குறும்பலா ஈசர்' என்று பெயரிட்டு வாழ்த்தினார்கள்.

வேதம் என்ன செய்ததாம்? இறைவனைப் பற்றிச் சொல்லாலே வருணித்து வருணித்துப் பார்த்ததாம். மனிதனுக்கு அது விளங்கவில்லை. குழப்பந்தான் ஏற்பட்டது. எப்படி மனிதனுக்கு இறைவனைப் புரிய வைப்பது என்று வேதம் நீண்ட காலம் யோசனை பண்ணி, கடைசியாக ஒரு தந்திரம் செய்தது. ஒரு பலாவின் வித்தைக் குற்றாலத்து மண்ணிலே ஊன்றிவிட்டுப் போய் விட்டதாம் வேதம். அந்த வித்து முளைவிட்டு, இலை பரப்பி, கொப்பும் கவடுமாக வளர்ந்து, காய்த்துக் கனிந்ததைப் பார்த்தான் மனிதன். பலா மரத்தினுள்ளிருக்கும் இஞ்சினீரிங் ஜாலங்களையும், ரசாயன விந்தைகளையும், தாவர மர்மங்களையும் பார்த்தவுடன், இறைவனுடைய திருவிளையாடலைப் புரிந்து கொண்டான் மனிதன்; வேதத்தைப் படித்தும் பிடிபடாத உண்மை, பலா மரத்தைக் கவனித்ததும் தெளிவாகிவிட்டது. இந்த அரிய கருத்தை,

''வேதம் ஊன்றும் பலாவுள்ள நாடு''

என்று குறவஞ்சி ஆசிரியர் குறிப்பிடுகிறார். மாசற்ற காட்சியுடையவர் அவர். அவருடைய காட்சியிலே, பலா மரம் இறைவனுடைய உருவமாகவே தோன்றுகிறது.

''கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாம்
சதுர்வேதம், கிளைகள் ஈன்ற
களையெலாம் சிவலிங்கம், கனியெலாம்
சிவலிங்கம், கனிகள் ஈன்ற
சுளையெலாம் சிவலிங்கம், வித்தெலாம்
சிவலிங்கம் சொரூபம் ஆக
விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டு வோமே''

# வரலாற்றுச் சிறப்புமிக்க சிவபுரிக் கல்வெட்டுக்கள்

சிங்கம்புணரி சீ. இலட்சுமணன்

### தமிழக ஆலயங்கள்

தமிழகம் என்று சொன்னவுடன் விண்முட்டும் கோபுரங்களும், அக்கோபுரங்களைத் தாங்கிப் பொலியும் கோவில்களும், கோவில்களால் போற்றி வளர்க்கப்படும் இசை, நாடகங்களும் கண்முன் காட்சியளிப்பது இயற்கை. தமிழகக் கோவில்கள் வெறும் வழிபாட்டுக் கூடங்கள் அல்ல. கோவில்களும், விமானங்களும் மனித உடலை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டன என்பர் அறிஞர். ஆலயத் திருவுருவங்கள் வெறும் கைகால்களையுடைய பொம்மைகள் அன்று. தத்துவங்களை விளக்கியுணர்த்தும் தன்மையன. ஆலயச் சிற்பங்கள் மெழுகு கொண்டு செய்யப்பட்டனவோ எனவியக்கும் வண்ணம் கல்லில் கவின்பெற வடிக்கப்பட்டுக் காட்சியளிக்கும் கலைச் செல்வங்கள். கோவில்கள் வழிபாட்டிற்கு மட்டும் வழிவகுக்காமல் கலை, இலக்கியம் வளர், கலைவளர் நிலையங்களாக அமைந்து விளங்குகின்றன. பண்டைக் காலத்தில் உயிர்ப் பிணிதீர்க்கும் ஆலயங்கள் உடற்பிணிதீர்க்கும் மருத்துவ நிலையங்களாகவும் விளங்கின. அறியாமைப் பிணியை நீக்கும் கல்விக்கூடங்களாகவும் செயல்பட்டுச் சிறந்தன. கோவிலில் அமைந்துள்ள கல்வெட்டுக்களிலிருந்து ''சித்திரமேழி'' 'பெரிய நாட்டார்' என்ற விவசாயக் கூட்டத்தாரையும், ஐந்நூற்றுவர் என்று உலக மெங்கும் பரவிய வணிகக் கூட்டத்தாரையும் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. ஆலயங்களைப் பாதுகாப்பதற்கென ''மூன்று வகை வேளைக் காரர்'' என்ற படையினரைப் பற்றியும் அறிந்து மகிழ முடிகிறது. தமிழகத்தின்மீது படையெடுத்து வந்த, சமயத்தால் ஒன்றுபட்ட-மொழியால் மாறுபட்ட மன்னர்களையும் பற்றி அறிய முடிகிறது. இந்த நாட்டின் மீது மண்ணாசையின்றிப் பொன்னாசை கொண்டு வந்த மகமதியர்களைப் பற்றியும், அவர்களை எதிர்த்த வீரர்களைப் பற்றியும் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. பேரரசர்களின்கீழ் சிற்றரசர்களாகவும், படைத் தலைவர்களாகவும், சாமந்தர்களாகவும் விளங்கியவர்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம். ஆட்சியிலும், போர்களிலும், அமைதிப் பணிகளிலும் அவர்கள் ஆற்றிய நற்பணிகளை அவை வானளாவப் பேசுகின்றன. அத்தகைய சிற்றரசர்களாக விளங்கிய துவராபதி வேளார், நிஷதராஜன் ஆகிய இருவரைப் பற்றிச் சிவபுரிக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவை வரலாற்றுச் சிறப்புமிக்க, வரலாற்றுச் சான்றுமிக்க கல்லெழுத்துக்கள். காலங்காலமாக நிலைத்து வழிகாட்டி விழிகாட்டுவன.

### சிவபுரி

இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்தில், காரைக்குடியில் இருந்து திண்டுக்கல் செல்லும் பெருவழியில் சிங்கம் புணரிக்குக் கிழக்கே இருக்கிறது சிவபுரி என்ற சிற்றூர். கற்றறிந்த அறிஞர்கள் அடங்கி அமைதியாக இருப்பது போலவே, பாலாற்றின் வடகரையில் அமைதியின் சூழ்நிலையில் ஏறக்குறைய 55 கல்வெட்டுக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. தமிழகத்தின் மிகப் பெரிய வணிகப் பெருநகராக விளங்கிய அருவியூரையும் அந்நகர் வாழ்ந்த அருவியூர்ச் செட்டியார்களையும் பற்றிய விவரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. துவராபதி வேளான், நிஷதராஜன் என்ற சிற்றரசர்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்கட்குச் சாட்சியான ஆவணக் கல்வெட்டுகளை 600 ஆண்டுகளாகத் தன்மடியில் வைத்துப் பாதுகாத்து வருகின்றது இத் தான்தோன்றீசுவரர் ஆலயம்.

### சோழர் காலச் சிற்றரசர்கள்

பிற்காலச்சோழ மன்னர்களில் குலோத்துங்கர் மூவர், விக்கிரமசோழன், இராஜாதிராஜன் முதலியோர் குறிப்பிடத்தக்க இடம் பெற்றுள்ளனர். முதலாம் குலோத்துங்கன் சோழர்குலத்தைச் சார்ந்த சாளுக்கிய வேந்தன் அல்லவா? இராஜேந்திரனுக்குப் பின் சோழ அரியணையைக் கைப்பற்றியவன் முதலாம் குலோத்துங்கன். அவன் கி.பி. 1070 இல் அரியணை ஏறினான். அவனது காலத்தில் பல சிற்றரசர்கள் தோன்றினார்கள். அவர்கள் சோழப் பேரரசுக்குட்பட்டு வாழ்ந்து வந்தனர். பேரரசுக்கு வரிவசூலித்தும் போர்க் காலங்களில் படை வீரர்களை அனுப்பியும் உதவி புரிந்து வந்தனர்.

### சிவபுரி வரலாற்றுக் குறிப்புகள்

அத்தகைய நம்பிக்கையுடைய சிற்றரசர்களில் துவராபதிவேளான் குடும்பத்தினர் ஒருவராவர். இவர்கள் கண்ணமங்கலத்தை இடமாகக்கொண்டு ஆண்டு வந்தனர். முதலாம் குலோத்துங்கனின் 42-ஆம் ஆண்டு சுந்தரத்தோளன் கண்டனான இராஜேந்திரசோழன் துவராபதி வேளானும், கண்டன்மங்கலத் தேவனான துவராபதி வேளானும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். உயிர் பொருள் மானத்திற்குப் பிழையில்லாமல் நடப்பதாக உறுதி கூறிச் சபதம் செய்து கொண்டனர். இதோ ஆலயத்தில் தட்சிணாமூர்த்தியின் முன்னுள்ள கல்வெட்டு விவரமாகக் கூறுகிறது.

1586

கல்வெட்டு

''ஸ்ரீதிரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத் துங்க சோழ தேவற்கு யாண்டு சயஉ ஆவது சுந்தரத் தொளன் கண்டஞன இராஜதிர சொழத் துவராபதி வெளானுக்கு கண்டன் மங்கலாத் தேவஞன துவராபதி வெளான் உயிர் பொருள் மயிமை மானத்துக்கு பிழையாதெநாக பண்ணின சபதாதங்களும் மமைக்குத்து நெமணவாள நாகவும் விரைபுங் கொமா 0உவ ழ ம உ பை ெ ஊாகித்தெஞக சூளற் றெனை கண் டன்மங்கள தெவ ஞன துவராபதி வெளாந்ந''.

மீண்டும் குலோத்துங்களின் 43-ஆம் ஆண்டு ஐஞ்நூற்றுவன் உய்யவந்தான் காங் கேயன் என்றவனும், ஸ்ரீ மண்ணுளப் பிறந்தா ஞன நிஷதராஜனும், ஸ்ரீ சுந்தரத்தோளன் கண்டஞன துவராபதி வேளானும் ஒருவருக் கொருவர் பிழை செய்யாமல் இருப்பதாக ஒப் பந்தம் செய்துள்ளனர். இக்கல்வெட்டும் தட்சி ணுமூர்த்தி ஆலயத்திற்கு மேற்புறம் உளது.

''உலஉல தஸ்ரீதிரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சொழ தெவற்கு யாண்டு நாற் பத்தி மூன்ருவது ஐஞ்நூற்று வன உய்யவந் தாஞ் காங்கெயனும் ஸ்ரீமண்ணுளப் பிறந் தாஞன நிஷதராயனும் ஸ்ரீ சுந்தரத் தொழளன் கண்டஞந துவராபதி வெளானும் கண்டன் மங்கலாத் தெவஞன துவராபதி வெளானும் சொன்ஞல் வொமால் வெட்டின படியானது ஒரு மாக கொளுவோம் உயிர் பொருள் ருதமை மானம் எப்பெறற்பட்டு தும் பிழையாதொ-வும் இன்ஞல் இவ்வாமிலும் ஒருவொர் மபிழைக் கில்நின்ற முவொழுங்கூடி பிழைத்தவ-செய்யக் கட வொமாக வம் ருப்படி தப்பு வார்கள் கள் ளுங் குடிச்சு முதாயுந்தின்று கழுதைக்கும் பிறந்த நாய்க்கும் பிறந் துபிழைத்தவன் வறகம் பறை வறிகளே வதாகவும். இப்படி 2ம் மதித்து கல்வெட்டிஞெம் இன்ஞயர் ரட்சை''

முதலாம் குலோத்துங்க சோழனுக்குப் பின் அவன் மகன் விக்ரமசோழன் அரசு கட்டில் ஏறிஞன். அவனுடைய 3-ஆம் ஆட்சியாண்டில் கண்டன்சுந்தரத்தோழனும் நிஷதராசனும் மீண்டும் ஒப்பந்தம் செய்து கொண்டதைக் கோவிலின் நுழைவாசலில் வடபுறச் சுவரில் துவாரபாலகற்குப் பின்னுள்ள கல்வெட்டு விளக்குகிறது.

கல்வெட்டு

உல உல ஸ்ரீதிரிபுவனச்சக்ரவர்த்திகள் ஸ்ரீ விக்ரமசோழ தெவற்கு யாண்டு சந்ருவது பமந-ான நிஷதராய நென் கண்டன் சுந்தரத் தொள ஞன துவராபதி வெளாற்கு கல்வெட்டி குடுத்த பரிசாவது ராஜபலமுபஞன பகையும்-பாபகை எந்பகையாவதாகவும் எ-ருவர் பகையாவதாக வும் உசிர் பொருள் மாநம் எப்பெர்பட்டதும் பிழை-தெந்-வும் இது பிழையாநவல்ல-பப-ந்நவ இப்பரும் திது கல்வெட்டிக் குடுத்தெந் நிஷத ராய நென்று''.

[கல்வெட்டுக்களில் எழுத்துப் பிழைகளும், சிதைவுகளும் காணப்படுதல் இயல்பு. அவற்றை நீக்கித் திருத்தமாக எழுதுதலே நலம்பயக்கும். —ஆசிரியர்.]





1974 செப்டம்பர் 27,28,29,-ம் தேதிகளில் திருவிடை மருதூரில் நடைபெற்ற திருமுறைக் கருத்தரங்க விழாவில்,

தொல்பொருள்துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி அவர்கள் உரை நிகழ்த்துகின்ருர்கள்.

விருந்தினர் சிறப்பு விடுதியினைச் சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. கே. வீராசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

# கண்ணபிரானும் ததிபாண்டனும்

தேவி இராமாநுசதாசர்

கண்ணபிரான் தன் பாலப் பருவத்தில் ஒரு நாள், தன் தாயார் யசோதைப் பிராட்டி தாய்ப் பால் கொடாததற்காக மிக வெகுண்டான். தயிர்த் தாழிகளை உருட்டி உடைத்தான். அக் குற்றத்திற்காகத் தன்னை அடிக்கக் கோலெடுத்து வந்த யசோதைப் பிராட்டிக்கு அகப்படாதபடி,

''தாயெடுத்த சிறு கோலுக்கு உளைந் தோடி'' (பெ. திருமொழி, 8—3—5) என்று ஓட்டம் பிடிக்க, அவளும் துரத்திக் கொண்டு ஓட, அதி வேகமாய்ச் சென்று அங்கு வழியில் ஒரு மனையுட் சென்று பெரியதொரு தயிர்த் தாழியை வைத்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்த ததிபாண்டனென்னும் இடையனை எழுப்பி ''என் தாய் என்னை அடிக்க வருகிறாள், நான் மிகவும் களைத்துப் போனேன், இந்தத் தயிர்த் தாழியினுள்ளே என்னைப் புகுத விட்டு மறைத்திடு. என் தாய் இங்கு வந்து கேட்டால் என்னைக் காணவில்லை என்று எனக்காக ஒரு பொய் சொல்லி விடு'' என்று கேட்டுக் கொண்டான். அவ்வாறே ததிபாண்டன் கண்ணனைத் தனது தயிர்த் தாழியினடியில் இருக்கச் செய்து தாழியைக் கவிழ்த்து மூடி மறைத்து விட்டான். யசோதைப் பிராட்டி தேடிக் கொண்டு அங்கு வந்து கேட்கையில், 'இங்கில்லை' என்று பொய் சொல்லி அவளை அனுப்பிவிட்டான். ''இங்கில்லை யென்றேனே ததிபாண்டனைப் போல'' என்று திருக்கோளூர்ப் பெண் பிள்ளை ரகசியத்தில் ஒரு வாக்கியம் உண்டு.

ததிபாண்டன் கண்ணில்லாக் குருடன். கண்ணபிரானே பரம்பொருள் என்று திண்ணமாகத் தெரிந்து கொண்டிருந்தவன். சமயம் நேரும்போது அவனிடம் முத்தி பெற்றுக் கொள்ள வேண்டி, அதை எப்படியும் பெற்றுக் கொள்ளலாம் என்று நம்பியிருந்தான். கண்ணபிரானும் ததிபாண்டன் தன்னையேஉண்மையாக நம்பிக் கொண்டிருப்பவன். அவனுக்கு எப்படியும் போய் அருள் செய்ய வேண்டுமென்று திருவுள்ளம் கொண்டிருந்தான். யசோதைப் பிராட்டி துரத்தி வருவதைச்சாக்காக வைத்துக் கொண்டு ததிபாண்டனுக்கு அருள் செய்ய வேண்டுமென்றே வலுவில் அவன் மனையுட் சென்று தாழியில் புகுந்தான் கண்ணபிரான்.

யசோதைப் பிராட்டி திரும்பிப் போன பின்பு, கண்ணபிரான் தன்னை வெளியில் விடும்படி கேட்க, அதற்குத் ததிபாண்டன் ''நீ எனக்கு மேல்வீடு (பரமபதம்) தருவதாக உறுதி கூறுவாயாகில் நான் உன்னை வெளியில் விடுவேன்'' என்று கூற, கண்ணபிரான் அப்படியே அவனுக்கு அருள் செய்ய இசைந்து, ''நீ விரும்பியபடியே கொடுக்கிறேன், என்னை வெளியில் விடு'' என்று சொல்ல, ததிபாண்டன், ''நீ எனக்கு மட்டும் நற்கதி கொடுத்தால் போதாது, என்னைச் சேர்ந்த இருபத்தெட்டு மனையிலுள்ளோர்களுக்கும் நற்கதி கொடுப்பதாகச் சொன்னால்தான் விடுவேன்'' என்று சொன்னதும், கண்ணபிரான், ''நீதான் என்னை உள்ளபடி நினைந்து உன் மனத்தினால் வந்தித்தாய், அவர்கள் என்னைச் சிந்தித்து நினைத்தாரில்லையே! அவர்களுக்கு நான் எப்படிக் கொடுப்பது?'' என்று சொல்ல, அவர்கள் உன்னை உள்ளபடியறிந்து நினைக்கும் அறிவும் ஆற்றலும் பெற்றாரில்லை, ஆதலால் அவர்களுக்காக நான் கேட்கின்றேன், என்பொருட்டு அவர்களுக்கும் நீ பேரின்ப வீட்டைக் கொடுக்க வேண்டும்'' என்று வேண்ட, கண்ணபிரானும், ''உன் வேண்டுகோளின்படியே அவர்களுக்கும் மேல்வீடு தருகிறேன், இனியாவது தாமதமில்லாமல் என்னை வெளியே போகவிடு'' என்று கூறினான். அப்படிக் கூறினதும் ததிபாண்டன், ''இன்னும் ஒன்று கேட்கிறேன், அது என்னவென்றால், இந்தத் தயிர்த் தாழிக்கும் முத்தி கொடுத்தருள வேண்டும். இதுதானே உன்னை யசோதைப் பிராட்டிக்குக் காட்டிக் கொடுக்காமல் காத்தது'' என்று வேண்டினான்.

கண்ணபிரானும் அவனுடைய வேண்டுகோளுக்கு இரங்கி அவனுக்கும் அவனைச் சேர்ந்த இருபத்தெட்டு மனையிலுள்ளோர்களுக்கும் தயிர்த் தாழிக்கும் பேரின்ப வீடு கொடுப்பதாக வாக்களித்தான்.

ததிபாண்டன் மேல்வீடு கேட்டபோது, அவன் கண்ணில்லாக் குருடன். ஆதலால் கண்ணபிரான் அவனுக்கு, ''உன் கண்ணைக் கொடுத்துவிடுகிறேன்—என்னை விட்டுவிடு'' என்ன, ததிபாண்டன் ''எனக்குக் கண் வேண்டா, கதி தா'' என்று சொல்லி வேண்டி, முத்தி பெற்றான் என்ற விருத்தாந்தத்தைக் கிருட்டிணதாசர் எம்பிரான் சதகத்தில் அழகாகப் பாடி அனுபவிக்கிறார். அது வருமாறு :

திண்ணமுடன் கோபாலர் மனையில் வெண்ணெய்
திருடினதைக் கண்டவர்கள் துரத்தும்போது
கண்ணிலாத் ததிபாண்டன் மனையுட் புக்குக்
கண்கொடுத்து ஓர் சாடியிற்புக் கொளித்துக் கொள்ளப்
'புண்ணிகராம் கண்வேண்டன்; கதிதா, அல்லால்
போகவிடேன்' எனச்சாடி மூடிக் கொள்ள
எண்ணரிய பரமபதம் அதனுக் கீந்தாய்
இறைவாநா ராயணனே! யெம்பி ரானே!

இங்கு நோக்க வேண்டியது யாதெனில் கண்ணபிரானுக்கு அத்தயிர்த் தாழியினின்றும் வெளியில் வருவது அரிய பெரிய காரியம் அன்று;

சுண்டு விரலால் தயிர்த் தாழியைத் தள்ளிவிட்டு வெளியில் வரலாம். இதெல்லாம் அவனது மாயக் கூத்து. ததிபாண்டனுக்கு அருள் புரியவே இப்படிச் செய்தான் என்று அறியத் தக்கது.

இங்ஙனம் தயிர்த் தாழிக்கும் முத்தியருளியதைத் திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும், தாம் அருளிச் செய்த அஷ்டப் பிரபந்தங்களில் ஒன்ருகிய திருவரங்கத்துமாலை என்னும் பிரபந்தத்தில்,

''சிந்திக்க நெஞ்சு இல்லை; நாஇல்லை;
நாமங்கள் செப்ப, நின்னை
வந்திக்க மெய்இல்லை; வந்து இருபோதும்
மொய்ம் மாமலர்ப்பூம்

பந்தித் தடம்புடைசூழ் அரங்கா!
ததிபாண்டன் உன்னைச்
சந்தித்த நாள் முத்திபெற்றது
என்னே! தயிர்த் தாழியுமே''

என்று அருளிச் செய்திருக்கிருர்.

மேலும் இந்த வரலாறு வில்லி பாரதத்தில் வீட்டும பருவத்தில் குறிக்கப் பெற்றுள்ளது.

ஆழி எடுத்தனன் வீடு மனைப்பொருது
ஆவி யழித்திடுவான்
ஊழி முகக் கனல் போல்எழும் அப்பொழுது
ஓடி அருச்சுனனுந்
தாழி தனக்குமுன் வீடு கொடுத்தருள்
தாளிணை யைப்பிடியா
வாழி உனக்கிவ னேவெதிர்?
வித்தக மாய! எனத் தொழுதான்!

"கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே."


# அருள்திரு
# ஆபத்சகாயேசுவரர் ஆலயம்

**ஆலங்குடி, பாபநாசம் வட்டம், தஞ்சை மாவட்டம்.**

ஆலங்குடி என்னும் திரு. இரும்பூளைத் திருத்தலம் கும்பகோணம்--மன்னர்குடி நெடுஞ்சாலையில் குடந்தையிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

இது, சோணட்டில் திருவிடைமருதூரை மையமாகக் கொண்ட பரிவாரத் தலங்களில், தட்சிணமூர்த்தி தலம். பாற்கடலைக் கடைந்தபோது உண்டான ஆலகால விடத்தை இறைவன் உண்டு உயிர்களைக் காத்தபடியால் ஆபத்சகாயேசுவரர் எனப் பெயர் பெற்ருர். இங்கு ''குருபகவான்'' பிரத்யட்சம். ஆண்டுதோறும் மாசி மாதம் 3-வது குருவாரம் மிகச் சிறப்பாகக் ''குருவார தரிசனம்'' என்று அபிஷேக ஆராதனைகள் செய்து கொண்டாடப்படுகிறது. குருவினல் பீடிக்கப்படும் பல்லாயிரக்கணக்கானேர் வந்து வழிபட்டு இடர் நீங்கும் தலமாகவும், திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற தலமாகவும் விளங்குகிறது. அனைவரும் வந்து தரிசித்துப் பேறடைய வேண்டுகிருேம்.

**என். பன்னீர்செல்வம்,**
செயல் அலுவலர்.

# பாண்டிமாதேவி

முதற்பரிசு பெற்ற பொற்கிழிக் கவிதை

மீனாட்சிமைந்தன்

## 7. கனக நந்தி கட்டுரைந்த காதை

தீட்டிய திட்ட மெல்லாம்
　　தேன்மொழி ஒருத்தி யாலே
நாட்டிலே சரியக் கண்டு
　　நடுங்கினன் கனக நந்தி;
கூட்டிலே அடைக்க எண்ணிக்
　　கூனினை வளைக்க எண்ணிக்
காட்டினன் மன்னன் முன்னே
　　கண்டதும் கேட்ட தெல்லாம்

''மானினை விழியால் காட்டி
　　மதியினை முகத்தால் காட்டித்
தேனினை மொழியால் காட்டித்
　　தெளிவினை அறிவால் காட்டிக்
கூனினை உன்னால் காட்டிக்
　　குளிர்ச்சியைத் தன்னால் காட்டி
ஊனினை எழிலால் காட்டி
　　உன்மனை உலவு கின்றாள்!

போட்டனை சட்டம்; ஆனால்
　　பொசுக்கினாள் அரசி இன்று!
கூட்டமாய்க் கூடு கின்றார்
　　கொடும்படை நாடு கின்றார்
நாட்டிலே நீறு பூசி
　　நடப்பதுன் அரசி என்றால்
பூட்டியே வைப்ப துன்றன்
　　பொறுப்பெனச் சொல்ல வந்தேன்

என்னதான் சொல்லி என்ன?
　　இதயமே எதிர்த்து விட்டால்
மன்னவன் ஆற்ற லெல்லாம்
　　மயங்கியே போகு மன்றோ
சின்னவன் கனக நந்தி
　　சீற்றமோ இதய ராணி
என்னதான் செய்வாய்? என்றே
　　ஏளனம் புரிந்து நின்றான்.

(வேறு)

பொல்லாத சமணகுரு பேச்சைக் கேட்டுப்
　　பொங்கியதால் மாமன்னன் ஆணை யிட்டான்
எல்லாரும் எனக்கொன்றே, அரசி என்னும்
　　ஏற்றங்கள் சட்டத்தின் முன்னே இல்லை!
கல்லாரும் கற்றவரும் சட்டத் தின்முன்
　　கணக்கொன்றே, கடவுட்கும் ஒன்றே அன்றோ!
நில்லாதீர்! சட்டத்தைப் புறக்க ணித்தால்
　　நிறுத்திடுவீர் அவரைஎலாம் என்முன்'' என்றான்.

மன்னவனின் பேச்சாலே மகிழ்ந்த நந்தி
　　மகிழ்ச்சியினால் தலைபணிந்து நன்றி சொன்னான்
''தென்னவனே! உன்னாலே தமிழர் நாடு
　　திக்கெட்டும் புகழீட்டும் காலம் தோன்றும்
சொன்னவன்யார் என்னாமல் குற்றம் செய்வார்
　　சூதழிக்க முந்துகிறாய்; கொற்றம் வாழ்க!
மன்னவனே! வரலாற்றில் வாழ்வாய்'' என்று
　　மனமார வாழ்த்திவிடை பெற்றான் நந்தி.

இருவர்க்கும் நடந்தஉரை யாடல் கேட்டான்
இகல்வேந்தன் மெய்காக்கும் புகழன் என்பான்;
சிறுமீனைப் புழுவீழ்த்தும், தூண்டில் உற்ருல்!
சிற்றெறும்பும் யானையினை வீழ்த்த லுண்டு!
துரும்பாலே பெரும்பகையைச் சாய்த்த லுண்டு!
தொண்டாலே சமணத்தைச் சாய்க்க வந்தான்
அரும்பான புகழன்தான்; அமுதா மூலம்
அக்கணமே அரசிக்குச் செய்தி சொன்ஞன்.

## 8. கனக நந்தி சூழ்ச்சிக் காதை

சமணத் தலைவன் கனக நந்தியும்
அமணக் குருமார் புட்ப நந்தியும்

பவண நந்தியும் கனக நந்தியும்
திவண நந்தியும் குனக நந்தியும்

சந்து சேனனும் தரும சேனனும்
இந்து சேனனும் கந்து சேனனும்

பாண்டி நாட்டில் சமணம் காக்கத்
தூண்டில் இட்டார்; துவண்டான் தென்னன்!

முள்ளம் பன்றியாம் கனக நந்தியின்
உள்ளங் கையில் உறைந்தான் மன்னன்!

அங்கையில் உள்ள அரசனை ஈர்க்க
மங்கையர்க் கரசி மார்தட் டினளே

கனக நந்தியோ சைவத் தோப்பைத்
தினமும் எரிக்கும் தீயாய் மாறி

முரசு கொட்டி முட்டா ளாக்கி
அரசு கட்டில் ஆணை என்று

மக்களை எல்லாம் மடக்கி விட்டான்
தக்கார் எவரையும் தலையில் அடித்தான்;

அடியார் எல்லாம் அடிபட் டார்கள்!
முடியாச் சிறையில் முடமாய் ஆனுர்!

எதிர்ப்பே இல்லை ஏளனம் இல்லை
சதிப்பேய் முன்னே சைவம் தளர்ந்தது.

குலச்சிறை யாரும் மங்கையர்க் கரசியும்
குலத்தினைக் காக்கக் கூட்டணி பூண்டார்

அரசன் படையில் ஆயிரம் வீரர்
இரகசிய சூலப் படையில் சேர்ந்தார்

மெய்காப் பாளன் புகழன் தொண்டால்
பொய்காத் தான்—எனப் புகல மாட்டேன்

அரசன் மெய்யை அருகே காத்தான்
இரகசியச் செய்தி அரசிக் குரைத்தான்

அரசி சூழ்ச்சி அறியாப் பகைவர்
முரசு கொட்டி முழக்கம் செய்தார்

சூலப் படையோ வெள்ளம் போலக்
காலப் போக்கில் கடுகி வளர்ந்ததே!

அந்தப் புரமே அரசியற் கூடம்;
சந்தத் தமிழில் இராணுவப் பயிற்சி!

தோழியர் எல்லாம் வாளினை ஏந்தி
நாழிகை தோறும் நடைபயின் றிட்டார்

கைவாள் வீச்சோ? கடைக்கண் வீச்சோ?
தொய் வாள் இல்லை; துணி வாள் எல்லாம்!

குதிரை ஏற்றம் கொள்வோர் ஓர்பால்!
மதில்மேல் ஏறிப் பயில்வோர் ஓர்பால்!

சமயச் சண்டை வெடித்திடும் நாளில்
இமயம் போல எழுந்திடும் சைவம்!

அரசன் அரண்மனை அமணர் கோட்டை!
அரசி அரண்மனை சைவக் கோட்டை!

மங்கையர்க் கரசி மதிமுகம் காணச்
சங்கம் அமைத்த மன்னவன் அஞ்சும்

பெண்ணரச சாட்சி பெருந்தொல் லையெனத்
திண்ணமாய் எண்ணித் தேம்புவான் நந்தி

நாட்டின் தளபதி பார்த்திபன் என்பான்
காட்டிக் கொடுக்கும் கலையில் வல்லான்

ஒற்றர் தலைவன் உடையணன் என்பான்
கற்றோர் அஞ்சும் கடையனே ஆவான்

படையின் தளபதி பார்த்திப னுக்கும்
உடையணன் என்னும் ஒற்றனுக் கும்பொன்

வாரி வழங்கி வலையில் வீழ்த்திக்
காரியம் முடித்தான் கனக நந்தி

மங்கையர்க் கரசி மன்றில் ஏறிச்
சிங்கம் எனவே சீறும் போது

தளபதி அவளைத் தடுத்திட வேண்டும்;
களத்தில் அவளைக் கைது செய்தே

மன்னன் முன்னே நிறுத்திட வேண்டும்
சின்னத் திட்டம் தீட்டினன் நந்தியென்!

## 9. புகழன் அமுதா சந்தித்த காதை

சூலப் படைநிறுவித் தொண்டாற்றும் புகழனுக்குக்
காலம் கனிந்தளித்த காதலியே அமுதாவாம்!

மாமன் மகளாவாள்; மங்கைக்குத் தோழியவள்!
சாமம் தனில்கூடச் சரித்திரத்தை மாற்றுகிறாள்!

அரசன் அருகிருப்பான் புகழன்தான்; அமுதாவோ
அரசி அருகிருப்பாள்; அரசியலோ பரிமாறும்!

உருவம் வளர்ந்தாலும், உலகியலில் மணம் கொள்ளும்
பருவம் வளர்ந்தாலும், படைநிலையால் நேரமில்லை

காதல் உள்ளத்தால் கருத்தாலே ஒருமித்தார்
சாதல் அமைந்தாலும் சைவத்தைக் காப்பதென

உறுதி பூண்டுள்ளார் உயர்சமயப் போராட்ட
இறுதி தனைக்காணும் கட்டத்தில் இருக்கின்றார்

ஆழ்ந்த நள்ளிரவில் அடையாளம் தெரியாமல்
சூழ்ந்த வையை—அதன் சோலையிலே சந்தித்தார்

மூன்றும் பிறைநிலவு மேகமுக் காடிட்டுத்
தோன்றாத் தொழில்—செய்து துணைதேடும் நேரத்தில்

''அன்பே'' என—அழைத்தான்; ''அத்தான்'' என—அழைத்தாள்;
இன்பம் அறியாமல் இணைந்து கிடந்தார்கள்.

''தொடைவாழை, மார்போ எலுமிச்சம், பழமேனி
சடைமேகம் கூந்தல், சதிராடும் எழில்—வடிவம்;

முத்துப் பல்வரிசை மோகனமாம் கண்வீச்சு,
தத்தை புறங்காட்டும் தன்னிகரில் சொல்வன்மை,

வில்லாய் வளைந்திருக்கும் வியன்புருவம் அதன்—நடுவில்
நெல்லாய் நிமிர்ந்திருக்கும் நிகரில்லாக் கருந்திலகம்

அன்னம் நடைபயிலும் அமுதா—உன், நடைகண்டால்!
கன்னம் குழிவிழுந்த காட்சியிலே உலகத்தின்

இயற்கை அழகெல்லாம் எழுந்தருளக் காண்கின்றேன்
செயற்கை அழகில்லாச் செழுந்தமிழே! வா'' என்றான்.

கையால் அணைத்தான் கன்னங்கள் தீண்டுகையில்
மையாய் இருந்த மழைபொழிந்த காரணத்தால்

மெல்ல எழுந்தார் மெதுவாகப் புறப்பட்டார்
செல்லும் ஒருகுதிரைச் சேவடியின் ஒலி—கேட்டார்.

வானம் அதிர வளர்மின்னல் ஒளிபரவக்
கானம் தனில்கண்ட காவலனோ உடையணனே!

அமணர் கோலத்தில் அமுதாவோ மறைந்திட்டாள்;
சமணன் உடையணனைத் தொடர்ந்திட்டான் புகழனவன்

ஒற்றர் படைத்தலைவன் உடையணனோ ஆனைமலை
முற்றம் அடைந்தான் மூன்றுமுறை குயில்போலக்

கத்தி முடிக்கின்றான்; காவலரோ ஒருமூவர்
பத்தி யுடன்பணிந்து பாசறைக்குள் அழைக்கின்றார்.

உள்ளே ஆயிரவர்; உயர்படையின் ஆயுதங்கள்
வில்லேர் உழவரென வீற்றிருக்கும் படைக்காட்சி

ஒற்றர் படைத்தலைவன் உயரா சனத்திருந்து
கற்ற மொழியாலே கவண்வீச்சில் பேசுகிறான்

''இன்னும் ஒருதிங்கள் இரகசியமாய் வாழுங்கள்!
கன்னல் மொழிபேசும் பேரரசி கைதாவாள்!

குலச்சிறையார் கூடக் கொடுஞ்சிறையில் வாடிடுவார்
பலச்சிக்கல் காட்டப் படையெடுப்பு நேர்ந்திடலாம்

சோழப் படைவரலாம்; சோற்றுக் கடன்தீர்க்கச்
சூலப் படைஎழலாம்; சூழ்ச்சியினை யாரறிவார்?

அந்த வேளையிலே அறிவிப்புச் செய்திடுவேன்
சந்தடியில் வந்து சரித்திரத்தை மாற்றுங்கள்''

என்று மொழிந்தான்; இகல்—வீரர் ஆர்ப்பரித்தார்
நின்று வணங்கி நெடியவிடை கொடுத்திட்டார்

எல்லாம் அறிந்த இன்பத்தால் புகழன்தான்
பொல்லாத வெள்ளைப் புரவியிலே பாய்ந்திட்டான்

குதிரை மறையக் குளம்படியும் தான்மறைய
மதுரைச் சுரங்கத்தில் மாவீரன் புகழன்தான்

மெல்ல நடந்தான்; மிகஉயர்ந்த அரசிக்குச்
சொல்ல விரைந்தான் சூது.

தொடரும்

**தொன்மை :**

திக்கெல்லாம் சீர்மணக்கும் திருநெல்வேலிச் சீமையில் நீலத்திரைக் கடலோரத்திலே நிற்பது செந்திலம்பதி. குன்று தோறுடும் குமரப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் களிலே சிறந்தவை ஆறுபடை வீடுகள் என்ப தும், அவற்றுள் இரண்டாவது திருச்செந்தூர் என்பதும் எல்லோரும் அறிந்ததே. மலையும் மலை யைச் சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தைச் ''சேயோன் மேய மைவரை உலகம்'' என்றும், குறிஞ்சி நிலத்தில் குமரப் பெருமான் வாழ் கின்ருன் என்றும் சிறப்பித்துப் பாடுகிருர் ஒல்காப் புலமைத் தொல்காப்பியனுர். சேயோன் மேய தலங்களுள் தொன்மை வாய்ந்தது ''செந் திலம்பதி'' என்றும், ''திருச்சீரலைவாய்'' என் றும் பக்தர்கள் போற்றும் திருச்செந்தூர். பத் துப் பாட்டு என்னும் சங்க நூல்களில் முத லாவதாகிய திருமுருகாற்றுப்படையில்,

''உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே''

என்று இந்தத் தலத்தை நக்கீரர் பாடுகிருர். எட்டுத்தொகை நூல்களில் ஒன்ருகிய புற நானூற்றிலே, மருதன் இளநாகனுர் என்ற புலவர், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை வாழ்த்துகையில்,

''. . . . . . . . . . . . . .தாழ்நீர்
வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை''

என்று செந்திலம்பதியைக் குறிப்பிடுகிருர். குமரன் நிலைபெற்றிருக்கும் செந்திலம்பதியின் கடற்கரையில் உள்ள மணலிலும் மிகப் பல ஆண்டுகள் வாழ வேண்டுமென்று அந்தப் புலவர் பாண்டியனை வாழ்த்துகிருர். சங்க நூல்களை அடுத்து வந்த ஐம்பெருங்காப்பியங் களுள் ஒன்ருகிய சிலப்பதிகாரத்தில்,

''சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கைவேல் அன்றே
பாரிரும் பவ்வத்தின் உட்புக்குப் பண்டொருநாள்
சூர்மாத் தடிந்த சுடரிலைய வெள்வேலே''

என்று இளங்கோவடிகள் இந்த செந்திலம் பதியையும், அங்குக் குமரக் கடவுள் சூரபதுமனை வென்றதையும் குறிப்பிடுகின்ருர். இதற்குப் பின்னிட்ட இலக்கியமாகிய கந்தபுராணத்தில்,

''சூரலை வாய்இடைத் துளைத்து மார்பு கீண்டு
ஈரலை வாயிடும் எஃகும் ஏந்தியே
வேரலை வாய்தரு வெள்ளி வெற்பு ஒரீஇச்
சீரலைவாய் வருசேயைப் போற்றுவாம்''

என்று கச்சியப்ப சிவாச்சாரியார் இந்தச் செந் திலம்பதியைச் 'சீரலைவாய்' என்று பாடுகிருர். இதை ஒட்டியே அருணகிரிநாதரும் திருச்சீரலை வாய் என்று இந்தத் தலத்தையும், இந்தத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெரு மானை, 'அலைவாய் உகந்த பெருமாளே' என்றும் பாடுகிருர். இந்தத் தலத்துக்கு ஜயந்திபுரம் என்றும், 'ஸ்ரீசந்தி நகரம்' என்றும் வேறு பெயர்கள் வழங்குகின்றன. இவைகளிலிருந்து முருகப் பெருமான் தமிழர்களின் தனிக் கடவுள் என்பதும், இந்தப் பெருமான் எழுந்தருளி யிருக்கும் 'திருச்செந்தூர்' சங்க காலத்துக்கும் முற்பட்ட தொன்மை வாய்ந்தது என்பதும், புலவர் பாடும் பெருமை வாய்ந்தது என்பதும் விளங்குகின்றது.

**புராண வரலாறு :**

சூர்வதம் செய்ய வந்த முருகன், இந்த இடத்தில் வந்து பாசறை அமைத்ததாகவும், அப்போது இவ்வூர் மிகச் சிறியதாக இருந்த தாகவும், விசுவகர்மாவைக் கொண்டு முருகப் பெருமான் இந்தப் பதியை விரிவுபடுத்தினுர் என்றும் புராணம் கூறுகிறது. முருகனுடைய பூத கணங்கள் முருகப் பெருமானைப் பூசிக்க மலையும் கடலும் நதியும் கலந்த ஓரிடத்தைத் தேடியதாகவும், இந்த வசதிகள் இந்தத் தலத் தில் இருந்ததனுல் இதையே பூதகணங்கள் தேர்ந்தெடுத்ததாகவும் புராணங்கள் பேசுகின் றன. கடல் சூழ்ந்திருக்கும் திருச்செந்தூரிலே மலையும் நதியும் இல்லையே என்ற ஐயப்பாடு எழலாம். 'தண்பொருநை' என்று சிறப்பித்துப் பேசப்படும் தாமிரபரணி ஆறு இந்தத் திருக் கோயிலுக்கு மிக அருகில் கடலில் கலக்கிறது. இந்தப் பதியிலிருக்கும் முருகப் பெருமானின் திருக்கோயில் சந்தனுசல மலை என்ற சிறு குன் றின் மீது அமைந்திருக்கிறது. இந்த மலை இன்று வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும், கோவிலின் உள்ளே வடக்குப் பிராகாரத்தில் வேங்கடவன் சந்நிதிக்கு முன்பு தென்படுகிறது. ''கயிலை மலையனைய செந்திற்பதி'' என்பது அருணகிரியார் வாக்கு. ஆகவே இந்தப் பதியில் கடலும், மலையும், நதியும் கலந்திருக்கிறது என்று புராணங்கள் பேசுவதில் தவறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

**பாடல்கள் :**

இந்தத் தலத்துக்கும் அங்கே வீற்றிருக்கும் முருகப் பெருமானுக்கும் பல காலங்களில் பல புலவர்கள் பாடல்கள் பாடி முருகன் அருள்

# NEITHER BIRDS NOR WIND ARE FASTER

# ABT





# Parcel Service

**226, Dr. Nanjappa Road,**
**Post Box No. 1414.**
**COIMBATORE : 641018**

Phone : 23366 (3 Lines)

Telex : 042-262
ABT-CB

---

**Controlling Offices**

| | Phone | Telex |
|---|---|---|
| Bangalore | 40260 | 043-285 ABT BG: |
| Coimbatore | 26611 | 042-262 ABT CB: |
| Madras | 432935<br>432906 | 041-570 ABT MS: |
| Madurai | 23736 | 044-262 ABT MA |
| Salem | 7699 | 040-207 ABT SL |
| Trichy | 4665 | 045-207 ABT TR |

**Agent's Booking and Delivery Godowns**

213 Centres in Tamilnadu

6 Centres in Bangalore City

8 Centres in Kerala & 3 Centres in Pondicherry

WITH ASSOCIATE ARRANGEMENTS

WE CARRY GOODS ALL OVER INDIA

பெற்றிருக்கிறார்கள். முருகப் பெருமான் அடியார்களுள் முதலாவதாகக் கருதப்படும் நக்கீரர், தம் திருமுருகாற்றுப்படையிலே இந்தத் தலத்தைப் பாடியுள்ளார்.

அதை அடுத்துச் சிறந்த முருகபக்தராகிய அருணகிரிநாதர், இந்தப் பதிக்கு 84 திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். குமரகுருபரர் 'கந்தர் கலிவெண்பா' என்ற நூலை இவ்வூர் முருகன் மேல் பாடி இருக்கின்றார். குமரகுருபரர் ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தார் என்பதும், பிறந்த ஐந்து ஆண்டுகள் வரை பேசா ஊமையாய் இருந்து தாய் தந்தையர்களால் திருச்செந்தூர் முருகன்சந்நிதியில் இறைவனை இறைஞ்சியபோது அக்குழந்தை ''பூமேவு செங்கமலப் புத்தேளும்'' என்று தொடங்கிக் ''கந்தர் கலிவெண்பா'' பாடினார் என்ற வரலாறும் தமிழ் மக்கள் அறிந்ததே. திருப்புல்லாணியைச் சேர்ந்த பகழிக்கூத்தர் என்ற வைணவர் இந்த முருகன் மீது 'திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்' என்ற நூலைப் பாடியிருக்கின்றார். இந்தப் புலவர் தீராத வயிற்றுநோயால் துன்புற்றுத் திருச்செந்தூர் வந்து முருகன் ஆணைப்படி பிள்ளைத் தமிழ் பாடித் தன் நோயைத் தீர்த்துக் கொண்டார் என்பதும் வரலாற்று உண்மை. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு, இவ்வூரில் வாழ்ந்த திரிசுதந்திரர், ''வென்றிமலைக் கவிராயர்'' என்பவர் 900 பாடல்கள் கொண்ட திருச்செந்தூர்த் தலபுராணம் என்ற நூலைப் பாடியிருக்கிறார். இவை தவிர அச்சேறாத சில நூல்களும் பல நாடோடிப் பாடல்களும் இந்தத் தலத்துக்கு உண்டு.

**கோயிலமைப்பு :**

அழகிய நீண்ட கடற்கரையிலே அலைகள் வருடும் இடத்திலே இந்தப் பதியின் உயிர்நிலையாகிய முருகன் கோவில் அமைந்திருக்கிறது. இத்திருக்கோவில் எப்போது, யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதை வரையறுத்துச் சொல்ல முடியாது. சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தத் திருக்கோவிலின் மூலம் தோன்றி இருக்க வேண்டும். ஏனெனில், சங்க நூல்களில் கூட இந்தத் தலம் முருகன் பதி என்று சிறப்பித்துப் பேசப்படுகிறது. காலப் போக்கிலே இத்திருக்கோவில் விரிவாகக் கட்டப்பட்டு வளர்ந்திருக்கிறது. முதலில் உக்கிர பாண்டியன் என்ற பாண்டிய அரசன், இக்கோவிலைக் கட்டினார் என்று சொல்லப்படுகிறது. வரகுண பாண்டியனின் கல்வெட்டுக்கள், இந்தக் கோவிலுக்கு அந்த அரசன் 1,400 பொற்காசுகளை வழங்கினான் என்று சொல்லுகின்றன. ஆகவே, வரகுண பாண்டியன் காலத்தில் இக்கோயில் வளர்ந்திருக்க வேண்டும். இன்று இருக்கக் கூடிய நிலையில் இவ்வாலயத்தை ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீ தேசிக சுவாமிகள், ஸ்ரீ மௌன சுவாமிகள், ஸ்ரீ காசிவாசி சுவாமிகள், ஸ்ரீ ஆறுமுக சுவாமிகள், ஸ்ரீ வள்ளிநாயக சுவாமிகள் என்ற சைவத் துறவிகள் கட்டியிருக்கிறார்கள். மூலவர் கிழக்கு நோக்கி இருப்பினும், கோவிலின் நுழைவாயில் தெற்குப் பார்த்தே இருக்கிறது. இத்திருக்கோவிலின் இராசகோபுரம் 9 நிலைகள் கொண்டது. நீண்ட நெடுந் தொலைவில் இருந்து வரும் பக்தர்களுக்குக் கலங்கரை விளக்காக இருக்கிறது. கடல்மேல் வருவோர்களுக்குச் சுமார் 12 மைல்களுக்கு அப்பாலும் இந்த இராசகோபுரம் தெரிகிறது. நகரிலிருந்து திருக்கோயிலுக்குப் போகும் வழியில் 48 தூண்களால் ஆன முதலியார் மண்டபமும், 16 தூண்களாலான ரெட்டியார் மண்டபமும், அகஸ்தியர் கோவிலும், தூண்டுகை விநாயகர் கோவிலும் இருக்கின்றன. தூண்டுகை விநாயகர் கோவிலிலிருந்து இத்திருக்கோவிலுக்கு வரும் வழி முழுவதும் நிரந்தரமாகக் கூரை வேயப்பட்டிருக்கிறது. திருக்கோவிலின் முதல் மண்டபம் சண்முக விலாசம். 124 தூண்களால் ஆக்கப்பட்ட இம்மண்டபம் பலவிதங்களிலும் பெருமை வாய்ந்தது. ஆவணி, மாசி திருவிழாக் காலங்களிலே, ஏழாம் எட்டாம் திருநாட்களில் உற்சவ மூர்த்தியாகிய சண்முகர் இங்கு எழுந்தருளுகிறார். இந்த மண்டபம் தெற்கு நோக்கியிருக்கிறது. இதிலிருந்து வடக்கு நோக்கிப் பார்த்தாலே சண்முகர் சந்நிதி தெரியும். நுழையும்போதே ஆனந்தமாகச் சண்முகப் பெருமானைக் கண் குளிரக் கண்டுகொண்டே நுழையலாம்.

இத்திருக்கோவிலின் முதற் பிராகாரம் சுருளி மண்டபம். இந்தப் பிராகாரத்தின் வழியே போனால் ஆலமர் செல்வன் சந்நிதியும், மயில் மீது அமர்ந்து அசுரர்களுடன் போர் புரியும் முருகனின் பெரிய திருவுருவமும், அருணகிரிநாதர் சிலையும் காணலாம். வடக்குப் பிராகாரத்தில் நின்ற திருக்கோலத்தில் வேங்கடப் பெருமானும், இருந்த கோலத்தில் கஜலெட்சுமியும், கிடந்த கோலத்தில் அரங்கநாதர் மூன்று தேவியருடனும் காட்சியளிக்கின்றனர். இந்தச் சந்நிதியின் முன்புதான், முன்பு சொன்ன சந்தன மலையின் பகுதி தென்படுகிறது. இன்னும் சொல்லப் போனால், இந்த வடவேங்கடவன் சந்நிதியே மலையைக் குடைந்து கட்டப்பட்ட ஒரு குகைக் கோவிலாகத் தென்படுகிறது.

அடுத்த பிராகாரத்தில் வள்ளி தெய்வயானையுடன் வேதவிடங்கரும் அறுபத்துமூவரும் இந்தத் திருக்கோவிலைப் புதுப்பித்த சைவத் துறவிகளும் சிலை வடிவிலே நிற்கின்றார்கள். இந்த 2-ஆம் பிராகாரத்தில் வட பகுதியில் சண்டேசுவரரும், ஆடல் வல்லானும், சனீசுவரனும், பைரவரும் காட்சியளிக்கின்றனர். இதை அடுத்த உட்பிராகாரத்தில், தெற்குப் பார்த்துச் சண்முகர் சந்நிதியும், கிழக்குப் பார்த்து மூலவர் சந்நிதியும் இருக்கின்றன.

மூலவர் சுப்பிரமணியர் நின்ற திருக்கோலத்துடன் கிழக்கு நோக்கி இருக்கிறார். அவருக்கு இடப்புறமாகச் சிவலிங்கம் ஒன்று இருக்கிறது. மூலவர் இந்தச் சிவலிங்கத்தைப் பூசைசெய்வதுபோல் அமைக்கப்பட்டிருக்கிறது. அசுரர்களுடன் போர் புரியப் புறப்படு முன், இந்தச் சிவலிங்கத்தை முருகப்பெருமான் பூசை செய்ததாக நம்பப்படுகிறது. இந்த மூலவர் சந்நிதியின் அர்த்த மண்டப வாசலில் வீரவாகுவும், வீரமகேந்திரனும் காவல் புரிகின்றனர். அதற்கு வலப்புறமாக விநாயகரும், அன்னை பார்வதியும் இருக்கின்றனர். இடப்பக்கத்தில்

## அருள்திரு ஏகாந்தலிங்கசுவாமி திருக்கோயில்

### காந்தீஸ்வரம், ஆழ்வார் திருநகர், திருநெல்வேலி மாவட்டம்

சச்சிதானந்த சொரூபராகிய பரமசிவன் வீற்றிருக்கும் கைலையங்கிரியிலிருந்து காந்தை முனிவர் சிவகணங்கள் சூழப் பூவுலகிற்கு வந்து, மேரு தீர்த்தம், கங்கை தீர்த்தம், பொதிகை தீர்த்தம் ஆகியவைகளில் நீராடி, சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு வருகையில் தாமிர வருணி நதிக்கரையில் பசுமையான சேரிகளுக்கு நடுவே இந்தத் தலத்தைக் கண்டார். இத்தலத்தில் தங்கியிருக்கும்போது சோதிப் பிரகாசம் தோன்றவே மகிழ்ச்சிகொண்டு அன்புடன் தியானிக்கச் சிவலிங்க வரவு கண்டார். எனவே பூசைகள் பல செய்து இங்கேயே தங்கி வந்தார். அப்போது அன்புக்கு ஆட்பட்ட சிவபெருமான் நேரில் தோன்றிக் காட்சி கொடுத்து, வேண்டும் வரங் கேள் என அருளிச் செய்ய, ''எம்பெருமான், என் பெயரே உமக்கும், இத்தலத்திற்கும், இத்தீர்த்தத்திற்கும் அருள்வீர்'' என்று கூற அப்படியே காந்தைலிங்கம், காந்தைநகர், காந்தைத் தீர்த்தம் என்று அருளி மறைந்தருளினர். அன்று முதல் இத்தலம் காந்தை நகர் ஆயிற்று எனத் திருநெல்வேலித் தலபுராணத்தில் அறியக் கிடக்கிறது.

இப்புனிதத் தலத்தில் திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இத்திருப்பணி வேலைகளுக்குச் சுமார் 1,25,000 இலட்சம் வரை செலவேற்படலாமென்று உத்தேசிக்கப்படுகிறது. எனவே மெய் அன்பர்கள் அனைவரும் பொருளுதவிகளைத் தாராள மாக வழங்கி இத்திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் பூர்த்தியாகிக் கும்பாபிஷேகம் நடைபெற ஒத்துழைத்து இறைவனது அருளுக்குப் பாத்திரர் ஆகும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

**என். எஸ். மாரியப்பன்,**
அறங்காவலர் குழுத் தலைவர்.

**க. வயனக்கண், பி. காம்,**
செயல் அலுவலர்.

ரா. பாலையாதேவர்,
**வீ. நாயனர்,**
அறங்காவலர்கள்.

## அருள்திரு ஆனந்தவிநாயகர் திருக்கோயில்

### ஒற்றைத் தெரு, மன்னார்குடி, தஞ்சை மாவட்டம்

சீர்கொண்ட தொண்டரது சிந்தை மலருறையும்
நார்கொண்ட யானைமுக நாதனார்—ஏர்கொண்டு
மன்னுமிடம் வானோர்வழிபாடு செய்துதுதி
மன்னை நகரொற்றை மறுகு.

சண்பகாரணியமென்றும், தட்சிணத் துவாரகை என்றும் புகழ்பெற்று யாவராலும் கொண்டாடப்பெற்று வரும் மன்னார்குடி ஒற்றைத் தெரு மேலக்கோடியில் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகராய்த் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆனந்த விநாயகரை மதப்பாகுபாடின்றி எல்லோரும் வழிபடுகின்றனர். இக்கோயில் ஒரு பிரார்த் தனைத் தலமாக விளங்கிவருகிறது. இவ்வாலயத்தின் முக்கியமான வருமானம் உண்டியல் மூலம் வருகிறது. சென்ற ஆண்டு உண்டியல் மூலம் ரூ. 24,000 வசூலாகி உள்ளது.

இவ்வாலயத்திற்குத் திருமண மண்டபம் கட்டவும், விநாயகர் வளைவு கட்டவும் ஏற்பாடு செய்து மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்திப் பெருவிழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்ற 10—9—74-ஆம் தேதி தஞ்சைத் துணை ஆணையர் உயர்திரு எம். சூரியராஜ் அவர்களால் சதுர்த்தி விழா துவக்கப்பட்டு 10 நாட்களும் தெய்விக இசைக் கச்சேரி, நாதஸ்வரக் கச்சேரி, ஹரிகதா காலட்சேபங்களுடன் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

விரைவில் கோடி அர்ச்சனை ஆரம்பிக்க அறங்காவலர்களால் தீர்மானிக்கப்பட்டிருக் கிறது. அன்பர்கள் அனைவரும் கோடி அர்ச்சனையில் பங்குகொண்டு ஆனந்தவிநாயகரின் அருளுக்குப் பாத்திரமாகுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**வி. சீனிவாசய்யர், பி.எஸ்சி. பி.டி.,**
**ஜி. வெங்கடாசலம்,**
அறங்காவலர்கள்.

**சு. நாராயணசாமி,**
நிர்வாக அறங்காவலர்.

உற்சவ மூர்த்தியும், அவர் தேவியர் இருவரும் இருக்கின்றனர். மூலவராக இருக்கும் சுப்பிரமணியர் கருங்கல்லால் செய்த மிக அழகிய மூர்த்தி. மற்ற ஐந்து படை வீடுகளில் இருக்கும் மூர்த்திகளுள் இந்த மூர்த்திதான் மிக அற்புதமானது என்று சொல்லலாம். ஒரு கையிலே சக்தி ஆயுதத்தையும், இன்னொரு கையிலே ஜபமாலையும் கொண்டு அருள் வழியும் திருமுகத்துடன் காண்போர் உள்ளத்தைக் கவர்ந்து நிற்கிறார். சக்தி ஆயுதத்தைத் தாமரைமொட்டு என்றும், ஜபமாலை ஏந்திய காரணத்தினால் இது போதி சத்வரின் திருவுருவம் என்றும் கூறுவாரும் உளர். திருநெல்வேலி நகரிலே, தாமிரபரணிப் படுகையில் குறுக்குத்துறை என்ற இடத்தில் ஒரு பாறையிலிருந்து எடுத்த கருங்கல்லால் இந்தத் திருவுருவம் செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்திலும் குறுக்குத்துறைச் சுப்பிரமணியர் என்ற ஒரு ஆலயம் இருக்கிறது.

தெற்குப் பார்த்திருக்கும் சண்முகர் திருவுருவம் உற்சவரும் மூலவரும் ஆகும். எல்லா நாட்களிலும் கருவறையிலிருந்து மூலவராகக் காட்சி அளிக்கும் சண்முகர் ஆவணி, மாசிப் பெருநாள் அன்று உற்சவராக வெளி வந்து காட்சி அளிக்கின்றார். அப்படி அவர் வெளியே வருவது ''உருகுசட்ட சேவை'' எனப்படும். இந்த சண்முகர் வள்ளி தெய்வயானையுடன் 12 திருக்கரங்களிலும் ஆயுதங்கள் ஏந்திக் கம்பீரமாகக் காட்சி தருகின்றார். இந்தக் காட்சியைக் கண்ட ஒரு புலவர்,

''வரங்கொண்ட உமை முலைப்பால்
மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு
கண்மலரும்
சிரங்கொண்ட மறை இறைஞ்சும்
சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலும் என்தன்
கண்ணைவிட்டு நீங்காவே''

என்று பாடுகிறார். உண்மையிலேயே ஒருமுறை இந்த சண்முகப் பெருமானையும், மூலவர் சுப்பிரமணியரையும் கண்குளிரக் கண்டாலே அவர் நம் நெஞ்சை விட்டு நீங்குவதே இல்லை என்று சொல்லலாம்.

இந்த சண்முகப் பெருமான் திருவுருவம் சில காலம் கடல் வாசம் செய்ததாக ஒரு வரலாறும் உண்டு. கி.பி. 1648ஆம் ஆண்டு டச்சுக்காரர்கள், தங்கம் என்று எண்ணி இந்த மூர்த்தியைப் படகில் ஏற்றிச் சென்றார்கள். அச்சமயம் கடலில் புயல் உருவாகிப் படகு கவிழ்ந்துவிட்டது. சண்முகப் பெருமானைக் கடல் கொண்டு விட்டது. பின்னிட்டு, திருநெல்வேலிச் சீமையை ஆண்ட வடமலையப்பப் பிள்ளையின் கனவில் பெருமான் தோன்றித் தானிருக்குமிடத்தைக் காட்டினார். வடமலையப்பப் பிள்ளையனும் பெருமான் இருக்கின்ற இடத்தைக் கண்டு எடுத்து கி.பி. 1653ஆம் ஆண்டிலே இத்திருக்கோவிலிலே சேர்த்தார். பெருமான் கடலிலே வாசம் செய்தார் என்பதைக் காட்டப் பெருமானின் திருமுகத்திலே இன்றும் அடையாளங்கள் இருக்கின்றன. இந்த நிகழ்ச்சியை ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் புனர்பூசம் நட்சத்திரத்தன்று விழாவாகக் கொண்டாடுகிறார்கள். திருவீதி உலா வரும்போது சண்முகர் முதலில் தங்குவது வடமலையப்பப் பிள்ளையன் மண்டபத்தில்தான். பின்னாளில், பாஞ்சாலங் குறிச்சியை ஆண்ட வீரபாண்டியக் கட்டபொம்மன் முருகப் பெருமானின் பக்தர்களில் ஒருவராகி, உலா வரும் முருகப் பெருமான் எழுந்தருள ஒரு மண்டபம் கட்டினார். ஆனால் அகந்தை காரணமாகத் தன் மண்டபத்தில்தான் உலா வரும் சண்முகர் முதலில் எழுந்தருள வேண்டுமென்று அவர் முயற்சி செய்ததாகவும், சண்முகப் பெருமான் அதைத் தடுத்துவிட்டதாகவும் செவி வழிச் செய்தி ஒன்று இங்கு நிலவுகிறது. வீரபாண்டியக் கட்டபொம்மன் இந்த ஆலயத்துக்குக் கொடுத்த நகைகளும், சிலைகளும், கலைப் பொருள்களாக இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மூலவர் சுப்பிரமணிய மூர்த்திக்குப் போத்திமார் என்று சொல்லப்படும் மத்வ அத்வைதப் பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் முறை வைத்துப் பூசை செய்துவருகின்றனர். இவர்கள் எல்லோரும் 'போத்திமடம்' என்ற தனி இடத்தில் வசிக்கின்றனர். அங்கே அவர்களுக்கு வேண்டிய தனி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவர்களுடைய தலை முடியைக் கொண்டே எளிதில் இவர்களை அடையாளம் கண்டு கொள்ளலாம். அசப்பில் இவர்கள் மலையாளப் பிராமணர்களைப் போலத் தோற்றமளிக்கின்றனர். ஆறுமுகப் பெருமானுக்குச் சிவாச்சாரியார்கள் பூசை செய்து வருகின்றனர். இவர்கள் தமிழகத்திலுள்ள மற்ற சிவாலயங்களில் பூசை செய்யும் குருக்கள்மார்களைப் போன்றவர்களே. இக்கோவிலில் நடைபெறும் மற்ற பணிகளை 'திரிசுதந்திரர்' எனப்படும் முக்காணிப் பிராமணர்கள் செய்து வருகின்றனர். இவர்கள்தான் இந்தக் கோவிலின் சர்வ வியாபகர்கள். இந்தத் திரிசுதந்திரர்களைப்பற்றி ஒரு கதையும் உண்டு. கங்கைக் கரையில் முனிவர்கள் பலர் பிரம்ம தேவனை நோக்கி அருந்தவம் இயற்றி விண்ணிலும் மண்ணிலும் சத்திய உலகத்திலும் உரிமையுடன் உலவி இறைவழிபாடு செய்யும் வரம் பெற்றனராம். சிவனிடத்தும் திருமாலிடத்தும் அதே வரத்தைப் பெற்று மூவுலகத்திலும் உரிமை பெற்றமையால் அவர்கள் முக்காணியர் என்று பெயர் பெற்றனராம். தில்லையில் மூவாயிரவர் என்பது போலத் திருச்செந்தூரில் இரண்டாயிரம் திரிசுதந்திரர்கள் இறைவழிபாட்டில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

செந்தில் வடிவேலன் சந்நிதியில் அதிகாலை முதல் இரவு வரை, எட்டுக்கால பூசை குமார தந்திர முறைப்படி நடைபெறுகின்றது. இது தவிர மூன்று கால அபிஷேகமும் நடைபெறுகின்றது. சண்முகப் பெருமானுக்கு ஒவ்வொரு மாதமும் விசாக நட்சத்திரத்தன்றும், சித்திரை முதல் தேதியன்றும், ஐப்பசி முதல் தேதியன்றும் அபிஷேகம் நடைபெறுகின்றது. ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளியன்று செந்தில் விநாயகர் "கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியாக'' கிரிப்பிராகாரத்தில் மயில் வாகனத்தில் உலா வருகிறார். இவையல்லாமல் கார்த்திகை, விசாகம், சஷ்டி தினங்களில் உட்பிராகாரத்தில் பெருமான் எழுந்தருளுகிறார். சந்நிதியின் அருட்பிரசாதமாக இலை விபூதி கொடுப்பது இந்தத்

தலத்தில் முக்கிய அம்சம். அண்மையில் கிரிவீதி உலா வருவதற்காக நிலையான ஆர். சி. மண்டபம் திரைப்பட அதிபர் சாண்டோ சின்னப்பா தேவர் உபயத்தால் அமைக்கப்பட்டிருக்கிறது. அதல்லாமல், பழனியில் இருப்பது போலவே, இந்தத் திருக்கோவிலுக்கு ஒரு தங்க ரதமும் செய்யப்பட்டிருக்கிறது. வண்ண விளக்குகளால் தங்க ரதம் அலங்கரிக்கப்பட்டுக் கிரி வீதியில் முருகப் பெருமான் உலா வருவது பெருமான் புட்பக விமானத்தில் விண்ணிலிருந்து வருவது போன்று கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டிலும் ஆவணி, மாசி மாதங்களில் பெரிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு திருவிழாவும் 12 நாட்கள் நடைபெறுகிறது. திருவிழாக்களிலெல்லாம் மாசித் திருவிழாத்தான் முக்கியமானதாகும். மாசித் திருவிழாவிலே இந்தத் திருக்கோவிலின் மூன்று திருத் தேர்களும் நகர் வலம் வருகின்றன. ஆனால், ஆவணித் திருநாளில் இரண்டு திருத்தேர்கள் தான் வலம் வருகின்றன. இந்த இரண்டு திருநாட்களிலும் 7ஆம், 8ஆம் திருநாட்கள் முக்கியமானவை. இந்த நாட்களில் முருகப் பெருமான் வெள்ளை, பச்சை, சிவப்பு, ஆடைகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டுத் திருவீதி உலா வருகிறார். பல மண்டபங்களில் எழுந்தருளிக் காட்சி அளிக்கிறார். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் முருகப் பெருமானே செய்கிறார் என்று காட்டவே இந்த மூன்று கோலங்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த மூன்று திருக்கோலங்களிலும் பக்தர்கள் மனத்தைக் கவர்வது பச்சைத் திருமேனியே. பச்சை நிறம் காத்தலையும், வளப்பத்தையும் காட்டுகிறது. ஆகவே வரமளித்துக் காக்கும் கடவுளாக முருகப் பெருமானை மக்கள் காண விரும்புவது இயற்கைதானே!

வசந்த விழா என்பது சித்திரை மாதத்தில் 10 நாட்கள் நடைபெறும் இன்னொரு விழாவாகும். வள்ளி தெய்வயானையுடன் சண்முகர் வசந்த மண்டபத்தில் எழுந்தருளிப் பக்தர்களுக்குக் காட்சி அளிக்கின்றார். இதுவன்றி வைகாசி மாதத்தில் 12 நாட்கள் 'விசாகப் பெருநாள்' கொண்டாடப்படுகிறது. அதில் கடைசி இரண்டு நாட்கள் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அந்த நாட்களில் பக்தர்கள் பால் குடமும், பால் காவடியும் எடுத்து வந்து முருகப் பெருமானை வழிபடுகின்றனர். சமைக்கப்பட்ட மீன், காவடியில் சுமந்து வரப்பெற்று முருகப் பெருமான் சந்நிதியில் உயிர்பெற்று எழுந்தது என்ற பெருமை இந்த விழாவிற்கு உண்டு. இந்த விசாகத் திருநாள் தான், மற்ற திருநாட்களை விட அதிக வருமானத்தைக் கொடுக்கிறது.

இன்னொரு பெரிய திருவிழா, ஐப்பசி மாதத்தில் நடைபெறும் சஷ்டித் திருவிழாவாகும். இந்தத் திருவிழா 6 நாட்கள் நடைபெறுகின்றது. பக்தர்கள் இந்த 6 நாட்களிலும் விரதம் இருந்து 6-வது நாள் முருகன் சூரபதுமனை வென்ற காட்சியைக் கண்டுவிட்டு, 7-வது நாளில் தங்கள் விரதத்தை முடித்துவிடுகிறார்கள். இந்தத் திருவிழா மற்ற திருவிழாக்களை விட அதிக சாந்நித்யம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்தத் திருவிழாவிற்கு வரும் கூட்டம் ஏராளம். சண்முகப் பெருமான் இந்தத் திருவிழாவிலே அன்னை பராசக்தியிடம் வேல் வாங்கிக் கொண்டு திருவாவடுதுறை ஆதீனத்தார் கட்டி இருக்கும் சண்முகர் மண்டபத்தில் எழுந்தருளி அங்கிருந்து கடற்கரை ஓரமாக நடந்து சூரபதுமனைக் கிளையுடன் வேரறுத்துப் பின் சந்தோஷ மண்டபத்தில் தங்கிப் பின்பு திருவீதி உலா வந்து அடுத்த நாள் திருமணக் கோலம் கொள்கிறார்.

இந்தத் தலத்திலே 24 தீர்த்தங்கள் இருக்கின்றன. புராண மரபுப்படி இந்தத் தலத்தில் உள்ள கடலில் மூழ்கிப் பிரமன் தான் இழந்த 5-வது தலையைப் பெற்றதாகவும், குதிரை முகத்துடன் பிறந்த அங்கதசுந்தரி என்ற பாண்டிய இளவரசி அழகிய திருமுகத்தைப் பெற்றதாகவும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சண்முக விலாசத்திற்கு 600 அடி தெற்கே கடற்கரை ஓரத்தில் ஸ்கந்த புஷ்கரணி என்று சொல்லப்படுகின்ற 'நாழிக் கிணறு' இருக்கிறது. இந்தக் கிணறு முருகனின் வேலால் உண்டாக்கப்பட்டது என்று நம்பப்படுகிறது. இந்த நாழிக் கிணறு உட்புறத்தில் இருக்கும் சிறிய ஊற்றில் பளிங்கு போன்ற சுத்த நீரும் அதைச் சுற்றி உள்ள மற்ற ஊற்றுக்களில் உப்புக் கலந்த சேற்று நீரும் சுரக்கிறது. எப்படி இந்தச் சிறிய இடத்தில் இரு வேறு இயல்புகளைக் கொண்ட நீரூற்றுக்கள் வருகின்றன என்பது ஆராய்ச்சிக்குரிய பொருளாகும். இந்தச் சிறிய ஊற்றில் எவ்வளவு பேர் எவ்வளவு நீர் இறைத்தாலும் நீர் குறையாமல் இருப்பது இன்னுமோர் அதிசயம்.

சுமார் 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பல பெரிய பழமையான நகைகள் இத்திருக்கோவிலில் இருக்கின்றன. மூலவர் சண்முகர் வள்ளி தெய்வயானை செந்தில் விநாயகர் ஆகியோருக்குத் தங்கக் கவசங்களும் இருக்கின்றன. இவைதவிர வைரத்தாலும் விலை உயர்ந்த கற்களாலும் ஆன ஹஸ்தங்களும் இருக்கின்றன. வெள்ளியின் மேல் தங்க முலாம் பூசிய பல வாகனங்களும் உள்ளன. 1803ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவராயிருந்த லூசிங்டன் என்ற ஆங்கிலேயர் இத்திருக்கோவிலுக்கு ஒரு வெள்ளிக் குடம் பரிசளித்திருக்கிறார். இத்திருக்கோவிலின் வருமானம் சுமார் 24 லட்சம். 19 சிறு கோவில்கள் இத்துடன் இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 5 அறங்காவலர்களும் ஒரு நிர்வாக அதிகாரியும் இதன் நிர்வாகத்தை ஏற்று இருக்கிறார்கள்.

இந்தத் திருக்கோவிலிலே 4 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகளில் இரண்டு, வரகுணமாற பாண்டியன் (கி.பி. 875) காலத்தவை. மூன்றாவது 1282ஆம் ஆண்டில் அரசாண்ட பாண்டியன் மாறவர்மன் என்பவனுடையது. நான்காவது விக்கிரம பாண்டியனுடையது ஆகும். இந்தச் செந்திலம்பதியில் உள்ள முருகப் பெருமான் ஆலயம் குகைக் கோவிலாக இருந்திருக்கிறது என்பதற்கு நிறைய ஆதாரம் இருக்கின்றது. இத்திருக்கோவிலுக்கு வடக்கே வள்ளி குகை என்ற சிறிய குகை இன்றும்

இருக்கிறது. இவ்வூருக்குச் சற்றுத் தெற்கே குலசேகரப் பட்டினத்தை அடுத்த மணப்பாடு குகையும் இந்த இனத்தைச் சார்ந்தது. குகைக் கோவில்கள் பல்லவர்கள் காலத்தில் தான் அமைக்கப்பட்டன என்பது எல்லோரா லும் ஒப்புக் கொண்ட உண்மை. ஆனால், பாண்டியன் காலத்திலும் குகைக் கோவில்கள் அமைக்கப்பட்டன என்பதற்கு மணப்பாடும் வள்ளி குகையும், திருச்செந்தூர்க் கோவிலும் எடுத்துக் காட்டுகள். அவைகளைப் பற்றி நீண்ட தொரு ஆராய்ச்சியே செய்யலாம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று பெருமைகளையும் தன்னிடத்தே கொண்ட பழம் பெரும் பதி திருச்செந்தூர். சங்க காலம் தொட்டு இன்று வரை தமிழ் மக்களின் பண் பாட்டிற்கும், சமய வழிபாட்டிற்கும், வாழ்விற் கும் நிறைந்த கருவூலமாக நிற்பது திருச்செந் தூர். இதை அடுத்த காயல்பட்டினமும் குல சேகரபட்டினமும் பாண்டியர்களின் துறைமுகங் களாக இருந்திருக்கின்றன. முத்துக் குளித்த கொற்கையும் இந்தப் பகுதியில்தான் இருந் திருக்க வேண்டும். காயல்பட்டினம் அருகே தாமிரவருணி ஆறு கடலுடன் கலக்கிறது. ஆனால், கடல் இந்தப் பதிக்கு ஒரு புறத்தில் முன்னேக்கியும் மற்றொரு புறத்தில் பின்னேக்கி யும் சென்றிருக்க வேண்டும். அவைகள் ஆராய்ச்சிக்குட்பட்ட விஷயங்கள். இயற்கை யின் கோர விளையாட்டில் இந்தப் பகுதி பாதிக் கப்பட்டாலும், அன்றுபோல் இன்றும் செந்தி லம்பதியானது முருகன் திருவருளால் நிமிர்ந்து நிற்கிறது.

இந்த முருகனுக்குத் தமிழ் மீது தீராக் காதல். தமிழ் என்று வந்துவிட்டால் அவனுக்குச் சாதி, சமய வேறுபாடுகள் இல்லை. திருச்செந் தூரை அடுத்த காலன்குடியில் வாழ்ந்த மீராக் கண்ணு என்ற முகமதியப் புலவர்க்கு, அவர் பட்ட கடனை அடைக்கத் தன் உண்டியல் பணத் தைக் கொடுத்தாராம். வைணவரான பகழிக் கூத்தரிடம் பிள்ளைத் தமிழ் பெற அவர் வயிற்று நோயைத் தீர்த்து வைத்தார். இருளிலே வழி தடுமாறி நின்ற கந்தசாமிப் புலவருக்கு விளக்கும் சேகண்டியும் கொண்டு வழிகாட்டி அவருடைய தமிழ்ப் பாமாலையைப் பெற்ருர்; அதுவன்றியும் அவரது தாம்பூல எச்சிலையும் தம் திருமேனி யில் தாங்கிக் கொண்டாராம். இப்படியே பல நிகழ்ச்சிகளை இந்தப் பகுதி மக்கள் அலுக் காமல் சொல்கிருர்கள்.

முருகக் கடவுள் குழந்தைதான்; ஆனல் செந்திலம்பதியில் இருக்கும் முருகன் சிறு குழந்தை மட்டுமல்ல; பக்தர்களைக் காக்கும் வல்லமை படைத்து, இரண்டு கன்னியர்களை மணம் புரிந்த ஆண்பிள்ளை அவன். இதோ படிக்காசுப் புலவர் பாடுகிருர் கேளுங்கள் :

''முன்னம் நின் அன்னை அமுதூட்டிப்
பொட்டிட்டு மையிட்டு முத்தமிட்டுக்
கன்னமும் கிள்ளிய நாளல்லவே
என்னைக் காப்பதற்கு,
அன்னமும் மஞ்ஞையும் போல்இரு
பெண்கொண்ட ஆண்பிள்ளை நீ
இன்னமும் சின்னவன் தானே
செந்தூரில் இருப்பவனே!''

இந்த முருகனிடம் நாம் வேண்டுவது பொன்னும், பொருளும் போகமும், அல்ல, அருளும், அன்பும், அறமுமே!


## அருள்திரு இராசகோபாலசுவாமி திருக்கோயில்

### மன்னர்குடி :-: தஞ்சாவூர் மாவட்டம்

இத்திருக்கோயிலில் குடிகொண்டிருக்கும் அருள்திரு செங்கமலத் தாயார் உடனுறையும் இராசகோபாலப் பெருமாள் மூர்த்திகரமுள்ளவர். ''மண்ணில் மிக்கது மன்னர்குடி'' என்பதில் ஐயமில்லை.

கல்வெட்டுகளின்படி இந்த மாபெரும் கோயில் முதல் குலோத்துங்க சோழ மன்னர் காலத்தில் (கி.பி. 1113இல்) கட்டப்பட்டதாகத் தெரியவருகிறது. குலோத்துங்க சோழ விண்ணகரம் எனவும் குறிப்பிடப்படுகிறது. நாயக்க அரசர்களில் சிறந்தோராகிய ஸ்ரீ விஜய ராகவ நாயக்கர் காலத்தில், இன்றைக்குச் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு பல திருப் பணிகள் செய்தும், ஆயிரம் கால் மண்டபம் கட்டப்பட்டும் உள்ளது. நாயக்க மன்னர்கள் கருங்கல் கிடைக்காத தஞ்சை மாவட்டத்திற்குத் திருச்சிக்கு அருகேயுள்ள மாமலையிலிருந்து கொண்டு வரப்பட்ட கருங்கல்லினல் பல மாபெரும் மண்டபங்களும், கோபுரங்களும் திருமதில்களும் எழுப்பியுள்ளனர்.

நாள்தோறும் பெருமாளின் சேவை திவ்விய உற்சவமாக இருக்கும். ஆண்டின் 12 மாதங்களும் உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. அவைகளுள் சிறப்பாகப் பங்குனி 18-ஆம் நாள் உற்சவமும், ஆனித் தெப்போற்சவம், ஆடிப் பூர உற்சவம், இராப்பத்து பகல் பத்து உற்சவமும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இத்திருக்கோயிலுக்கு 28—6—74இல் வருகை தந்த மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள், பொது மக்களுக்கு உதவும் குடிநீர் வசதியை மேலும் அதிக அளவில் குழாய்கள் பொருத்தவும், திருமண மண்டப வேலைகளை விரைவில் கட்டி முடிக்கவும் அறிவுரை வழங்கினர்கள்.

திரு. து. கோ. சந்திரசேகரன் செட்டியார்,
அறங்காவலர் குழுத் தலைவர்.

இரா. செயசந்திரன்,
செயல் அலுவலர்

திரு. எஸ். சிவசுப்பிரமணியம், பி.எஸ்சி., பி.எல்.,
திரு. கே. ஆர். இராஜகோபாலய்யங்கார், திரு. எஸ். முனியாண்டி,
அறங்காவலர்கள்.

# அருள்திரு
# முத்துமாலை அம்பாள்
# திருக்கோயில்

## குரங்கனி,

## திருச்செந்தூர் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்

தசரதன் தவப்புத்ர ராமனொரு காலத்தில்
தசமுகன் சம்மாரனைச்
சந்ததம் வானரச் சேனைபுடை சூழவே
தகுதியாய் அணிவகுத்த
புசபல மிகுந்த இடமாதலா லந்நகர்
புகழ்குரங் கணியானதே
புனிதமிகு அம்பிகா அவ்விடம் வந்துநீ
பொற்பணிகளைக் களைந்து
வசமாகவே கரையில் வைத்து நீராடிடவும்
மணிபணிகள் உருத் திரண்டு
வளமிகும் லிங்கமாய் சோதியின் வடிவமாய்
மறைகளுக் கெட்டாத தாய்
முசியாத நித்திலம் லிங்க வடிவாகவும்
முனிமா தவத்தர் தொழவே
முத்தர்பணி சக்தியுமை நெற்றியிலு தித்ததிரு
முத்துமாலைப் புவனையே

இந்த வரலாற்றினை நினைவூட்ட ஒவ்வொரு ஆண்டும் ஆனி கடைசி செவ்வாய்க் கிழமை, ஆடி மாதம் முதல் செவ்வாய்க்கிழமை, ஆனிப் பெருந் திருவிழா கொண்டாடப் படுகிறது. இப்பெரும் திருவிழாவிற்குத் தமிழகமெங்குமிருந்து பக்தர்கள் கூட்டம் திரண்டு வந்து பிரார்த்தனை செலுத்தும் காட்சி, கண்கொள்ளாக் காட்சி.

| | |
|---|---|
| தரிசன காலம் | காலை 7 முதல் 8-30 வரை |
| | மாலை 5 முதல் 7 வரை |
| செவ்வாய், வெள்ளி | காலை 7 முதல் 1 மணி |
| | மாலை 5 முதல் 8 மணி |

இத்திருத்தலம் திருச்செந்தூர்—திருநெல்வேலி நெடுஞ்சாலையில், திருநெல்வேலியிலிருந்து 38 கிலோ மீட்டர் தொலைவுள்ள நவ திருப்பதிகளுள் ஒன்றான தென் திருப்பேரை என்னும் ஊரிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் தாமிரப ரணியின் தென் கரையில் அமைந்துள்ளது.

பக்தர்கள் அனைவரும் வந்து தரிசனம் செய்து உண்டியல் காணிக்கை செலுத்தி அம்பாளுடைய திருவருட் பேறு எய்தும்படி வேண்டிக் கொள்கிறோம்.

**ச. குத்தாலலிங்கம்,**
செயல் அலுவலர்.

# எம்பெருமானார் தரிசனம்

திரு. எதிராஜ பூபதி நாயுடு

வைணவம் விஷ்ணுவையே பரம் பொருளாகக் கொண்டு வழிபடும் மதம். விஷ்ணு என்பதற்கு எங்கும் நிறைந்தவர் என்பது பொருள். எங்கும் நிறைந்த பரம்பொருளான விஷ்ணுவை வழிபடும் மதமே வைணவம்.

வைணவ மதத்திற்கு ''எம்பெருமானார் தரிசனம்'' என்ற சிறப்புப் பெயரும் ஏற்பட்டது. எம்பெருமானாகிற இராமாநுசர், 'இவ்வுலகில் 125 ஆண்டுகள் எழுந்தருளியிருந்து, வைணவ மதத்தை மகோன்னதமாக விளங்கச் செய்தார். உடையவரின் இந்த உயரிய சேவைக்காக, திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள அரங்கநாதப் பெருமாள் உவப்பு மேலிட்டு வைணவ மதத்திற்கு, எம்பெருமானார் தரிசனம் என்கிற மறுபெயர் சூட்டி மகிழ்ந்தாராம்!

பெரிய பெருமாளின் இந்த நியமனத்தைப் பொய்யில்லாத மணவாள மாமுனிகளின் திருவாக்கால் சேவிப்போம்!

''எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார்—அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
அந்தச் செயல் அறிகைக்கா!''

எம்பெருமானார் தரிசனம் என்று சிறப்புப் பெயர் பெற்றுள்ள வைணவ மதத்தின் அடிப்படைக் கொள்கைகள் யாவை என்பதைச் சுருக்கமாக விண்ணப்பிப்பதே இவ்வுரையின் நோக்கமாகும். நமது பாக்கியவசமாக, எம்பெருமானாரே வைணவ மதத்தின் தலையாய கொள்கைகளை நாம் உய்யுமாறு உதவியுள்ளார்.

## ஆளவந்தார் கடாட்சித்த 'ஆம் முதல்வன்':

திருவரங்கத்தில் ஆளவந்தார் வைணவ மதத்தின் தலைமைப் பீடத்தை அலங்கரித்திருந்தார். விசயராகவப் பெருமாள் எழுந்தருளித் திருப்புட்குழியில், யாதவப் பிரகாசரிடம் வேதம் பயின்ற இராமாநுசர், வைணவக் கொள்கைகளுக்குப் புறம்பாகத் தம் ஆசான் கூறியவைகளைக் கண்டித்து, வைணவக் கொள்கைகளின் உயர்வை விளக்கும் மேதா விலாசத்தை அறிந்து வியந்தார். இராமாநுசரைக் கடாட்சிக்கத் திருவரங்கத்திலிருந்து கல்லுயர்ந்த நெடுமதில் சூழ் கச்சிக்கு எழுந்தருளினார். யாதவப் பிரகாசர் குழாத்தில் இராமாநுசர் பேரருளாளரைச் சேவிக்கும்போது கண்டார். தமக்குப் பிறகு வைணவத் தலைமைப் பீடத்தை இராமாநுசர் அலங்கரிக்க வேண்டுமென்று திருவுள்ளப்பட்டு, 'ஆம் முதல்வன்' என்று ஆசி கூறிவிட்டுத் திருவரங்கம் திரும்பினார்.

இராமாநுசரை வைணவத் தலைமைப் பீடத்தை அலங்கரிக்க அழைத்து வரப் பெரிய நம்பிகளைக் கச்சியம்பதிக்கு அனுப்பினார். ஆனால், இராமாநுசர் திருவரங்கம் சேருமுன்பே, ஆளவந்தார் திருநாடு அலங்கரித்து விட்டார்.

## கலிஇருளே மிடைதரு காலமும் காரேய் கருணை இராமாநுசரும்:

ஆளவந்தாருக்குப் பிறகு வைணவ தரிசனத்திற்கு ஆசாரியனாக எழுந்தருள வேண்டியிருந்த நிலைமையில், இராமாநுசரது உள்ளம் ஆழ்ந்து சிந்தித்த வண்ணம் இருந்திருக்க வேண்டும். கடல் அளாவிய திசை எட்டின் உள்ளும் கலியிருளே மிடைதரு காலம்; இராமாநுசர் காலம். சைவ மதத்தைச் சார்ந்திருந்த சோழ அரசன், வைணவ மதத்தைக் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருந்தான். மைசூர் ராச்சியத்திலும் மன்னன் ஜைன—சமணர்களின் சீடனாகி விட்டான். திருமலையில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் திருமால்தானா என்பதிலும் சந்தேகம் ஏற்பட்டு வைணவப் பொலிவு குறைந்திருந்தது. கன்னட தேசத்தில் அத்துவைதியான யக்ஞமூர்த்தியை வெல்வாரில்லை. அருளாளனின் கச்சிப் பிராந்தியத்திலும் அத்துவைதியான யாதவப் பிரகாசனை அடுத்தே கல்வி பயில நேர்ந்தது. இச்சூழ்நிலையில் அப்பெரும் பொறுப்பை நிர்வகித்து, வைணவ தரிசனத்தை மேன்மேலும் வளம்பெறச் செய்யும் உபாயங்களைப் பற்றியே இராமாநுசர் எண்ணி வாழ்ந்திருக்க வேண்டும். சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும், எல்லையில்லா அறநெறியாவும் தெரிந்து எண்ணருஞ்சீர் நல்லார் பரவும் இராமாநுசராகத் திகழ்ந்த இவர், வைணவ தரிசனத்தின் பெருங் கொள்கைகளைத் திரட்டிச் சுருக்கி மக்களுக்கு எளிய முறையில் உபதேசிக்க எண்ணியிருக்க வேண்டும்! அப்படியாகத் தனக்குள் திட்டங்களையும் தேர்வுகளையும் வகுத்துக் கொண்டு, அவைகளை இறைவனிடம் சமர்ப்பித்து அவன் ஆசியைப் பெற விரும்பியிருக்க வேண்டும். அது சமயம் பேசும் பெருமாளாகத் திகழ்ந்தவன் கச்சிப் பேரருளாளனே! அதுவும் தன் குருவாக அமைந்த திருக்கச்சி நம்பிகளிடமல்லவா பேசுகிறான்! எனவே, தன் திருவுள்ளத்தில் உருவெடுத்தவைகளை, நம்பிகள் மூலம் பேரருளாளனின் துயர் அறு சுடரடிகளில் சமர்ப்பிக்க விரும்பியிருக்கின்றார்!

# அருள்திரு பூவனூர் சதுரங்கவல்லபநாதசுவாமி ஆலயம்

**மன்னார்குடி வட்டம் :—: தஞ்சை மாவட்டம்**

இவ்வாலயம் தஞ்சை ஜில்லா மன்னார்குடி தாலுகா நீடாமங்கலம்—மன்னார்குடி சாலையில் பாமணி ஆற்றுக்கு மேல்புரம் நீடாமங்கலத்திலிருந்து தெற்கே இரண்டு கல் தொலைவில் இருக்கிறது. இக்கோயில் திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற சோழ நாட்டுத் தலங்களில் 40-வது தலமாக இருக்கிறது. நாவுக்கரசர் தவிர உமாபதி சிவாச்சாரியார் மற்றும் சேக்கிழார் பாடிய பெரிய புராணம் ஆகியவற்றிலும் இவ்வூர் இறைவனைப் பாடியுள்ளார்கள்.

இவ்வாலயத்து இறைவன் பெயர் புட்பவனேசுவரர். இறைவி பெயர் கற்பகவல்லி. இதைத் தவிர ராஜராஜேஸ்வரி என்னும் மற்றொரு இறைவியும் உள்ளது. ஆகவே இவ்வூரின்கண் உள்ள ஆலயத்து இறைவனுக்கு இரண்டு தேவியர்கள் உள்ளனர்.

திருநெல்வேலி மன்னன் வசுசேன மகாராஜனுக்கு புத்திரப் பேறு இல்லாமையால் இவ்வூர் வந்து தங்கிப் புட்பவனேசுவரரையும், இறைவியையும் வணங்கி நின்ற காலத்தில், இறைவன் உமாதேவியையே அம் மன்னருக்குக் குழந்தையாக அனுப்பி இக்குறை தீர்த்ததுடன், அது நன்கு வளர சப்தமாதாக்களில் ஒன்றான ஸ்ரீசாமுண்டீஸ்வரியையும் இவ்வூருக்கு வரவழைத்ததாக வரலாறு உள்ளது. மன்னன் வளர்த்த குழந்தைக்கு ராஜராஜேஸ்வரி என்னும் பெயர் சூட்டியதுடன் அக்குழந்தையாகிய ராஜராஜேஸ்வரி திருமணப் பருவம் எய்தியவுடன் இறைவன் ராஜராஜேஸ்வரியுடன் சதுரங்கமாடி வென்று திருமணம் செய்து கொண்டதாகவும் வரலாறு உள்ளது. ஆகவே பிற்பாடு இறைவன் சதுரங்கவல்லபநாதர் என்ற காரணப் பெயரும் பெற்றுள்ளார். அதுவே தற்சமயம் வழக்கில் இருக்கிறது. இங்கு சாமுண்டீஸ்வரிக்குத் தனிக் கோவில் உள்ளது.

இக்கோயில் தலவிருட்சம் பலா மரம். இவ்வாலயத்தின் முன்புறம் பாற்குளம் என்னும் தீர்த்தமும், கோயிலுக்கு மேற்புறம் கருங்குட்டத் தீர்த்தம் என்னும் தீர்த்தக் குளமும் உள்ளது. இக்கோயிலுக்கு தினசரி ஆறுகால பூசையும், பிரதி வெள்ளிக்கிழமை வாரவழிபாடும், இது தவிர பிரதி மாதத்தில் வரும் ஏகதின உற்சவங்களும் நடைபெற்று வருகிறது.

திரு. ஜி. துரைராஜ வன்னியர், திரு. எம். செல்லையப்பன்,
திரு. ஆர். கலியபெருமாள், திரு. கே. சீனுவாசன்,
அறங்காவலர்கள்.

பி. எஸ். இராமலிங்கம்,
அறங்காவலர் குழுத் தலைவர்.

# அருள்திரு கள்ளபிரான்சுவாமி திருக்கோயில்

**ஸ்ரீவைகுண்டம் :—: திருநெல்வேலி மாவட்டம்**

திருநெல்வேலி மாவட்டத்தில் பாயும் பொருநையாற்றின் இரு கரைகளிலும் அமைந்துள்ள நவ திருப்பதிகளிலும் முதல் திருப்பதியாக அமையப்பெற்ற ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவைகுண்டநாதன் நம்மாழ்வாரால் பாடல் சிறப்புப் பெற்று ''வைகுண்டத்தில் நின்று'' என்றநின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றான். தினசரி ஸ்ரீவைகுண்டநாதனுக்கு (மூலவர்) பால் திருமஞ்சனம் நடைபெறுவதால் ''பால்வண்ணநாதன்'' எனப் போற்றப்படுகின்ற இறைவன், கள்ளர் தலைவனுக்குத் திருவருள் புரிந்ததால், ''கள்ளபிரான்'' என்ற திருநாமம் பெற்று விளங்குகின்றான். வைணவர்களுக்குச் சிறப்பான மார்கழி வைகுண்ட ஏகாதசி (பகல்பத்து, இராப்பத்து) திருவிழாவும், தைத் தெப்பத் திருவிழாவும், சித்திரைப் பெருந்திருவிழாவும் (நம்மாழ்வாருடன், ஐந்து கருட சேவை) சிறப்பாக நடைபெற்று வருகிறது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வாலயத்தில் இராசகோபுரம், விமானங்கள், மதில் சுவர்கள் பழுதுபட்டிருப்பதைத் திருப்பணி செய்யும் வகைக்கு ரூ. 3 இலட்சம் செலவில், மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பேராசிரியர் திரு. அ. ஸ்ரீனிவாசராகவன், எம்.ஏ., அவர்கள் தலைமையில் திருப்பணிக் குழு அமைக்கப்பட்டுப் பணியாற்றி வரும் திருப்பணிக்கு மெய்யன்பர்கள் உதவி மிகவும் இன்றியமையாததாய் இருப்பதால், அவர்களின் பேருதவியை எதிர்பார்க்கிறோம். ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியுள்ள இறைவனைத் தரிசித்துப் பேரருள் பெற்றுய்ய வருகை தருமாறு பக்தர்கள் அனைவரையும் வரவேற்கிறோம்.

திரு எ. குமாரபலவேசம்,
அறங்காவலர் குழுத்தலைவர்.

திரு சா. சொக்கலிங்கம், பி.ஏ.,
நிர்வாக அதிகாரி.

திரு. எஸ். பி. ராமசாமி,
திரு. கே. பன்னிருகைவேல்,
அறங்காவலர்கள்.

### உய்யும்—ஆறு உபதேசம் :

பேரருளாளன் தன் குருவான திருக்கச்சி நம்பிகளிடம், பேசிக் களிக்கும் சமயம், அப்பெருமாளிடம் தன் விண்ணப்பங்களை வெளியிட்டு, ஆசி கோரும்படித் திருக்கச்சி நம்பிகளை வேண்டினார் இராமானுசர். (1) முன்பு, காட்டில், அபாயத்திலிருந்து இராமாநுசரைக் காப்பாற்றி ஆண்டான் அருளாளன்! (2) பிறகு, அத்வைதக் காட்டிலிருந்து காப்பாற்ற, யாதவப் பிரகாசர் உறவை நீக்கி, ஆளவந்தார் திருவடி சம்பந்தத்தை ஏற்படுத்தி ஆண்டான், வரதராசன்! (3) இராமாநுசர் வைணவ ஆசார்ய பீடத்தை அலங்கரிக்க இருக்கும் தருணம், அவரது திருவுள்ளத்தில் திரண்டு எழுந்த தீர்க்க தரிசன விண்ணப்பங்களை ஆமோதித்து, அவர் ஏற்கவிருக்கும் தலைமையையும் ஆசீர்வதித்து, ஆண்டருளினன் பேரருளாளன்.

இராமாநுசரது விண்ணப்பங்கள் பேரருளாளனால் ஆசீர்வதித்து அங்கீகரிக்கப்பட்டதும், அவை பேரருளாளன் கட்டளைகள் ஆயின! அருளாளரின் இக்கட்டளைகள் ஆறு; அவைகளைக் காண்போம்!

### 1. நாதன் நாரணனே :

முழு முதற் கடவுள் யார் என்பது, வேதத்தில் தெளிவாக நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆழ்வார்கள் பாடலில் திருமாலின் பரத்துவம் உறுதி செய்யப்பட்டது. நாராயணனே முழு முதற் கடவுள் என்பதை உலகம் அறியச் செய்ய வேண்டியது முதற் கடமையாய் அமைந்தது. 'நாமே பரத்துவம்' என்று அருளாளனும் அருளி, அதைப் பரப்புவதையே முதற் கட்டளையாக விடுத்தான்! இதனால் பொன்னரங்கமென்னில், மயலே பெருகும் இராமாநுசனுயத் திகழ்ந்தார்.

### 2. முழு உண்மை : முப்பிரிவே!

முழுமுதற் கடவுளான விஷ்ணுவை வழிபடும் சமயமே வைணவம். வைணவ தரிசனம் உலகை அசித்து (உயிரற்ற பொருள்), சித்து (உயிர் அல்லது ஆன்மா), ஈசுவரன் (கடவுள்) என்ற முப்பிரிவாகக் காண்கிறது. இம்மூன்று தத்துவங்களையும் ஒன்று என்று உரைப்பது தவறு. எனினும் சித்து, அசித்து, கூறுகள், ஈசுவரனுக்கு உடலாக அமைந்துள்ளன. சித்தும் அசித்தும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்திருப்பினும், தங்கள் தனித் தன்மையுடன்தான் இருக்கும். ஆன்மாவாகிய சித்து, ஈசுவரனோடு இரண்டறக் கலந்து விடுவதில்லை. அங்ஙனம், சித்தாகிய ஆன்மாவின் கட்டளைக்கு உட்பட்டு அசித்தாகிய உடல் இயங்கினாலும், உடலும் உயிரும் வெவ்வேறானவை; ஒன்றல்ல. இங்ஙனம் சித்து, அசித்து, ஈசுவரன் என்னும் தத்துவங்கள் வேறு வேறு என்றும், அசித்து, சித்து இவைகளை உடலாகக் கொண்டு அவைகளின் உயிர்போன்று இறைவன் திகழ்கின்றான் என்பதே விசிஷ்டாத்துவைத வைணவ தரிசனமாகும். இதுவே சரீர—சரீரி பாவமாகும். ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் துணை கொண்டு இவைகளை நிலைநாட்டியதே இராமாநுசரின் வாழ்க்கை விசேடமாகும். முழு உண்மையான இம்முப்பிரிவை நிலைநாட்ட வேண்டுமென்பது இரண்டாவது கட்டளையாய் அமைந்தது. இதனை,

''மன்னு பல்லுயிர்கட்கு இறையவன்
மாயன் என மொழிந்த
அன்பன் அனகன் இராமாநுசன்''

என்று போற்றுகிறார் அமுதனார்.

### 3. அடையும் வழி; அடைக்கலமே! :

உலகையும் உயிரையும் உடலாகக் கொண்டு இலகும் பரம்பொருளான நாராயணனை அடையும் வழியையே அடுத்தபடி மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பிரபத்தி அல்லது சரணாகதி மார்க்கமே சிறந்தது என்று முடிவுகட்டினார் இராமாநுசர். அப்படியே உபதேசிக்கலாம் என்று கட்டளையிட்டான் அருளாளனும். சரணாகதி மார்க்கத்தைப் போதித்துச் சாதித்தது என்ன என்பதை அறிவிக்கிறார் அமுதனார்.

''ஆனது செம்மை அறநெறி! பொய்ம்மை அறுசமயம்
போனது பொன்றி; இறந்தது வெங்கலி!''

என எக்களிக்கின்றார் அமுதனார்!

கீதோபதேசத்தில் கடைசியாகக் கண்ணன் வெளியிட்ட சுலபமான மார்க்கம் பிரபத்தி மார்க்கமே! இச் செழும் பொருளைத் தெளிவாக எடுத்துரைத்தார் இராமாநுசர். இதற்கு உருகிய அமுதனார் பாடுகிறார் :

''ஆரெனக்கு இன்றுநிகர் சொல்லில்?
மாயன் அன்று ஐவர்தெய்வத்
தேரினில் செப்பிய கீதையின்
செம்மைப் பொருள் தெரியப்
பாரினில் சொன்ன இராமாநுசனைப்
பணியும் நல்லோர்
சீரினில் சென்று பணிந்தது
என் ஆவியும் சிந்தையுமே!''

### 4. மரண காலத்தில் மறந்தாலும்; மாதவன் கைவிடானே! :

இவ்வண்ணமாக (1) திருமாலின் பரத்துவத்தை அறிந்து, (2) அவனுக்கு உடலான நாம் (3) அவனிட்ட வழக்காகச் சரணாகதி மார்க்கத்தைக் கடைப்பிடித்து (4) ஞான அநுஷ்டானங்களில் சிறந்த ஆசாரியனை அடைந்து ஒழுகினால், (5) வைகுந்தப் பேற்றை வாழ்க்கையின் முடிவில் அடைவது திண்ணம் என மார்பிலே கை வைத்திருக்கலாம் அன்றோ! வாழ்க்கையின் முடிவில் மரண அவஸ்தையில் உள்ள போதும் இறைவனைச் சரணாகதி அடையவேண்டுமென்ற அவசியம் இல்லை என்ற கருத்து வெண்ணெயைக் கடைந்து எடுத்தார், இராமாநுசர் வேத சாத்திரக் கடலிலே! மரணத் தசையில் இருக்கும்போது மனமும் நம் வசம் நில்லாது! இக்காரணத்தால் அந்திம ஸ்மிருதி அவசியம் என்று ஏற்பட்டால், இறைவனடி சேர்வது கைகூடாது. எனவே, ஞாபகம் தவறும் மரண காலத்திலும் எம்பெருமானை நினைத்தே மரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்க வேண்டியதில்லை என்று உறுதிப்படுத்தினார் இராமாநுசர். அமுதனார் இதனை அருள்கிறார்.

# அருள்திரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

## எட்டிக்குடி,
## நாகப்பட்டினம் வட்டம்,
## தஞ்சை மாவட்டம்.

*பரிவுற் றவருக் கருள்வைத் தருள்வித்*
*தகமுத் தமிழைப்—பகர்வோனே*
*பழனத் தொளிர்முத் தணியெட் டிக்குடிப்*
*பதியிற் குமரப் பெருமாளே*
*—அருணகிரிநாதர்.*

அலைகடல் கலையொலி எழுப்பிட, அமுதத் தமிழ்த்தாய் வாழ்த்திட, கதிரவன் சுடரொளி பரப்பி, கலைத்தாய் களிநடனம் பயின்றிட, படகுகள் அசைந்திட நாவாய்கள் நகர்ந்திட, இக்கரைச் சோழரெல்லாம் அக்கரைக்குச் சென்று கலைவளர்த்த காதையின் புராதனம் மிக்க நன்நாகர் வாழ்ந்த திருப்பட்டினமாம் நாகப்பட்டின வட்டத்துள், புராண இதிகாசப் பெருமை பெற்ற சைவத் திருக்கோயிலுள் ஒன்றாய்த் திகழ்வதே எட்டிக்குடி அருள்திரு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலாகும்.

கால ஏட்டில் முன்னோடு பெற்ற திருநாகப்பட்டினத்திலிருந்து தென்மேற்கேயும், ''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' எனப் பாடப்பெற்ற திருஆரூருக்குத் தென்கிழக்கேயும், திருத்துறைப்பூண்டிக்கு வடகிழக்கேயும் நடுநாயகமாய் இத்திருவிடம் அமைப்புற்றுள்ளது. இத்தலத்துக்கு வடக்கே திருக்கோளிலி (திருக்குவளை)யும் கிழக்கே திருவாய்மூரும் ஆகிய இருவிடங்கத் தலங்களையும் இருபுறத்தே இயற்கையாய் அமையப் பெற்றுள்ளமை, பெற்றிமை! பெற்றிமையே!!

இத்திருக்கோயில் பிற்காலச் சோழ மன்னரான முத்தரசன் என்பவரால் கருக் கோட்டம் அமைக்கப்பெற்று அம்மையப்பர் திருக்கோயில்களுக்கிடையில் பிற்காலத்தே எழுப்பப்பட்ட திருவிடமே ஆறுமுகர் உறைவிடம் என்பது. முன்னர் பதினெண் சித்தர்களுள் இத்தலத்து முக்தியடைந்த வான்மீகி என்ற சித்தர் வாழ்ந்து வந்ததாகவும், அச்சித்தர் பெருமானார் எட்டி மரத்தடியில் அம்மையப்பரை இலிங்க வடிவில் வன்னி, வில்வம் கொண்டு வழிபட்டு சித்தியடைந்துள்ளார் என்பதும் வரலாற்று வல்லுநர்கள் முடிபாகும். இந்தச் சித்தர் பெருமானார் புகலுடம்பைச் சித்தி சமாதி செய்து அதன்மீது ''வான்மீகி'' பெயரோடு தொடர்புடைய வன்னி மரமும், ''சித்தி விநாயகர்'' வான்மீகர் நினைவாக சித்தி விநாயகர் பெருமானும் எழுப்பப்பட்டுள்ளன. இத்தலத்து வரும் அன்பரனைவரும் முதலில் ''சித்திக்க'' வேண்டி சித்தி விநாயகப் பெருமானை வழிபடல் மிகவும் சாலவும் சரித்திர நோக்குக்குச் சான்று பகர்வனவாய் உள்ளது.

இத்திருக்கோயிலினுள் அம்மை, அப்பர் தனித் தனி திருக்கோயில் கொண்டு இலங்குகின்றனர். ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் முழுமதி நன்னாளில் ''நிறைமதி'' வெண்ணிலவு விழாக் கொண்டாடுவது சாலச் சிறப்புடையது. வைகாசியில் விசாகமும், கந்தர் சஷ்டி விழாவும், நவராத்திரி விழாவும், திருப்பள்ளியெழுச்சி விழாவும், திருக்கார்த்திகை விழாவும், இது தவிரத் திங்கள்தோறும் கார்த்திகை நாள் திருநாளாகவும் விழாவெடுக்கும் சிறப்பு வழக்காறுடையவை.

சித்திரைத் திங்கள் ''முழுமதி'' வெண்ணிலவு விழாவை அன்புப் பற்றால் பத்து நாட்கள் பெருவிழாவாகக் கொண்டாடுகிறோம். இவ்விழா நாட்களில் இயலிசையும் இன்னிசையும், நான்மறைகளும், தேவார திருப்புகழ்ப் பொழிவுகளும் யாண்டும் நடைபெறுவன. ஒன்பதாம் நாள் திரு. ஆறுமுகவேலர் திருத்தேர் ஏகி வீதியுலா வரும் காட்சி மாட்சிமையுடைத்து. சித்திரை முழுமதி வெண்ணிலவு (சித்திரா பருவ) நாளன்று எண்ணிய எண்ணியாங்கெய்திய எண்ணற்ற மெய்யன்பர்கள் பால் காவடி, பன்னீர் காவடி, இதர பல்வகைக் காவடிகள் செலுத்தி, தேங்காய் பழம் தாம்பூலம் கொண்டு வணங்கும் காட்சியைக் காணக் கண் கோடி வேண்டும்.

இத்திருக்கோயில் அருட்டிரு வள்ளல் முருகப் பெருமானாரை வேண்டிக் கொள்வோர் தங்கள் தங்கள் காணிக்கைகளை ''செயல் அலுவலர், அருள்திரு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், எட்டிக்குடி, எட்டிக்குடி (அஞ்சல்), நாகப்பட்டினம் வட்டம், தஞ்சை மாவட்டம்'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

| | | |
|---|---|---|
| இத்திருக்கோயில் தல வரலாறு | ... | ரூ. 0-50 |
| பிள்ளைத் தமிழ் (பெரியது) | ... | ரூ. 1-25 |
| பிள்ளைத் தமிழ் (சிறியது) | ... | ரூ. 0-15 |
| புகைப்படம் (திருமுருகன் திருவுரு) | ... | ரூ. 1-50 |
| பாஸ்போர்ட் திருவுருவப் படம் | ... | ரூ. 0-50 |

**மு. கணபதி,**
கண்காணிப்பாளர்.
(செயல் அலுவலர் பொறுப்பில்)

''கருத்தில்புகுந்து உள்ளில் கள்ளம்
கழற்றிக் கருதரிய
வருத்தத்தினுல் மிக வஞ்சித்து
நீ இந்த மண்ணகத்தே
திருத்தித் திருமகள் கேள்வனுக்கு
ஆக்கிய பின் என்நெஞ்சில்
பொருத்தப் படாது எம் இராமாநுச
மற்ருேர் பொய்ப் பொருளே!''

இதையும் ஏற்று ஆசீர்வதித்தான் அருளாளனும்.

**5. வாழ்வு முடிந்தால், வைகுந்தமே :**

வைகுந்தப் பதவி யடைவதற்காக இம் மண்ணுலகில் தனி முயற்சிகள் செய்ய வேண்டுவதில்லே. துவய மந்திர அநுசந்தானம் செய்து கொண்டு சரணுகதி மார்க்கத்தைக் கடைப் பிடித்து வாழ்ந்தால், சகல கர்மங்களும் இந்த சன்மத்திலேயே தொலேந்து போகும். அநேக சன்மங்கள் எடுத்து நாம் இழைத்த சகல பாபங்களின் பலன்களேயும் அநுபவித்து முடிக்க வேண்டுவதில்லே. இந்த வாழ்வின் முடிவிலேயே, சரணுகதி செய்தவனுக்கு வைகுந்த வாழ்வு தானுகவே வந்து எய்தும்.

சரணமாகும் தனதாள் அடைந்தார்க் கெல்லாம்
மரணமானுல் வைகுந்தம் கொடுக்கும்பிரான்
அரண் அமைந்த மதில் சூழ் திருக்கண்ணபுரத்
தரணியாளன் தனதன்பர்க்கு அன்பாகுமே!

என்பது நம்மாழ்வார், திருவாக்காகும். நம்மாழ்வாரின் திருவுள்ளத்தைப் போற்றி, உலகுக்கு இக்கருத்துக்களே வழங்கினுர் இராமாநுசர். அமுதனுர் இதனே விவரிக்கின்ருர்.

''கூறும் சமயங்கள் ஆறும் குலேயக் குவலயத்தே
மாறன் பணித்தமறை உணர்ந்தோனே, மதியிலியேன்
தேறும்படி என்மனம் புகுந்தானேத் திசையனேத்தும்
ஏறும் குணனே; இராமாநுசனே இறைஞ்சினமே!''

இடர் மிகுந்த வாழ்வின் முடிவில், சரணுகதி மார்க்கத்தால் இறைவனடி எய்துவது எளிது என்று இராமாநுசர் நிர்ணயம் செய்ததையும் இயம்புகிருர் அமுதனுர்.

''மயக்கும் இருவினே வல்லியில் பூண்டு, மதிமயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றிய என்னேத் துயர்
அகற்றி,
உயக்கொண்டு நல்கும் இராமாநுச!''

கர்மம் தொலேந்தால்தான் பேறு என்று பிறர் கூறுவது வைணவ தரிசனத்திற்கு ஒப்புதல் ஆகாது. பிரபத்தி மார்க்கத்தில் நிற்பவனுக்குக் கர்மமே இல்லே. சஞ்சித, பிராரப்த கர்மங்கள் கூடத் தொலேந்தே போகும். வாழ்வின் முடிவில் வைகுந்தப் பெரு நாடு அருளப்படும். இதற்காகத் தனி முயற்சிகள் வேண்டா.

ஆன்மாக்களுக்கு மிக உபகாரமான இப் பெருங் கொள்கையை விளக்கியருளினுர் இராமாநுசர். எம்பெருமானது கருணேயைவிட மிகவும் இவரது கருணே அதிகமான தாகையால், இராமாநுசர் எம்பெருமானுர் என்று போற்றப் பட்டார். இப்படியாக வேதப் பொருள்களே விரித்துரைத்த இராமாநுசர் பெருமையை அமுதனுர் போற்றுகிருர்.

''உண்ணின்று உயிர்களுக்கு உற்றனவே செய்து,
அவர்க்கு உயவே
பண்ணின் பரனும் பரிவிலனும்படி, பல்லுயிர்க்கும்
விண்ணின் தலேநின்று வீடளிப்பான் எம் இராமா
நுசன்
மண்ணின் தலத்து உதித்து உய்மறைநாலும் வளர்த்
தனனே!''

'மரணமானுல் வைகுந்தம்' என்னும் அரிய கொள்கையை ஆசீர்வதித்து அருளாளனும் அதனேயும் பரப்பக் கட்டளேயிட்டருளினுன். இராமாநுசர் இந்நிலவுலகப் பேறுகளேயும், வைகுந்த வான் உலகின் பேறுகளேயும் நமக்கு ஒருங்கே அளிக்கும் அதிகாரம் பெற்று, அதனுல் உடையவர் ஆனுர்!

**6. குருவை அடைந்தால்; கூடும் பேறு :**

வேதம் வல்லார்களேக் கொண்டு விண்ணேர் பெருமான் திருப்பாதம் பணிவது மிக்க பலன் தரும்.

''ஞானம் அனுட்டானம் இவை நன்ருகவே உடையன்
ஆன குருவை அடைந்தக்கால்—மாநிலத்தீர்!
தேனுர் கமலத் திருமாமகள் கொழுநன்
தானே வைகுந்தம் தரும்!''

**பெருமை மிகு பெரிய நம்பிகள் :**

இப்பெருங் கொள்கைகளே அநுட்டிக்கவும் உபதேசிக்கவும் தீர்மானித்த இராமாநுசர், அதற்கு உதவக் கூடிய ஆசாரியனேயும், நாடுகின்ருர். அது சமயம் ஆளவந்தார் பரமபதித்துவிட்டார். அவருடைய தூதுவராகக் கச்சிக்கு இராமாநுசரிடம் எழுந்தருளியவர் பெரிய நம்பிகளே! ஆளவந்தார் இயற்றிய சுலோகங்களே ஓதி, இராமாநுசரின் உள்ளத்தைக் கவர்ந்தவர் பெரிய நம்பிகள்! மதுராந்தகம் ஏரிக்கரையில் இராமாநுசருக்குத் திருவிலச்சினே செய்தருளியவரும் பெரிய நம்பிகளே! எனவே, பெரிய நம்பிகளே ஆசார்யனுகவரித்தது இராமாநுசரின் திருவுள்ளம். அவ்விதமே அங்கீகரித்து ஆசி புரிந்தான் அருளாளனும்.

'உந்து மதகளிற்றன்' பாசுரத்தைச் சேவித்த முடிவில், பெரிய நம்பிகளின் திருமகளான அத்துழாயைக் கண்ட இராமாநுசர், அத்துழாயை நப்பின்னேப் பிராட்டியே எனக் கொண்டு அடியில் வீழ்ந்து வணங்கினுர். இந்த உண்மையைப் பெரிய நம்பிகளே விளக்க முடிந்தது.

இராமாநுசரின் சீடரான, கூரத்தாழ்வானும், ஆசாரியனுன பெரிய நம்பிகளும், சோழ ராஜ சபைக்கு இராமாநுசருக்குப் பதிலாக எழுந்தருளித் தம் கண்களேத் தம் கைகளினுலேயேபெயர்த்து இழந்தனர். சிவபரத்துவத்தை ஒப்புக்கொள்ள மறுத்து, அந்தக் கண்ணின்புண் காரணமாகவே வயோதிகரான பெரிய நம்பிகள் பரம பதம் அடைந்தார். தம் சீடருக்காகக் கண்களேயும், அதனுல் உயிரையுமே பறிகொடுத்த ஆசாரியன் என்ற பெருமை, பெரிய நம்பிகளுக்கே உரியது. அருளாளனின் அருளுடன் இராமாநுசரைச் சீடராகப் பெறும் பெருமையும் பெரிய நம்பிகளுக்குக் கிடைத்தது!

# அருள்திரு உலகமுத்தாரம்மன் திருக்கோயில்

**உடன்குடி, திருச்செந்தூர் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.**

திருச்செந்தூரில் இருந்து 10 மைல் தொலைவில் உள்ள உடன்குடியில் எழுந்தருளியிருந்து, அருள்மழை பொழிந்து கருணை நல்கி வரும் அன்னையின் திருத்தலம்.

இத்திருக்கோயிலில் திருப்பணி செய்து குடமுழுக்கு விழாவும் நடத்த வேண்டுமென்று கருதி, ''திருப்பணிக்குழு'' அமைத்துச் செயல்பட்டு வருகிறது. இப்புனிதப் பணி நிறைவேறப் பக்தப் பெருமக்கள் தாராளமாக நன்கொடை வழங்கி அன்னையின் பேரருளுக்குப் பாத்திரராகுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

**எஸ். துரைராஜ்,**
அறங்காவலர், திருப்பணிக் குழுச் செயலாளர்

## அருள்திரு பாஸ்கரேசுவரசுவாமி திருக்கோயில்

பரிதியப்பர்கோயில் †† தஞ்சை மாவட்டம்

வளமும் வாழ்வும் வற்றுது விளங்கிவரும் வண்டமிழ்ச் சோழ நாட்டில் சிறப்புற்று விளங்கும் முல்லைவள நாட்டு இறை இல்லங்களில் பழம்பதியாக விளங்குவது திருப்பரிதிநியமம் என்னும் பரிதியப்பர்கோயில் ஆகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனர் ஆகிய மூவராலும் இத்தலத்தைப்பற்றிப் புகழ்ந்து தேவாரம் பாடப்பட்டுள்ளது.

இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் பாஸ்கரேசுவரர் (சுயம்புமூர்த்தி). இதனை மெய்ப்பிக்கும் வகையில் 1926-ஆம் ஆண்டு ஜனவரி 9-ஆம் நாள் (குரோதன ஆண்டு மார்கழித் திங்கள் 26-ஆம் நாள்) மாலை பூசையில் அபிஷேகச் செம்பு மோதப் பெற்றுக் குருதி வெளியானது கண்டு சுயம்புமூர்த்தி என்பதை மெய்ப்பிக்கின்றது.

இத்திருக்கோயிலிலுள்ள முருகப் பெருமான் சுப்பிரமணியர் என அழைக்கப்படுகிறார். இத்திருக்கோயிலைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான கிராம மக்களுக்கு வேண்டிய வரமளித்துக் கொண்டு, கலியுக வரதனைக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார். மாதாந்திர கிருத்திகைக்கும் மற்றும் ஆடிமாதத்துக் கிருத்திகைக்கும், பெருவாரியானபக்தர்கள் தரிசனத்திற்காகவும், பங்குனி உத்திரப் பெருவிழாவில் ஆயிரக் கணக்கான காவடிகள் மூலம் பால் அபிஷேகமும் செய்யப்படுகின்றன. தற்பொழுது திருக்கோயில் முழுவதும் திருப்பணி செய்யப்பட்டு வருகின்றது. இந்த ஆலயத் திருப்பணிக்குத் தாராளமாக நிதி வழங்கி உதவிடுமாறு அன்பர்கள் வேண்டப்படுகிறார்கள். திருப்பணிக்கு உதவி அனுப்புபவர்கள் ''செயல் அலுவலர், அருள்மிகு பாஸ்கரேசுவர சுவாமி திருக்கோயில், பரிதியப்பர் கோயில் அஞ்சல், ஒரத்தநாடு வட்டம், தஞ்சை மாவட்டம்'' என்ற முகவரிக்குத் தொகைகளை அனுப்பி, ஆண்டவனின் அருளுக்குப் பாத்திரராகுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

திரு. சா. பன்னீர் செல்வம்,
நிர்வாக அறங்காவலர்.

மா. சுந்தரராஜ்,
செயல் அலுவலர்.

திரு. சா. கிருஷ்ணமூர்த்தி, திரு. த. வைத்தியலிங்கம், திரு. க. வீ. தங்கவேலன்.
அறங்காவலர்கள்.

**திருக்கச்சி நம்பிகளும் தெளிந்தார் :**

ஆசாரியன் துணைகொண்டே ஆண்டவனை வழிபடல் நலம் என்பது சீரிய வைணவர் கொள்கை. இதுபற்றி ருசியான ஒரு சேதியும் உள்ளது. இராமாநுசருக்கு மோட்சம் உண்டா? என்று வினவ, அருளாளரும், 'அவர் ஆசாரியனை அடுத்துள்ளதால் உண்டு' என்றாராம். தமக்கு மோட்சம் உண்டா? எனத் திருக்கச்சி நம்பிகள் வினவவும், அருளாளர், நம்பிகள் இது வரை ஆசாரியனைத் துணைக்கொள்ளாததால் அவருக்கு மோட்சம் இல்லை என்றே கூறிவிட்டாராம். பிறகு திருக்கச்சி நம்பிகளும் ஆசாரியனை அடைந்து ஒழுகியதாக வரலாறு கூறுகிறது.

**வடிவழகிய நம்பிதாசர் வடித்த பாக்கள் :**

பேரருளாளரின் இப்பெருங் கட்டளைகளை வடிவழகிய நம்பிதாசர் தமிழில் இரு பாடல்கள் வடிவமாக அமைத்துள்ளதையும் காணலாம்.

''செப்புகின்ற பரதத்துவம் யானேஎனச்
  செப்புதி; வேறு
ஒப்பிலாதாய்! தரிசனமும் பேதம்
  என்றே உரைத்திடுக!
ஒப்பில்லாத உபாயமதும்
  பிரபத்தி என்றே சாற்றிடுக!
அப்ப! புகல்க! இவையன்றி
  நினைவும் வேண்டா அந்திமத்தில்''.

''இந்தச் சரீர அவசானம்
  தன்னில் இசையும் மோட்சமது!
அந்தம் இல்லாக் குணத்தினனுக்கு
  ஆசா ரியனும் பெரியநம்பி!
சிந்தை யுள்ளே இவைஎல்லாம்
  சிந்தித் திருந்தான் இனையாழ்வான்!
முந்தி இவைநீ மொழிஎன்று
  மொழிந்த ருள்வான் அருளாளன்''

கச்சியம்பதி நாதன், நம்பிகள் மூலம் அருளிய இக்கட்டளைகள், பேரருளாளனது திருவாக்கினாலேயே வடமொழிச் சுலோகமாக அமைந்துள்ளது உலகப் பிரசித்தம்.

ஆகையால் ஞானக் கடலான இராமாநுசர் வைணவ சித்தாந்தத்தில் சந்தேகம் தெளியாமல், அச்சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டார் என்பது பொருந்தாது. நம் தரிசனக் கொள்கைகள் சந்தேகத்துக்கிடமானவை அல்லவே.

**பாஷ்யகாரா—பகவத் பரிமாறலுக்குப் பல்லியும் சாட்சி :**

நாம் ஒன்றை நினைக்கையில், பல்லியும் கொட்டினால், நாம் நினைத்தது சரி என்று நிச்சயம் செய்து கொள்ளுகின்றோம்! இராமாநுசர் தம் திருவுள்ளத்தில் நினைத்தவைகளையே, பேரருளாளனும் ஆசீர்வதித்து ஆமோதித்தான் என்பதைக் காட்டவே ஒரு நினைவுக் குறியும் எழுந்துள்ளது. அதாவது திருக்கச்சியில் அத்திகிரி என்னும் திருமலையில் அமைந்துள்ள வையமாளிகைத் திருச்சுற்றில் வடகிழக்கு மூலையில் உள்ள கச்சிவாய்த்தான் மண்டபத்தில் அருளாளர் இவ்வார்த்தைகளை அருளினாராம். இதைக் குறிக்க இம்மண்டபத்தை அடுத்து மேல் தள வரிசையில் ''வைய மாளிகைப் பல்லி'' சிலை வடிவில் அமைக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம்.

இராமாநுசர் முதலில் நினைந்தவைகளையே அருளாளப் பெருமாள் ஆமோதித்தார் என்பதை மேற்கூறிய பாடலில் உள்ள பின் இரண்டு அடிகளும் வலியுறுத்துகின்றன.

**அருளாளர் ஆறு வார்த்தைகளே அரண் :**

பேரருளாளனின் பெருங்கருணையால் வெளிப்பட்ட இந்த ஆறு கட்டளைகள்தாம் வைணவ தரிசனத்தின் சாரம். இந்த ஆறு கட்டளைகளான வைணவ தரிசன சாரத்தை இராமாநுசருக்கு அளித்த வரதனும், அருளாளனுமான இறைவன், அவர் மூலமாக உலகுக்கெல்லாம் அருளி, வரதராசனும், பேர் அருளாளனும் ஆனான்! அத்தியூரான் கழலிணை அடைந்த இராமாநுசர் கழலிணைகளை நாம் பணிந்தால், பலகாலம் பல பிறவிகளாக அடைந்த கஷ்டங்கள் நீங்கிப் பெரும் பேற்றைப் பெறலாம் என்று உரைக்கின்றார் அமுதனார்!

''ஆண்டுகள் நாள் திங்களாய் நிகழ்காலம்
  எல்லாம் மனமே
ஈண்டு பல் யோனிகள் தோறு உழல்வோம்!
  இன்றுஓர் எண்ணின்றியே
காண்தகு தோள் அண்ணல் தென் அத்தியூரர்
  கழல் இணைக்கீழ்
பூண்ட அன்பாளன்; இராமாநுசனைப்
  பொருந்தினமே!''

**எங்கள் கதியே இராமநுச முனியே!**

அருளாளனின் இந்த ஆறு கட்டளைகளையும், ஆசாரியனை இராமாநுசர் கட்டளைகள் என்றே கொள்ள வேண்டும். அவருடைய பிரார்த்தனையினால் அருளாளனால் உறுதி செய்யப்பட்டு, வெளிப்பட்டவையன்றோ இந்த ஆறு வார்த்தைகள்! இப்படியாக இராமாநுசர் உண்மை நல் ஞானம் உரைத்த மகா உபகாரத்தைப் போற்றுகிறார் அமுதனார்!

வண்மையினாலும், தன் மாதகவாலும்,
  மதிபுரையும்
தண்மையி னாலும், இத்தரணி யோர்கட்குத்
  தான் சரணாய்
உண்மைநல் ஞானம் உரைத்த
  இராமா நுசனை, உன்னும்
திண்மையல்லால் எனக்கில்லை, மற்றோர்
  நிலை தேர்ந்திடிலே!

இராமாநுசரது பெருஞ் சேவையால் ஏற்பட்ட பலன்களை எல்லாம் விவரித்து இன்புறுகிறார் அமுதனார்!

நாட்டிய நீசச் சமயங்கள்
  மாண்டன! நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது!
  தென்குருகை வள்ளல்
வாட்டமிலா வண்தமிழ் மறை
  வாழ்ந்தது! மண்உலகில்
ஈட்டிய சீலத்து இராமாநுசன்
  தன் இயல்வு கண்டே!

இந்தக் கட்டளைகள் ஆறையும் கடைப்பிடித்து, வாழ்வதே வைணவர்களின் பெருங் கடமையாகும்.

*

## அருள்திரு கோதண்டராமசுவாமி ஆலயம்

**வடுவூர் ‡‡ மன்னார்குடி வட்டம் ‡‡ தஞ்சை மாவட்டம்**

இத்தலம் தஞ்சை—மன்னார்குடி பேருந்துச் சாலையில், தஞ்சையிலிருந்து கிழக்கே 22 கி.மீ. தொலைவிலுள்ளது. இத்தலத்திற்கு வகுளாரண்யம், தட்சிண அயோத்தி, பாஸ்கர க்ஷேத்திரம் என்ற பெயர்களும் வழங்கி வருகின்றன. ஸ்தலவிருட்சம் ''வகுள மரம்''. பல மாகாணங்களிலிருந்தும், பக்தர்கள் தரிசித்து அவரவர்கள் கோரிக்கைகள் பூர்த்தியாகி, பல காணிக்கைகளைச் செலுத்தி வருகின்றனர். இது ஒரு பிரார்த்தனைத் தலமாகும்.

இப் பெருமை வாய்ந்த திருக்கோயிலில் கல்யாண மண்டபம், சேவார்த்திகள் தங்கும் விடுதி, தேவஸ்தான அலுவலகம் ஆகிய திருப்பணி வேலைகள் செய்வதற்குச் சுமார் 1,25,000-க்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆலயத்திற்கு வருமானம் மிகக் குறைவாக உள்ளதாலும், நன்கொடைகள் மூலமாகவே திருப்பணிகளைச் செய்ய வேண்டியுள்ளதாலும், அன்பர்கள் அனைவரும் வடுவூர் வடிவழகனைத் தரிசித்து, திருப்பணிக்குப் பொருளுதவி செய்ய வேண்டுகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி, ''காரியதரிசி மற்றும் பொக்கிஷதார், அருள்மிகு கோதண்டராமசுவாமி ஆலயத் திருப்பணிக் கமிட்டி, வடுவூர், மன்னார்குடி வட்டம், தஞ்சை மாவட்டம்''.

158600

திரு. வி. என். சேவு, அறங்காவலர் குழுத்தலைவர்.

எஸ். ஆர். சீனிவாசன், செயல் அலுவலர்.

திரு. இரா. சாமிநாதன், திரு. மு. மாசிலாமணி, திரு. பி. எஸ். சண்முகம்
அறங்காவலர்கள்.

## அருள்திரு சுவாமி சிதம்பரேசுவரர் வகையரு திருக்கோயில்

**செட்டியாபத்து, திருச்செந்தூர் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.**

''திருமணி நாவில் வைத்தால் தீவினை யணுகா தோடும்
திருமணி சிரசில் வைத்தால் சிவபக்தி கடாட்சமுண்டாம்''
—திருமணி மாலை.

நெல்லை மாவட்டத்தில், ஐந்து வீட்டு சுவாமி கோயில் என்று புகழ்பெற்ற பிரார்த்தனைத் தலம்.

1. அருள்திரு பெரியசுவாமி கோயில், 2. அருள்திரு பயணப் பெருமாள் கோயில், 3. அருள்திரு ஆத்திசுவாமி கோயில், 4. அருள்திரு திருப்புளி ஆழ்வார் கோயில், 5. அருள்திரு அனந்தம்மாள் கோயில், 6. அருள்தரும் பெரிய பிராட்டி அம்பாள் கோயில்.

வருடம்தோறும், சித்திரைத் திங்களில் 18ஆம் நாள் மேக்கட்டி பூஜையுடன் தொடங்கப்பெறும் திருவிழா மிகவும் தலையாயது. இப்பெரும் திருவிழாவிற்கு தமிழக மெங்கணுமிருந்தும் பக்தர்கள் கூட்டம் திரண்டு வந்து பிரார்த்தனை செலுத்தும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. திருக்கார்த்திகைத் திருவிழாவும், தைத்திங்கள் 5ஆம் நாள் தொடங்கும் தைத் திருவிழாவும் குறிப்பிடத்தக்க இதர முக்கிய திருவிழாக்கள். தரிசன காலம் : காலை 7 முதல் 8-30 வரை; மாலை 4-30 முதல் 7-00 வரை.

இத்திருத்தலம் திருச்செந்தூரிலிருந்து மேற்கே 11 மைல் தொலைவில் உள்ளது. மெய்யன்பர்கள் இத்திருக்கோயிலுக்கு வருகை தந்து, ஐந்து வீட்டு சுவாமி அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டி, அனைவரையும் வரவேற்கிறோம்.

பொ. இராமநாத ஆதித்தன், அறங்காவலர் குழுத் தலைவர்.

க. சு. பொன்னுசாமி, செயல் அலுவலர்.

மு. தங்கராஜ்,
ரெ. ரெங்கபாண்டியன்,
நா. ஆறுமுக பழநாடார்,
அறங்காவலர்கள்.



சேலம் அருள்திரு சுகவனேசுவரர் திருக்கோயிலில் 29-12-74ஆம் நாள் நடைபெற்ற ஆருத்ரா தரிசனத்தின்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் எம்பெருமான் நடராசரை வழிபடும் காட்சி.

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.